YARL OSAI
# யாழ் ஓசை
வார இதழ்
டிச.24-30
ஓசை : 01 நாதம் : 08 வெள்ளிக்கிழமை 24.12.2010 வார இதழ் விலை : ரூபா 15.00

# எமது இனத்தின் தனித்துவம்-பண்பாட்டை இழக்கச்செய்ய முனைப்பு

**எமது சமூகத்தில் உள்ளவர்களும் இதற்கு துணைபோவது பெரும் வேதனை அளிக்கிறது என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை**




எமது கலாசார பண்பாட்டு விழுமியங்களை சீர் குலைப்பதன் மூலம் எமது இனத்தின் தனித்துவங்களையும் பண்பாட்டின் ஆணி வேரையும் இல்லாதொழிப்பதற்கு அதிகார வர்க்கங்கள் முனைப்பு காட்டி வருகின்றன. இதற்கு எமது சமூகத்தில் உள்ள வர்களும் துணைபோவது எமக்கு பெரும் வேதனை அளிக்கிறது. என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, உலகில் உள்ள இனங்களில் தமிழ் இனத்திற்கு ஓர் நீண்ட வரலாற்று தொடர்ச் சியான தனித்துவமான வரலாறு உண்டு. ஏனெனில் தமிழ் இனம் உலகின் (6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் பற்றிய கேள்விக்கு ராகுல் பதில் கூற மறுப்பு

சென்னை,

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரான ராகுல் காந்தி கடந்த புதன்கிழமை காங்கிரஸ் நிர்வாகிகளை சந்திப்பதற்காக இரண்டு நாள் பயணமாக தமிழகம் வந்த சமயம் அவரிடம் புலிகளின் தலைவர் பிரபாகரன் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் பதில் கூற மறுத்துவிட்டார். (6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களைப் புறக்கணிக்கும் போக்கால் இந்தியாவின் நட்பை இழக்கும் ஆபத்து

### ஐ.தே.க. எச்சரிக்கை

(ப.பன்னீர்ச் செல்வம்)

தமிழ் மக்களை புறக்கணிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் இந்தியாவின் நட்புறவை இழக்க வேண்டிய ஆபத்தான நிலைமை தோன்றியுள்ளது என ஐ.தே.க. எச்சரித்துள்ளது.

அரசாங்கத்தில் அமைச்சுப் பதவி வகிக்கும் விமல்வீரவன்ச சார்ந்த முன்னணியே வெளிநாட்டமைச்சை விமர்சிக்கும் முரண்பாடான நிலைமை தோன்றியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற (6 ஆம் பக்கம் பார்க்க)

## 50 ஆயிரம் வீட்டுத் திட்டப் பணிகளில் குழறுபடி உண்மையைக் கண்டறிய இந்தியாவுடன் பேச்சு

### த.தே. கூ. தீர்மானம் என்கிறார் செயலாளர் மாவை

(ஜே. ஜி. ஸ்டீபன்)

வன்னிப் போரினால் இடம்பெயர்ந்த மக்களுக்கென 50 ஆயிரம் வீடுகள் என்ற இந்தியாவின் செயற்றிட்டத்தில் நிலவி வருகின்ற குழறுபடிகள் தொடர்பிலான உண்மைத் தன்மையை அறிவதற்கு இந்திய மத்திய அரசுடன் பேச்சு நடத்துவதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்திருப்பதாக அதன் செயலாளரும் யாழ். மாவட்ட எம்.பி.யுமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

இந்திய மத்திய அரசாங்கத்தின் அனுசரணையில் வன்னிப் போரினால் இடம் பெயர்ந்தவர்களுக்கென 50 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அங்கு (6 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் தகவல்கள் அடங்கிய இறுவட்டை வீசிச் செல்லும் நபர்கள்

(எம்.நேசமணி)

யாழ்.குடாநாட்டில் புலிகளின் பல்வேறு தகவல்கள் அடங்கிய இறுவட்டுக்களை இனந்தெரியாத நபர்கள் சிலர், பொதுமக்கள் கூடியிருக்கும் பகுதிகளில் வீசிச்செல்கின்றனர் என தகவல்கள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜயக்கொடியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, இதுவரையும் அவ்வாறானதொரு சம்பவம் தொடர்பில் தமக்கு எவ்விதமுறைப்பாடுகளும் கிடைக்கவில்லை என்றும் அவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளை எவராவது முன்னெடுப்பார்களாயின் அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் கடந்த சிலநாட்களாகவே பல்வேறு பகுதிகளில் இளைஞர்கள், பொதுமக்கள் கூடியிருக்கும் இடங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்ற இடங்களில் மோட்டார் சைக்கிளில் வரும் இரண்டு இனந்தெரியாதநபர்கள் புலிகளின் பல்வேறு தகவல்கள் அடங்கிய இறுவட்டுக்களை வீசிச்செல்கின்றனர் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

# யாழ்.மணிக்கூட்டு வீதியில் நேற்று கைக்குண்டு மீட்பு

வண்ணார்பண்ணை,

யாழ்.நகர் மணிக்கூட்டு வீதியில் நேற்று முன்தினம் படையினரால் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

யாழ். மணிக்கூட்டு வீதி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள நீண்டகாலமாக கைவிடப்பட்டிருந்த கட்டிடப்பகுதியில் இக்கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

யுத்தகாலத்தில் இக் கட்டிடம் கடும் சேதத்திற்குள்ளாகியிருந்த நிலையில் இக் கட்டிடம் முற்றாக அகற்றப்பட்டு புதிய தாக கட்டிடப்பணிகள் ஆரம்பிக்கப் படவுள்ள நிலையில் கட்டிட இடிபாடுகளை அகற்றும் பணியாளர்களால் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டு பொலிஸாருக்கு உடன் தகவல் வழங்கப்பட்டது. இதனையடுத்து வெடிபொருட்களை அகற்றும் விசேட படையினருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து நேற்று முன்தினம் மதியம் 11.45 மணியளவில் கைக்குண்டு மீட்கப்பட்டது.

# ஐ.நா.நிபுணர் குழுவினர் இலங்கை மண்ணில் காலடியெடுத்து வைத்தால் நாடுதிரும்ப மாட்டார்கள்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர

(லியோ நிரோ தர்ஷன்)

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவினர் இலங்கை மண்ணில் காலடியெடுத்து வைக்கக் கூடாது. மீறி வைத்தால் அவர்கள் நாடு திரும்பமாட்டார்கள் என எச்சரித்துள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் பான் கீ மூனுக்கு எதிராக தீர்க்கமான முடிவுகளை எடுத்து தொடர் போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாகவும் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்ததாவது.

இலங்கையில் போர்க் குற்றங்கள் எதுவும் நடைபெறவில்லை. யுத்தத்தின் போது புலி பயங்கரவாதிகளே கொல்லப்பட்டனர் தற்போது உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து சகல இன மக்களும் மிகவும் சமாதானத்துடன் ஒரு அரசாங்கத்தின் கீழ் வாழ்கின்றனர். இவ்வாறான சூழ்நிலையில் நடைபெறாத சம்பவங்களுக்கு விசாரணைக்குழு அமைத்து அனாவசியமான பிரச்சினைகளை தோற்றுவிக்க ஐ.நா. முற்படுகின்றது.

பான் கீ மூனின் நிபுணர் குழு எக்காரணம் கொண்டும் இலங்கைக்கு வரக்கூடாது. அவர்களது வருகையைத் தடுத்து நிறுத்த போராட்டங்களை முன்னெடுத்து இந்த நாட்டின் தேசப்பற்றுள்ள மக்களை தொடரணிப் படுத்துவோம். இது தொடர்பாக பல முக்கிய தீர்மானங்களும் அறிவிப்புக்களும் இன்று வெளியிடப்படும்.

இப்பிரச்சினை தொடர்பில் அரசாங்கம் அவதானத்துடன் செயற்பட வேண்டும். ஐ.நா.குழு இலங்கை வருவது எமக்கு உதவி ஒத்தாசைகள் வழங்க அல்ல எமது இராணுவத்தை பொய்க் குற்றச்சாட்டுகளை கூறி சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் தூக்கிலிடப்படுவதற்கே என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். உள்நாட்டில் பல சூத்திரதாரிகள் நாட்டுக்கெதிரான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். அவர்களை காலதாமதமின்றி சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும்.

புலிகளின் தலைமைத்துவங்களை பாதுகாக்க முடியாமல் போன ஐ.நா.உள்ளிட்ட மேற்குலக நாடுகள் தற்போது ஏதோ ஒரு வகையில் இலங்கையை சிறைப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. இதனை தோல்வியடைய செய்ய வேண்டும். எனவே பான் கீ மூனின் நிபுணர் குழு இலங்கைக்கு வர அனுமதிக்கக் கூடாது.

# கிணற்றில் தவறி விழுந்து ஒரு வயதுக் குழந்தை மரணம்

## கிளிநொச்சியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்மேலதிக நிருபர்)

கிளிநொச்சி பொன்னகரில் ஒரு வயது நிரம்பிய பெண் குழந்தை ஒன்று பாதுகாப்பில்லாத கிணற்றினுள் தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் கிருஷ்ணமூர்த்தி பிரசாங்கி என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது. மரண விசாரணையை கிளிநொச்சி திடீர் மரணவிசாரணை அதிகாரி டாக்டர் கே. திருலோகமூர்த்தி கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைத்து மேற்கொண்டார்.

மரணமான குழந்தை பிரசாங்கியின் முதலாவது பிறந்ததினம் கடந்த செவ்வாய்க்கிழமை வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டதென தாயார் சத்திய சீலா மிகக் கவலையோடு தெரிவித்தார்.

# வவுனியாவில் பாதுகாப்பை உறுதிசெய்ய பொதுமக்களின் உதவியைக்கோருகின்றார் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி

செட்டிக்குளம்,

வவுனியாவில் பொது மக்களின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் உரிய பாதுகாப்பை வழங்க பொது மக்கள் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கோரியுள்ளார்.

இது சம்பந்தமாக பொலிஸ் அதிகாரியினால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

வீட்டில் ஒருவரும் இல்லாதபோது வீட்டினைப் பூட்டி சாவியை எடுத்துச்செல்லுங்கள். சாவியை ஒளித்து வைத்துவிட்டுச் செல்லவேண்டாம். யாருக்கும் சாவி தேவையெனில் பிரதி சாவியை வேண்டப்படுபவரிடம் கொடுத்து வையுங்கள்.

வீட்டைப் பூட்டிச் செல்லும்போது அயலவருக்குச் சொல்லிச்செல்லவும்

தங்க நகைப்பொருட்களை அணியாமல் பிரதியீடாக கவரிங் நகைகளை அணிந்து செல்லுங்கள். நகைகளைப் பாதுகாப்பாக வங்கிப் பெட்டகங்களில் வையுங்கள்.

பருவமடைந்த பெண்களைப் பாதுகாவலருடன் வெளியே அனுப்புங்கள்.

பகல் நேரத்தில் தனியாக இருக்கும்போது கதவுகளைப் பூட்டிவையுங்கள்.

இரவுவேளைகளில் உங்களது இல்லத்திற்கு பொலிஸார், இராணுவம் போன்றோரின் உடையுடன் வந்தால் அடையாள அட்டையைக் கேளுங்கள்.

அவசரத் தேவைகளுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் 024-2222228, உதவி பொலிஸ் அத்தியட்சகர் -024-2222400, தலைமைப்பீட பொலிஸ் பொறுப்பதிகாரி 024 -2222226, பொலிஸ் அவசர தேவை 119.

# உலக வங்கியின் வீட்டுத்திட்டத்தில் அராலியில் 11 குடும்பங்கள் புறக்கணிப்பு

(வண்ணார்பண்ணை)

யாழ். மாவட்டத்தில் உலகவங்கியால் மேற்கொள்ளப்பட்டு வரும் வீட்டுத்திட்டத்தில் வட்டுக்கோட்டை அராலிப் பகுதியில் 70 வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன. இந்த வீட்டுத் திட்டத்தில் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 11 குடும்பங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலக வங்கி வீட்டுத் திட்டத்தின் தெரிவில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாக தெரிவித்து யாழ். அரசாங்க அதிபருக்கு பாதிக்கப்பட்ட கிராமத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் சங்கம் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட வட்டுக்கோட்டை அராலி மேற்கு கோட்டைக்காடு முத்தமிழ் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் இவ் மகஜரை படங்களுடன் இணைத்து அரசாங்க அதிபருக்கும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராஜா ஆகியோருக்கும் அனுப்பிவைத்துள்ளது. அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குட்பட்ட கிராமத்திற்கு 70 வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட ஓலைக்குடிசையில் வசித்துவருகின்ற 11 குடும்பங்கள் வீடு கட்டுவதற்கான உதவிகள் வழங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளன. மாறாக நல்ல நிலையில் வசிக்கக்கூடிய வீடுகளை உடையவர்களுக்கும் தொழில்நுட்பக் கல்லூரியில் வேலைசெய்பவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் இவ் வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, இக்கிராமத்திற்கு தங்கள் அதிகாரிகளை அனுப்பி பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வேண்டும் என கேட்டுக்கொள்ளுகிறோம். - இவ்வாறு முத்தமிழ் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கிலீக்ஸ் தொடர்பில் அமெரிக்கா புது திட்டம்




'விக்கிலீக்ஸ்' சமீபத்தில் வெளியிட்ட ரகசிய ஆவண ங்களால் ஏற்பட்டுள்ள பாதிப்பை அறிய, சிறப்புப் படை ஒன்றை அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ. அமைத்துள்ளது. 'விக்கிலீக்ஸ்' வெளியிட்ட அமெரிக்க வெளியு றவு ரகசிய ஆவணங்களால், அமெரிக்க உளவுத்துறையின் வெளியுறவுகள் மற்றும் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருக்கிறதா என்று கண்டறிய, 'விக்கிலீக்ஸ் சிறப்புப்படை' என்ற பெயருடன் ஒரு சிறப்புப் படையை சி.ஐ.ஏ. அமைத்துள் ளது. இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் பி.ஜே. க்ரவுலி, பிற நாடுகளுடனான அமெரிக்காவின் உறவுகள், பரஸ்பர நன்மை கருதியவை. அதனால் விக்கிலீக்ஸ் ரகசிய ஆவணங் களால் அந்த உறவுகளை மாற்றியமைக்க முடியாது' என்று கூறியுள்ளார்.

# ஆடம்பர ஹோட்டலில் 49.5 ரூபா கோடி பெறுமதியான கிறிஸ்மஸ் மரம்

அபுதாபியில் பிரபல ஆடம்பர ஹோட் டலில் ரூ. 49.5 கோடி மதிப்பில் தங்கம், இரத்தினக் கற்களால் அலங்கரிக்கப் பட்ட கிறிஸ்மஸ் மரம் சர்ச்சையை கிளப் பியுள்ளது.



அபுதாபியில் உள்ள ஹோட்டல் களில் கிறிஸ்மஸ் பண்டிகையை யொட்டி மரபு ரீதியாக கிறிஸ்மஸ் மரம் வைப்பது வழக்கம். மேலும் அவ்வாறு வைக்கப்படும் மரத்தை மின்விளக்கு, போன்ற அலங்கார பொருட்களால் அலங்கரிப்ப தில்லை.

ஆனால், அங்குள்ள ஆடம்பர ஹோட்டல் ஒன்றில் வைக்கப்பட்டு இருந்த கிறிஸ்மஸ் மரம் தங்கம், வைரம், பல்வேறு நவரத்தினக் கற்களால் அலங்கரிக்கப் பட்டு இருந்தது. வழக்கத்துக்கு மாறாக அதிகப்படியான ஆபரணப் பொருட்கள் ஆக்கிரமித்து அந்த மரமே தெரியாத அளவுக்கு மூடப்பட்டு இருந்தது.

இது மரபை மீறி ஆடம்பரத்தை பிரதி பலிப்பதாக இருப்பதுடன் பார்வையாளர் களை கவர்வதற்காக உருவாக்கப்பட்டது போல் உள்ளது. மேலும், இது தவறான இரசனையை வெளிப்படுத்துவதாக கூறி சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து ஹோட்டல் நிர்வாகி ஒருவர் கூறுகையில், கிறிஸ்மஸ் மரம் தங்கம், வைரம் உட்பட நவர த்தினக் கற்களால் அலங்கரிக்கப்பட்டு ஹோட்ட லின் மையப்பகுதியில் வைக்கப்பட்டு உள்ளது. பண்டிகையை முன்னிட்டு ஹோட்டலில் வைக்கப்பட்டுள்ள கிறிஸ் மஸ் மரம் மரபை மீறியதாக இருந்தால் அதற்காக வருந்துகிறோம் என்று அவர் தெரிவித்தார்.

# பெனாசிர் படுகொலை தொடர்பாக பாக். பொலிஸ் உயரதிகாரிகள் கைது



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனா சிர் பூட்டோ படுகொலை தொடர்பாக, பாகிஸ்தான் பொலிஸ் உயரதிகாரிகள் இருவரை சர்வதேச பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சர்வதேச பொலிஸ் இது குறித்து தெரி வித்துள்ளதாவது :

படுகொலை நடந்த நேரத்தில், அடி யாலா பகுதியில் பாதுகாப்பு குறைபாடுகள் இருந்தபோதிலும் இவர்கள் அசட்டுத்தனமாக இருந்து உயிர்ப்பலி அதி கரிக்க காரணமாக இருந்தனர். அத்துடன் பெனாசிர் படு கொலைக்கு திட்டம் தீட்ட உதவியதாகவும் அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதால் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

# பயங்கரவாதிகளை ஒடுக்குவதிலிருந்து பாகிஸ்தான் பின்வாங்கக் கூடாது

## அமெரிக்கா வலியுறுத்தல்

பயங்கரவாதிகளை ஒடுக்கும் நடவடி க்கையில் இருந்து பாகிஸ்தான் பின்வாங் கக்கூடாது. தொடர்ந்து உறுதியாகப் போராட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடி க்கையில் பாகிஸ்தானுக்கு தொடர்ந்து அமெரிக்கா பக்கபலமாக இருந்து உதவி யளிக்கும் என்றும் அந்நாட்டின் வெளியு றவு அமைச்சகச் செய்தித்தொடர்பாளர் குரோவ்லே தெரிவித்தார்.

வொஷிங்டனில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களுக்கு வழக்கமாக அளித்த பேட்டியின் போது குரோவ்லே இதைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது: பாகிஸ் தானுக்குள் புகலிடமாகியுள்ள பயங்கர வாதிகள் அந்நாட்டின் தேசப் பாது காப்புக்கு மட்டுமல்லாது பிற நாடுகளுக் கும் கடும் அச்சுறுத்தலாக உள்ளனர். இதை உணர்ந்து பாகிஸ்தான் பொறுப்பு டன் செயல்பட வேண்டும். பயங்கரவாதி களுக்கு எதிராகப் பாகிஸ்தான் சமீபகால மாக எடுத்துவரும் நடவடிக்கை திருப்தி அளிக்கும் விதத்தில் உள்ளது.

பயங்கர வாதிகளுக்கு எதிரான போரில் பிற நாட்டு இராணுவத்தைவிட பாகிஸ் தான் இராணுவம் அர்ப்பணிப்புடன் போ ராடுகிறது என்பதை அமெரிக்கா நன்கு அறி யும்.

எனினும், பயங்கரவாதிகளை ஒடுக் கும் விஷயத்தில் பாகிஸ்தான் மேலும் துரிதமாகச் செயல்பட வேண்டும். முடிந் தவரை உறுதியுடன் செயல்பாடு இருக்க வேண்டும். இதற்கு தொடர்ந்து ஆதரவ ளிக்க அமெரிக்கா தயாராகவுள் ளது.

பயங்கரவாதிகளை ஒடுக்கும் விஷயத் தில் பாகிஸ்தானின் செயல்பாட்டில் அமெரிக்காவுக்கு திருப்தி இல்லை. கடும் அதிருப்தியில் ஆழ்ந்துள்ளது என்று சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள் ளன. இந்தச் செய்தி ஆதாரமற்றது என் றார் குரோவ்லே.

தொடர்ந்து காஷ்மீர் பிரச்சினை குறித்து கருத்து கூறிய குரோவ்லே, காஷ்மீர் பிரச் சினை என்பது இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளின் விவகாரம். இத னால் அந்த பிரச்சனையை இரு நாடுக ளும் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றே அமெரிக்கா விரும்புகிறது. அமெ ரிக்காவின் இந்த நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை.

காஷ்மீர் விவகாரத்தை சுமுகமாகத் தீர்க்க இரு நாடுகளும் முயற்சிக்கவேண் டும். இதற்காக இரு நாடுகளும் குறிப் பிட்ட கால இடைவெளியில் பேச்சுவார்த் தையை தொய்வில்லாமல் நடத்த வேண் டும் என்றார்.

# விமானத்தில் மடோனா 'யோகா'



நியூயோர்க்கில் இருந்து லண்டனுக்கு முன்னாள் கண வர் கய் ரிட்சி மற்றும் தனது 4 குழந்தைகளுடன் கிறிஸ் மஸ் கொண்டாட பொப் பாடகி (52) விமானத்தில் வந் தார்.

இவருடன் இவரது சகாக்கள் 15 பேர் வந்தனர். விமானத்தில் வந்துகொண்டிருந்தவர் திடீரென சகாக்களு டன் இணைந்து இருபக்க இருக்கைகளுக்கு இடையில் அமர்ந்து ஒருமணி நேரம் யோகாவில் ஈடுபட்டார்.

கடும்பனியால் மூடப்பட்ட ஹீத்ரு விமான நிலையம் வந்த பின்னரும் முதல் வகுப்பில் பயணித்த பயணிகளால் விமானத்தை விட்டு இறங்க முடியவில்லை. பயணிகள் கடும் கோபமடைந்தனர். பின்னர் வந்த விமான நிலைய பஸ் மடோனா மற்றும் சகாக்களை அழைத்துச் சென்றது. இதனால், மற்ற பயணிகள் மேலும் 2 மணிநேரம் காத்திருக்க வேண்டி ஏற்பட்டது.

# கினி ஜனாதிபதியாக அல்பா கண்டே பதவியேற்பு

கினி நாட்டின் ஜனாதிபதியாக அல்பா கண்டே (வயது 72) செவ்வாய்க்கிழமை பதவியேற்றார்.

ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப் பட்டு பதவியில் அமரும் முதல் ஜனாதி பதி என்கிற பெருமைக்குரி யவராகிறார் கண்டே.

எதிர்க்கட்சித்தலைவரான கண்டேவு க்கு நவம்பரில் நடந்த தேர்தலில் 52.5 சதவீத வாக்குகள் கிடைத்தன. தேர்தல் முடிவு செவ்வாய்க்கிழமை அறிவிக்கப் பட்டது. பிரான்ஸின் ஆதிக்கத்தில் இரு ந்த கினி நாடு 1958இல் சுதந்திரம் அடை ந்தது. தலைநகர் கொனாக்ரி பாராளுமன் றத்தில் நடந்த பதவியேற்பு நிகழ்ச்சியில் 13 ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

சர்வாதிகாரி லசானா 2008 இல் உயிரிழ ந்ததை அடுத்து ஆட்சிப்பொறுப்பு இராணுவம் வசம் சென்றது. அதையடு த்து, பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. இடைக்கால ஆட்சியாளராகப் பொறுப் பேற்ற செகூபா கடந்த வாரம் பதவியிலி ருந்து விலகினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் ஓசை
Yarl Osai
2010 டிசம்பர் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk


# கூட்டமைப்பின் நல்லெண்ண சமிக்ஞை

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் ஆக்கபூர்வமான செயற்திட்டங்களுக்கு ஒத்துழைக்கும் வகையில் தாம் வெளிப்படுத்தியுள்ள நல்லெண்ண சமிக்ஞையை அரசாங்கம் சாதகமான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். பிரதேச செயலக அலுவலகத்தில் நடைபெற்றபோதே கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா இதனை சுட்டிக் காட்டியிருக்கிறார்.

மீள்குடியேற்ற அமைச்சினால் சுமார் 45 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்படும் வடக்கில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளை வழங்கும் செயற்திட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து செயற்பட்டு வருகிறது.

கடந்த வாரம் இச் செயற்றிட்டம் தொடர்பில் கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்திய மீள்குடியேற்ற அமைச்சர் எம்.எச்.குணரத்ன வீரக்கோன், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தமது அமைச்சினால் முன்னெடுக்கப்படும் நிவாரண விநியோகத் திட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து செயற்பட முன்வர வேண்டும் என அழைப்பு விடுத்திருந்தார். அதற்கமைவாக மீள்குடியேற்ற அமைச்சரைச் சந்தித்து இத் திட்டம் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியிருந்தது. அதற்கமைவாகவே தற்போது வடக்கில் நடைபெற்றுவரும் நிவாரண விநியோக நிகழ்வுகளில் கூட்டமைப்பின் எம்.பி.க்களும் பங்குபற்றி வருகின்றனர்.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்துடன் இணைந்து தீர்வினைப் பெற்றுக் கொடுக்கும் நல்லெண்ணத்தின் அடிப்படையிலேயே தாம் இந் நிகழ்வுகளில் பங்கேற்றுள்ளதாகவும் அரசாங்கம் கூட்டமைப்பின் இந்த நிலைப்பாட்டை விளங்கி சாதகமான சமிக்ஞைகளை வெளிப்படுத்த வேண்டும் எனவும் மாவை சேனாதிராஜா எம்.பி. இங்கு குறிப்பிட்டிருந்தார். அத்துடன் இவ்வாறான பிரச்சினைகளில் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு உதவுவது போன்றே இனப் பிரச்சினைத் தீர்வு முயற்சிகளிலும் அரசாங்கம் மிகுந்த அக்கறையுடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

உண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்கு உதவும் அரசாங்கத்தின் இத் திட்டத்திற்கு மக்களின் நன்மையை முன்னிறுத்தி அரசியல் வேறுபாடுகளை மறந்து கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்குகின்றது. இவ்வாறான நல்ல விடயங்களுக்காக ஒன்றுபட்டுழைக்கும் அரசாங்கமும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் எதிர்வரும் காலங்களில் இனப் பிரச்சினைத் தீர்வு முயற்சிகளிலும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்பதே அனைவரதும் விருப்பமாகும்.

கடந்த 3 தசாப்தங்களுக்கும் மேலாக இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்கான தக்க தருணம் இதுவேயாகும். போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு ஒன்றரை வருடங்கள் கடந்து விட்ட போதிலும் இதுவரை இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைப்பது தொடர்பில் அரசாங்கம் போதிய அக்கறையை வெளிப்படுத்தவில்லை எனும் விமர்சனங்கள் பல்வேறு தரப்பினராலும் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் கூட்டமைப்பின் இந்த நல்லெண்ண சமிக்ஞையை அரசாங்கம் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவித் திட்டத்தில் இணைந்து பணியாற்ற வருமாறு அரசாங்கம் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்தது போன்றே இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் நோக்கில் பேச்சுவார்த்தை நடத்த முன்வருமாறும் தமிழ் அரசியல் கட்சிகளை நோக்கி அரசாங்கம் அழைப்பு விடுக்க வேண்டும். அதற்கான சிறந்த சமிக்ஞையையே தற்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்தியிருக்கிறது.

அரசாங்கம் இதற்கு என்ன பதிலை அளிக்கப் போகிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# சீன - இலங்கை உறவு பொற்காலத்தில் இந்திய - இலங்கை உறவு சமரசத்தில்

இலங்கை, பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் வென்றுவிட்டன, இப்பொழுது உலகின் பல்வேறு மேற்கு நாடுகளிலும் பார்க்க அமைதியான நாடாக அது உள்ளது. இதுவே இலங்கையின் தற்போதைய முழக்கமாக இருந்துவருகின்றது.

ஆனால், செயல்வடிவில் மனித உரிமை மீறல்களின் தொடர் விளைவுகள், ஊடகவியலாளர்களுக்கான சுதந்திரத்தில் கட்டுப்பாடுகள், வெறும் காற்றுப் பையாக பெருகிவரும் பொருளாதார நிலை ஆகியவற்றின் மத்தியில் தான் கூறிவரும் அமைதியை நிலைநாட்ட முடியாமல் திணறிக்கொண்டிருக்கிறது இலங்கை.

சர்வதேசத்தின் குற்றச்சாட்டுக்களில் இருந்து தன்னை பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு அனைத்துலக நாடுகளின் கவனத்தை தான் விரும்பும் திசைக்கு திருப்பிவிட இலங்கை அரசு பெரும் முயற்சிகளை செய்துவருகிறது.

இலங்கை மனித உரிமைகளை மீறிவிட்டது. ஆதலால், பொருளாதார உதவி செய்யாதீர்கள் என மனித உரிமை அமைப்புக்களும் தமிழர் தரப்புக்களும் ஒரு தரப்பாகவும், பயங்கரவாதத்தை ஒழித்துவிட்டோம்; பொருளாதார உதவி செய்யுங்கள் என இலங்கை அரசு மறு தரப்புமாக பெரும் பரப்புரைகளை உலகெங்கும் செய்துவருகின்றன.

இலங்கையின் முன்னைய அரசாங்கங்கள், நாட்டின் வளர்ச்சிக்கும் அதன் அமைதியான சமூகங்களின் தேசிய, அரசியல், பொருளாதார வாழ்விற்கும் பங்களிக்க கூடிய மூலவளம் - மூளைவளம், ஆட்பலமென அனைத்து வளங்களையும் தனது அடிப்படைவாத இனவிரோதக் கொள்கைகளுக்காக ஒரு தேசிய இனத்துக்கு எதிரான போரிலே சீரழித்துவிட்டன.

ஒட்டிக்கொள்ள முடியாத நிலையில் இலங்கையின் தேசியமே இரண்டுபட்டு கிடக்கிறது. பார்வைக்கு ஆயினும் இலங்கை என்பது ஒரு தேசம் என்று காட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் பலனாக, வெளிநாட்டு உதவிகளிலேயே முற்றுமுழுதாக தங்கி இருக்க வேண்டிய நிலையில் தற்போது இலங்கை உள்ளது.

வெறும் கடன்தொகையைப் பெற்றதற்கே பெரும் வர்த்தக உடன்படிக்கைகள் கைச்சாத்தாகி விட்டமை போல மார்தட்டி பெருமைப்பட்டுக் கொள்ளவேண்டிய நிலையில் இலங்கை உள்ளது.

இந்தவகையில், தேவைக்கு ஏற்றாற்போல் கடன் வழங்கும் எந்த நாட்டுடனும் நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்க வேண்டிய ஒரு நிலையில் தான் இலங்கை இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆகவே, இந்தியாவிடமும் சீனாவிடமும் யப்பானிடமும் மட்டுமல்ல எந்த மேலைநாடுகளிடமும் கடன் பெற்றுகொள்ள இலங்கை தயாராகத் தான் இருக்கின்றது.

பயங்கரவாதத்தை அழிப்பதற்கான போரிலே இலங்கை ஒருகட்டம் வரைக்கும் இந்திய - அமெரிக்க மற்றும் பல மேற்கு நாடுகளின் சொற்படி கேட்டு நடப்பது போல் இருந்து புலிகளின் அனைத்துலக செயற்பாடுகளை உடைப்பதிலும், வழங்கல்களை தடைசெய்விதிலும், சட்டபூர்வமான தடைகளைக் கொண்டுவருவதிலும் சேர்ந்து செயற்பட்டுவிட்டு, இறுதிக்கட்ட நிலைக்கு யுத்தம் வந்ததும் மேற்கின் சொற்படி நடவாமல் சீனாவின் உதவியைப் பெற்று தனது திட்டத்தை நிறைவேற்றியமை மேற்கு மற்றும் இந்திய அரசுகளில் செல்வாக்கு செலுத்தக்கூடிய ஆய்வாளர்களின் கருத்தாகும்.

அத்துடன், நடாத்திமுடிக்கப்பட்ட யுத்தத்தில் தமிழர் தரப்பில் தகுந்த தலைமைத்துவம் இல்லாத நிலை ஏற்பட்டது. இதனால், இலங்கை மீதான இறுக்கமான பிடி தளர்வுக்கு உள்ளாவதை இந்திய மற்றும் மேற்கு நாடுகள் எதிர்பார்க்கவில்லை என்பதையும் பல்வேறு முன்னைநாள் இந்தியப் படை அதிகாரிகளும் ஆய்வாளர்களும் தற்போது தெரிவிக்கின்றனர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் அன்பான சகோதரத்துவ வரவேற்பு, வேண்டிய அனைத்து உதவிகளையும் கேட்பதற்கு முன்பாகவே கொடுக்கும் தன்மை, ஏன் என்று கேள்வி கேட்காத உள்விவகாரங்களில் தலையிடாத குணம், ஆகிய அனைத்தும் சீனாவிடம் இருக்கின்றன என *' The Economist'* சஞ்சிகையில் இலங்கை தொடர்பான கட்டுரை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது.

சீனா, இலங்கைக்கு கொடுத்துள்ள உதவித்தொகைகள் குறித்தும் சீன கட்டுமானங்கள் குறித்தும் ஏராளம் செய்திகளும் கட்டுரைகளும் வெளிவந்த வண்ணமுள்ளன.

**லோகன் பரமசாமி**

ஏற்கனவே இந்தக் கட்டுரைகளில் குறிப்பிட்டதுபோல சீன வர்த்தகத்தின் வளர்ச்சியும் அதனூடாக சீனாவின் சமூக பொருளாதார வாழ்க்கைத்தர உயர்ச்சியும் அதன் எதிர்காலப் பயன்பாட்டுக்கான தேவைக்கேற்ப வழங்கல்களை தக்க வைத்துக் கொள்வதிலே சீனா மிகவும் குறியாக கவனம் செலுத்தவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளது.

குறிப்பாக, 2025 ஆம் ஆண்டில் சீனாவுக்கு தற்போதய நிலையிலும் பார்க்க ஐம்பது சதவீத அதிகரித்த எண்ணெய் எரிபொருள் தேவை ஏற்படும் என்பது கணிப்பு. அதனால், வழங்கல்களை கட்டுக்குள் வைத்திருக்க கப்பல் போக்குவரத்து மிக முக்கியமானதாக கருதப்படுகிறது.

(தொடர்ச்சி அடுத்த வாரம் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற கூட்டுக்குழுவை நியமியுங்கள் அல்லது பதவியை ராஜினாமா செய்யுங்கள்: மன்மோகன் சிங்குக்கு தேசிய ஜனநாயக கூட்டணி எச்சரிக்கை

புதுடில்லி,

பாராளுமன்ற கூட்டுக்குழுவை நியமியுங்கள் அல்லது ராஜினாமா செய்யுங்கள் என்று டில்லியில் நடந்த பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் தேசிய ஜனநாயக கூட்டணித் தலைவர்கள் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு எச்சரிக்கை விடுத்தனர்.



ஊழலுக்கு எதிரான போராட்டம் என்ற பெயரில் பா.ஜனதா, ஐக்கிய ஜனதா தளம், அகாலி தளம், சிவ சேனா கட்சிகளை சேர்ந்த தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகள் நேற்றுமுன்தினம் டில்லியில் பிரமாண்ட பொதுக்கூட்டம் நடத்தின.

ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் முறைகேடு, பொதுநலவாய விளையாட்டுப் போட்டி ஏற்பாட்டில் ஊழல், ஆதர்ஷ் வீட்டு வசதி திட்டத்தில் ஊழல் ஆகியவற்றை கண்டித்து இந்த பொதுக் கூட்டம் நடந்தது.

இக் கூட்டத்தில் பேசிய தேசிய ஜனநாயக கூட்டணியின் செயல் தலைவர் எல்.கே. அத்வானி,

பிரதம அமைச்சர் அவர்களே, பாராளுமன்ற கூட்டுக் குழு அமைக்க உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. பொது மக்கள் அளித்துள்ள இந்த அதிகாரத்தை பயன்படுத்த ஏன் மறுக்கிறீர்கள்? பாராளுமன்ற பொதுக் கணக்கு குழு முன்பு ஆஜராகத்தயார் என்று கூறும் நீங்கள், பாராளுமன்ற கூட்டுக் குழு முன் ஆஜராகத்தயார் என்று கூறுங்கள். ஏன் மறுக்கிறீர்கள்? எதிர்க் கட்சிகளின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. உங்களை யாரும் தடுக்க முடியாது.

நம்பர் 10 ஜன்பத் வீட்டின் (சோனியா காந்தியின்) அனுமதி இல்லாமல் உங்களால் எந்த முடிவும் எடுக்க முடியாது. உங்கள் அதிகாரத்தை பயன்படுத்தி, பாராளுமன்ற கூட்டுக் குழு அமைக்க உத்தரவிடுங்கள். அதன் மூலம் பாராளுமன்றம் நடைபெற ஏற்பாடு செய்யுங்கள் என்று பேசினார்.

அதனைத் தொடர்ந்து பேசிய டில்லி மேல்-சபை எதிர்க் கட்சித் தலைவர் அருண் ஜெட்லி,

ஊழல் புகாரில் சிக்கிய தாமசை தலைமை கண்காணிப்பு ஆணையராக நியமித்தீர்கள். எதிர்க் கட்சிகள் பாராளுமன்றத்தை முடக்கி இருக்கா விட்டால், ஆ.ராசாவை தொடர்ந்து அமைச்சராக நீடிக்க விட்டிருப்பார்கள். இவ்வளவு நடந்தும், காங்கிரஸ் கட்சி தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஊழல் மற்றும் மோசடிகளில் இருந்து மக்களை திசை திருப்புவதிலேயே கவனமாக இருக்கிறது. தொழில் அதிபர்களும், அரசியல் தரகர்களும் காங்கிரஸ் ஆட்சியின் கொள்கையை வகுத்து வருகிறார்கள். இது கண்டிக்கத்தக்கது.

பாராளுமன்ற கூட்டுக் குழு விசாரணையில் மட்டுமே நீதி கிடைக்கும். ஆகவே அந்தக் குழுவை நியமித்து, அதன் முன் பிரதமர் மன்மோகன்சிங் ஆஜராக வேண்டும். பாராளுமன்ற கூட்டுக் குழு விசாரணையை எதிர்கொள்ள விருப்பம் இல்லாத பட்சத்தில், ஊழலுக்கு தார்மீக பொறுப்பேற்று தனது பதவியில் இருந்து அவர் ராஜினாமா செய்ய வேண்டும் என்றார்.

பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் பேசியதாவது:-

பிரதமர் மன்மோகன்சிங் நிறைய விஷயங்களை மறைக்கிறார். ஆனால், தான் எந்த விஷயத்தையும் மறைக்க வில்லை என்று கூறுகிறார்.

பாராளுமன்ற கூட்டுக் குழு விசாரணைக்கு அவசியம் இல்லை என்று சோனியா காந்தியும், மன்மோகன்சிங்கும் தெரிவித்து வருகின்றனர். ஆனால், அதற்கு சரியான காரணத்தை அவர்களால் சொல்ல முடிய வில்லை. பொதுக் கணக்கு குழு குறைந்த அதிகாரமே உள்ள அமைப்பு. அதன் முன் ஆஜராகத் தயார் என்று கூறும் பிரதமர் மன்மோகன்சிங், பாராளுமன்ற கூட்டுக் குழுவை சந்திக்க ஏன் தயாரில்லை?

நீங்கள் வேண்டுமானால் ஊழல் செய்யாதவராக இருக்கலாம். ஆனால், உங்களுக்கு மிக அருகிலேயே, நுனி மூக்கிலேயே ஊழல் பேர்வழிகளுக்கு இடம் அளித்து உள்ளீர்கள். அப்படியானால், ஊழலுக்கு நீங்களும் பொறுப்புதானே? என்றார்.

# 180 கிலோ எடையுள்ள 617 வகை உணவுகளை தொடர்ந்து சமைத்து கின்னஸில் இடம்பிடித்த தமிழர்

சென்னை :

சுமார் 180 கிலோ எடையுள்ள 617 உணவுவகைகளை தொடர்ந்து சமைத்துக் காட்டிய இந்திய சமையற் கலைஞரொருவர் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.



தமிழகத்தில், சமையல் கலையில் முத்திரை பதித்து வரும் தாமு என்ற தாமோதரனே மேற்படி சாதனையை நிகழ்த்தியவராவார்.

கடந்த திங்கட்கிழமை காலை எட்டு மணிக்கு தனது சமையலை தொடங்கிய தாமோதரன், 180.64 கிலோ எடையுடைய 617 வகையான உணவுகளை நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கு சமைத்து முடித்தார்.

கிட்டத்தட்ட 25 மணிநேரம் தொடர்ந்து சமையல் செய்த இவர் நிகழ்த்திய சாதனை கின்னஸ் புத்தகத்தில் பதியப்பட்டது.

# தமிழகத்தில் ஆட்சியை குறுக்கு வழியில் பிடிக்க விரும்பவில்லை: ராகுல் காந்தி



மதுரை

குறுக்கு வழி மூலம் தமிழத்தில் ஆட்சியை பிடிக்க காங்கிரஸ் எப்போதும் விரும்பியதில்லை என அகில இந்திய காங்கிரஸ் பொதுச்செயலாளர் ராகுல் காந்தி தெரிவித்தார்.

நேற்று மதுரைக்கு வந்திறங்கிய அவர் காந்தி மியூசியத்தில் நடைபெற்ற நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலே இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

நமது நட்பை வைத்துதான் தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் ஆட்சியை நடத்திவருகின்றன. காங்கிரஸ் தமிழகத்தில் மீண்டும் தனித்து நிற்கும். அது உங்களின் கையில்தான் இருக்கிறது.

உள்ளாட்சி தேர்தலில் நீங்கள் வெற்றியை தேடித்தந்தால். அந்த வெற்றியை வைத்து நாங்கள் டில்லியில் பேசி முடிவெடுத்து தேர்தலில் தனித்து போட்டியிடலாம் என்று அறிவிப்போம். அதனால் உள்ளாட்சி தேர்தலில் வெற்றியை தேடித்தாருங்கள்.

மற்றபடி தமிழகத்தில் ஆட்சியை பிடிக்க காங்கிரஸ் ஒரு போதும் குறுக்கு வழியில் போகாது. அப்படி குறுக்கு வழியில் சென்று ஆட்சியை பிடிக்க விரும்பியதும் இல்லை என்றார்.

# இன்று சி.பி.ஐ. முன் ஆஜராகும் ராஜா



புதுடில்லி :

2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேடு தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு முன்னாள் மத்திய அமைச்சர் ராஜாவுக்கு சி.பி.ஐ. சம்மன் அனுப்பியதைத் தொடர்ந்து 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆஜராகுவதாக ராஜா சி.பி.ஐ.க்கு தகவல் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ராஜாவின் தகவலை சி.பி.ஐ. ஏற்றுகொண்டதை அடுத்து இன்று சி.பி.ஐ. முன்னிலையில் ராஜா ஆஜராகவுள்ளார்.

# சந்திரபாபுவுக்கு கருணாநிதி அவசர தந்தி

சென்னை,

உண்ணாவிரதத்தை கைவிடக் கோரி தெலுங்கு தேச தலைவர் சந்திரபாபு நாயுடுவுக்கு தமிழக முதல்வர் கருணாநிதி அவசர தந்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.



ஆந்திராவில் மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கூடுதலாக நிவாரண உதவி வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, தெலுங்கு தேச தலைவர் சந்திரபாபுநாயுடு, உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வந்தார். இதனால் உடல் நலக்குறைவு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதும் அவர் தனது உண்ணாவிரதத்தை கைவிடவில்லை. இந் நிலையில், தமிழக முதல்வர் கருணாநிதி, உண்ணாவிரதத்தை கைவிடக்கோரி சந்திரபாபு நாயுடுவுக்கு நேற்றுமுன்தினம் இரவு தந்தி அனுப்பினார்.

அதில், உங்களுடைய மதிப்பு மிக்க சேவை இந்திய நாட்டிற்கும், குறிப்பாக ஆந்திர மாநிலத்திற்கு அதிகம் தேவைப்படுகிறது.

எனவே, நாட்டு நலனை கருத்தில் கொண்டு உண்ணாவிரத போராட்டத்தை கைவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது இனத்தின் (தொடர்ச்சி)

பிற இனங்களை விட தனித்துவமான கலை கலாசார பண்பாடுகளை உடைய இனம். இன்று வரை எமது இனத்தின் பெருமைகள் காப்பாற்றப்படுகின்றன என்றால் அதற்கு ஓர் முக்கிய காரணம் அது தனக்கே உரிய கலாசார விழுமியங்களை தனது தனித்துவங்களை தமக்குள்ளே கட்டிக்காத்து வந்துகொண்டிருக்கின்றது. யுத்த காலங்களில் கூட நாம் இறுக்கமான நிலைகளில் நின்று எமது கலாசார விழுமியங்களை காப்பாற்றி வந்தோம்.

ஆனால் இன்று அந் நிலை மாறி எமது கலாசார விழுமியங்களில் இருந்து வேறு திசையில் பயணித்துக்கொண்டு இருக்கிறோம். எமது கலாசார பண்பாட்டு விழுமியங்களை சீர் குலைப்பதன் மூலம் எமது இனத்தின் தனித்துவங்களையும் பண்பாட்டின் ஆணி வேரையும் இழக்க வைப்பதற்காக அதிகார வர்க்கங்கள் முனைப்பு காட்டி வருகின்றன. இதற்கு எமது சமூகத்தில் உள்ளவர்களும் துணைபோவது எமக்கு பெரும் வேதனை அளிக்கிறது.

உலகின் பல்வேறு நாடுகளில் பல இனங்களைக் கொண்ட தேசங்கள் இருக்கின்றன. அந்த ஒவ்வொரு இனமும் தமக்கென தனித்துவமான மொழி கலை கலாசார மற்றும் பண்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு இனமும் தமது கலை கலாசார பண்பாடுகளை இழக்கும் போது அல்லது அதிலிருந்து விலகிச் செல்லும் போது அந்த இனம் தனது தனித்துவங்களை இழந்து வெறுமனே பெயரளவில் மட்டும் அது ஓர் இனமாக கருத முடியாது.

உரிமைகளுக்காக போராடிய பல்வேறு தேசங்களில் போருக்கு பின்னர் அந்த இனம் தனது இலக்குகளை எட்ட முடியாமல் போனதற்கு முக்கிய காரணம் அத்தேசங்களை ஆளும் அதிகார வர்க்கங்களின் கலாசார சீர்குலைப்பே ஆகும். இதனால் அந்த இனங்கள் இன்று உலகின் கண்களுக்கு தென்படாமலே போய்விட்டன. இதே போன்ற ஓர் நிகழ்ச்சி நிரலே இங்கும் அரங்கேறிக்கொண்டு இருக்கின்றது. எனவே அவற்றிற்கு துணைபோகாமல் எமது இனத்தின் கலாசார விழுமியங்களை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தமிழ் மக்கள் ஆகிய எங்கள் ஒவ்வொருவரினதும் கைகளிலேயே தங்கி இருக்கின்றது.

தமிழர்களின் மிகப்பெரிய சொத்தும் சமூக மட்ட உயர் நிறுவனமும் ஆகிய யாழ். பல்கலைக்கழக சமூகம் ஆகிய நாம் எமது மக்களுடன் ஒன்றாக இணைந்தே செயற்பட்டோம். செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றோம். எமது இனத்தின் தற்போதைய நிலையில் எமது கலாசார விழுமியங்களை எவ்வாறு காப்பாற்றலாம் என மக்களிற்கு தெளிவுபடுத்த வேண்டிய பாரிய பொறுப்பு உயர் கல்வி சமூகம் ஆகிய எங்களிடம் இருக்கின்றது. எமது இனத்தின் கலாசார விழுமியங்கள் அழிக்கப்படுவதை நாம் ஒருபோதும் கை கட்டிப் பார்த்திருக்கவோ அல்லது அதை அனுமதிக்கவோ முடியாது. பல்கலைக்கழக மாணவர் சமூகம் ஆகிய நாம் எமது மக்களிற்கு அதை தெளிவு படுத்த தயார் ஆகவேண்டும்.

எமது மாணவர்களுடைய ஒத்துழைப்புடன் சில விழிப்புணர்வுத் திட்டங்களை நாம் முன்னெடுக்கவுள்ளோம். காலக் கடமையை கரமேந்திய எமது திட்டத்தில் பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கலாசார ரீதியான விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடத்துதல்.

எமது தமிழ் பிரதேசங்களில் காணப்படும் வர்த்தக நிலையங்களின் மற்றும் ஏனைய நிறுவனங்களின் பெயர் பலகைகளில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை அளித்தல்.

தமிழர்களின் கலாசார பண்பாட்டு மையங்களை பாதுகாக்க தக்க விதத்திலான நடவடிக்கைகளை எடுத்து அவை தமிழர்களின் பெருமைகளை பிரதிபலிக்கும் சான்றுபடுத்தும் நிலையங்களாக மாற்றப்படும்.

ஆலயங்களில் நடத்தப்படும் இசைக்குழுக்கள் மற்றும் கேளிக்கை நிகழ்ச்சிகளை தவிர்த்து அதற்கு பதிலாக எமது இனத்தின் பெருமைகளை எடுத்து சொல்லும் நாடகங்களை அரங்கேற்றல்.

எமது கலாசார விழுமியங்களை பாதுகாக்க தக்கவகையில் மாணவர் ஒன்றியத்தால் விழிப்புணர்வு சஞ்சிகை மற்றும் இறுவெட்டு இணையத்தளம் வெளியிடல் ஆகிய பணிகளை முன்னெடுக்கவுள்ளோம்.

இதைவிட எமது சமூகத்தில் உள்ள சில கலாசார சீரழிவை தவிர்க்க கீழ் குறிப்பிடப்படும் மக்கள் பயன்படுத்தும் நிலையங்கள் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என விநயமாக கேட்டுக்கொள்கிறோம்.

திரையரங்குகளில் நடைபெறுவதாக கூறப்படும் கலாசார சீரழிவை தவிர்க்க அதன் உரிமையாளர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தனியார் விடுதிகளில் தங்குவோர் சில வேளை விடுதியை தவறாக பயன்படுத்தலாம். அது குறித்து அதன் உரிமையாளர்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும்.

இணைய வசதிகளை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் வர்த்தக நிறுவனங்களை சிலர் தவறாக பயன்படுத்தலாம். எனவே அது குறித்து அதன் உரிமையாளர்கள் அவதானமாக செயற்பட வேண்டும்.

காணிகளை விற்கும் உரிமையாளர்கள் பணத்தை மட்டும் நோக்கமாக கருதாமல் யாருக்கு விற்பனை செய்கிறோம் என அவதானமாக இருக்கவேண்டும்.

சம காலத்தில் நடக்கும் கொள்ளை சம்பவங்களை நாம் வன்மையாக கண்டிப்பதோடு அதை முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என வேண்டுகிறோம்.

எனவே எமது இனத்தின் கலாசார விழுமியங்களை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தமிழ் மக்கள் ஆகிய எங்கள் அனைவரது கைகளிலேயே உள்ளது. அன்பான பெற்றோரே உங்கள் பிள்ளைகளுக்கு நீங்களே பாதுகாப்பு. எனவே உங்கள் பிள்ளைகளின் செயற்பாடுகளில் மிகவும் அவதானமாக இருங்கள். எனவே நாங்கள் அனைவரும் பொறுப்புடன் செயற்படுவதன் மூலம் எமது இனத்தின் தனித்துவங்களை காப்பாற்றுவோம் என சபதம் எடுப்போம்.

உலகம் கூடி நின்று எமது வேரைப் பிடுங்கி தின்று ஏப்பம் விட முனைந்தாலும் ஊர் கூடி நின்று நாம் எம் உதிரம் பாய்ச்சியேனும் தமிழர் தம் பண்பாட்டை காப்போம் என தமிழ் தேசத்தின் ஒவ்வொரு குடிமகனும் உறுதி பூண வேண்டும்.

## 50 ஆயிரம் வீடுகள் (தொடர்ச்சி)

ஐயாயிரம் வீடுகள் மாத்திரமே புதிதாக நிர்மாணிக்கப்படுவதாகவும் மிகுதி 45 ஆயிரம் வீடுகள் புனர்நிர்மாணங்களை மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன. இது குறித்து கேட்டபோதே மாவை எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்,

அவர் மேலும் கூறுகையில் :-

வன்னிப் பெரு நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தின் விளைவாக பாரிய அழிவுகளையும் இழப்புக்களையும் சந்தித்த எமது மக்கள் தற்போது அடிப்படை வசதிகளற்ற நிலையிலும் அரைகுறை வசதிகளோடுமே மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

பல்லாயிரக்கணக்கான குடியிருப்புக்கள் தரைமட்டமாகியுள்ளன. இந்நிலையில் தான் இந்திய மத்திய அரசு தானாக முன்வந்து வடக்கில் 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்துத் தருவதாக அறிவித்து பின்னர் அதனை நடைமுறைப்படுத்தியது. ஆனால் தற்போது அங்கு ஐயாயிரம் வீடுகளே புதிதாக நிர்மாணிக்கப்படவிருப்பதாகவும் மிகுதியான வீடுகள் புனர்நிர்மாணமே செய்யப்படவிருப்பதாகவும் ஊடகங்கள் வாயிலாக தெரிய வந்துள்ளது.

இருப்பினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்திய மத்திய அரசுடன் பேச்சு நடத்திய சந்தர்ப்பத்தில் மேற்படி ஊடகங்களில் வெளியான தகவல்களின்படி பேச்சுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

எனவே மேற்படி நிர்மாணப் பணிகள் தொடர்பிலான உண்மைத் தன்மைகளை அறிய வேண்டியுள்ளது.

இதன் பிரகாரம் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரையும் அதன் பின்னர் இந்திய மத்திய அரசுடனும் பேச்சுக்களை நடத்தி இந்த 50 ஆயிரம் வீடமைப்பு செயற்திட்டத்தின் உண்மைத் தன்மைகளை அறிந்து கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

மிக விரைவில் இந்த சந்திப்புக்களுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதன் பின்னர் நிலைவரங்கள் வெளிப்படுத்தப்படும் என்றார்.

## பிரபாகரன் (தொடர்ச்சி)

கட்சியின் ஆலோசனைக் கூட்டம் மதுரையில் நடைபெற்றது. அவ்வேளை, காங்கிரஸ் நிர்வாகி ஒருவர் எழுந்து நான் தலைவர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று கடிதம் எழுதினேன். அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை பிடித்து தூக்கில் போட வேண்டும் என்றும் எழுதினேன். இந்த இரண்டு கடிதங்களுக்கும் தாங்கள் எந்த பதிலையும் தெரிவிக்கவில்லையே அது ஏன் என்று கேள்வி எழுப்பினார்.

காங்கிரஸ் நிர்வாகியின் இந்தக் கேள்விக்கு ராகுல் காந்தி பதில் சொல்ல மறுத்துவிட்டார். மேலும் அது பற்றி இப்போது பேச வேண்டாம் என்று கூறிவிட்டார்.

பின்னர் பேசிய ராகுல் காந்தி நான் தமிழ் கற்றுக் கொள்ளப் போகிறேன். தமிழில் பேச விரும்புகின்றேன் என்றார்.

## தமிழ் மக்களை (தொடர்ச்சி)

ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே ஐ.தே.கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினரும், ஊடகப் பேச்சாளருமான கித்சிறி மஞ்சநாயக இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரசாங்கம் சர்வதேச ரீதியான நட்புறவுகளை முறித்துக்கொள்ளும் விதத்திலான அணுகுமுறையை முன்னெடுக்கின்றது.

ஐ.நா.வின் கொழும்பு அலுவலகம் முன்பாக உண்ணாவிரதமும், பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டங்களையும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் விமல் வீரவன்ச நடத்துகிறார்.

லண்டனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உரை தடுக்கப்பட்டமையை கண்டிக்கின்றோம்.

ஆனால், அந்நாட்டிலுள்ள எமது தூதுவர் ஜனாதிபதியின் விஜயம் உசிதமானதல்ல எனத் தெரிவித்த பின்னரும் விஜயத்தை மேற்கொண்டு நமது நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தியது.

அரசாங்கத்தின் இவ்வாறான நடவடிக்கைகளால் சர்வதேச நட்புறவுகள் பலவற்றை இழந்துள்ளோம்.

வெளிநாடுகளின் நட்புறவு தேவையில்லை. இந்தியாவின் ஆதரவு மட்டுமே போதுமானதென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அந்த நட்புறவும் இன்று ஊசலாடிக் கொண்டிருக்கின்றது.

இந்தியாவின் ஆளும் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரும், லோக் சபா உறுப்பினருமான ராகுல் காந்தி, இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை அரசாங்கம் புறக்கணிப்பதாகவும் எனவே இப்பிரச்சினையில் நேரடியாக தலையிடுவேன் என்றும் தெரிவித்துள்ளார்.

இதனை எதிர்த்து அமைச்சர் விமல் வீரவன்ச கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எனவே, ஐரோப்பிய நாடுகளின் நட்புறவை இழந்துவரும் அரசாங்கம் இன்று இந்தியாவின் நட்புறவையும் இழக்கும் ஆபத்தான நிலைமை தோன்றியுள்ளது.

அத்தோடு, வெளிநாட்டமைச்சில் உள்ளவர்கள் நாட்டுக்கு எதிராக சூழ்ச்சி செய்வதாகவும் சர்வதேச சதியாளர்களுக்கு உதவி புரிவதாகவும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் விமல் வீரவன்ச தலைமை வகிக்கும் தேசிய சுதந்திர முன்னணியின் முக்கியஸ்தர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறானவர்கள் எமது வெளிநாட்டமைச்சில் இருப்பார்களானால் விசாரணைகளை நடத்தி அவர்களை கைது செய்யலாமே.

அதைவிடுத்து ஏன் ஊடகவியலாளர் மாநாடுகளை நடத்த வேண்டும்?

அரசாங்கத்திற்குள் குழப்பகரமான நிலைமை தோன்றியுள்ளது. வெளிநாட்டமைச்சில் என்ன இடம்பெறுகின்றதென்பது ஜனாதிபதிக்கும் அமைச்சர்களுக்கும் தெரியவில்லை என்றும் கித்சிறி மஞ்சநாயக தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த வயதில் பெண்கள் அழகு?





Find and meet new friends Simple, Clean, Easy online dating ஒரு பெண் எந்த வயதில் அழகாக இருப்பார். இதை சரியாக சொல்வது கொஞ்சம் கஷ்டம்தான். எந்தப் பெண்ணையும் நீ அசிங்கமாக இருக்கிறாய் என்று சொல்ல யாருக்குமே மனம் வராது. இருந்தாலும் ஒரு பெண் எந்த வயதில் அழகாக இருப்பார் என்பதை ஒரு தொலைக்காட்சி நிறுவனம் கருத்துக் கணிப்பு நடத்தி வெளியிட்டுள்ளது.

அந்தக் கணிப்புப் படி, 31 வயதில்தான் ஒரு பெண் அழகாக இருப்பதாக அதில் கலந்துகொண்ட ஆண்களும், பெண்களும் தெரிவித்துள்ளனராம். இந்த வயதில்தான் பெண்கள் அழகாகவும், கவர்ச்சிகரமாகவும், பார்ப்பதற்கு பிடித்தமானவராகவும் இருப்பதாக அந்தக் கருத்துக் கணிப்பு கூறுகிறது.

இதைக் கண்டுபிடிப்பதற்காக 2000 ஆண் மற்றும் பெண்களிடம் கருத்து கேட்டுள்ளது க்யூவிசி என்ற ஷொப்பிங் தொடர்பான தொலைக்காட்சி நிறுவனம். முப்பது வயது தொடங்கும் போதுதான் ஒரு பெண் மேலும் அழகாகிறார், கவர்ச்சிகரமாக மாறுகிறார் என்பது கருத்துக் கணிப்பில் கலந்து கொண்டவர்களின் கருத்தாகும். மேலும், இந்த வயதில்தான் மிகவும் இளமையோடும், பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கிறார்கள். இதற்கு? காரணம், அவர்களிடம் அதிகரித்துள்ள தன்னம்பிக்கையே காரணமாக இருக்கும் என்பதும் இவர்களின் கருத்தாகும்.

30 முதல் 31 வயது வரையிலான பெண்கள்தான் மிகவும் ஸ்டைலாகவும், எழிலாகவும் இருக்கிறார்களாம். தோற்றப் பொலிவு மட்டுமல்லாமல் அவர்களது சிந்தனை, செயல்பாடு ஆகியவையும் கூட அழகாக மாறிவிடுகிறது இந்த வயதில் என்பது கருத்துக் கணிப்பு முடிவு.

பெண்கள் 31 வயதில் தன்னம்பிக்கை மிகுந்தவர்களாக இருக்கிறார்கள் என்று 70 சதவீதம் பேரும், அழகான தோற்றத்துடன் இருப்பதாக 67 சதவீதம் பேரும், ஸ்டைலாக இருப்பதாக 47 சதவீதம் பேரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

வயது ஏற ஏறத்தான் பெண்களுக்கு அழகு கூடுகிறது என்று 63 சதவீதம் பேர் கூறியுள்ளனர். அதேசமயம், வயது ஏற ஏற பெண்களுக்கு அலட்சியப் போக்கு அதிகரித்து விடுவதாக இதே அளவிலான நபர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அதேபோல வயது ஏற ஏற பெண்கள் தங்களை மிகவும் பெருமையாக உணர்வதாக 51 சதவீதம் பேர் கூறியுள்ளனர்.

இதேபோல இந்த வயதில் ஆண்கள், பெண்களை விட அதிகம் செலவழிக்கிறார்களாம்-தங்களை அழகுபடுத்திக் கொள்வதற்காக. ஜிம்முக்குப் போவதிலும், தலையலங்காரத்தை கவனமாக பார்த்துக்கொள்வதிலும் இந்த வயது ஆண்கள் அதிக சிரத்தை எடுக்கிறார்களாம்.

கருத்துக் கணிப்பை மேற்கொண்ட குழு இதுகுறித்துக் கூறுகையில், ஒரு பெண்ணின் அழகு என்பது அவருடைய புறத் தோற்றத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல. மாறாக நம்பிக்கை, அழகு, ஸ்டைல் ஆகியவையும் இணைந்ததே என்பதை இந்தக் கருத்துக் கணிப்பு நிரூபிப்பதாக உள்ளது என்று கூறியுள்ளது.

ஐஸ்வர்யா ராயின் அழகு நாளுக்கு நாள் கூடுவதற்கும் இதுதான் காரணமோ...?

# நெத்தலி அப்பம்



**தேவையான பொருட்கள்**

நெத்தலி மீன் 1/4 கிலோ, கோதுமை மா 1/4 சுண்டு, பச்சை மிளகாய் 05, வெங்காயம் 10, கறிவேப்பிலை சிறிதளவு, தேங்காய் எண்ணெய் 1/4 போத்தல், உப்பு ருசிக்கேற்ப

**செய்முறை**

நெத்தலி மீனை தலையை நீக்கி நன்றாக கழுவி சுத்தம் செய்து ஒரு பாத்திரத்தில் போடவும்.

நறுக்கிய பச்சை மிளகாய் சின்ன வெங்காயம் கறிவேப்பிலை உப்பு சேர்த்து கரண்டியால் கிளறிவிடவும்.

இக்கலவையில் அவிக்காத கோதுமை மாவையும் சேர்த்து சிறிதளவு நீரையும் தெளித்து உருண்டைகளாக்கவும்.

அடுப்பில் தாச்சியை வைத்து எண்ணெய் விட்டு நன்கு கொதித்த பின்னர் நெத்தலியை அப்பத்தினைப் போட்டு பொரித்து எடுத்து காய்ந்த பாத்திரத்தில் போடவும்.

வாசனை உள்ள இவ் அப்பத்தினை சிறியவர் முதல் பெரியவரை உண்டு மகிழலாம்.

**முக்கிய குறிப்பு**

பெரிய நெத்தலி மீனாக இருந்தால் இரண்டு துண்டுகளாக வெட்டி விடலாம்.

ஆக்கம் (வி.சி)

# பழக்கலவைப் பானம்



**தேவையான பொருட்கள்**

தோடம்பழச்சாறு - 1 மே.கரண்டி, பசன் பழச்சாறு - 1 மே.கரண்டி, எலுமிச்சம் பழச்சாறு - 1 தேக்கரண்டி, அன்னாசிப் பழத்துருவல் - 1 மே.கரண்டி, சீனி - 1 மேசைக்கரண்டி, தண்ணீர் - 2 டம்ளர், றோஸ் எசென்ஸ் - 1 தேக்கரண்டி, உப்பு நீர் - 1 தேக்கரண்டி


**செய்முறை:** கொதித்தாறிய நீரில் சீனியைச் சேர்த்து வடித்துக் கொள்ளவும். அந்நீருடன் தோடம்பழம் பசன் பழம் எலுமிச்சை பழச்சாறுகளையும் உப்பு றோஸ் எசென்ஸ் அன்னாசிப் பழத்துருவல் யாவற்றையும் சேர்க்கவும்.

குளிரூட்டியில் வைத்து அல்லது ஐஸ்கட்டிகளைச் சேர்த்துப் பரிமாறிக் கொள்க.

அன்னாசிப்பழத் துருவலுக்குப் பதிலாக அப்பிள் பழத்துருவலையும் சேர்த்துக் கொள்ளலாம்.

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.ஓசை வீரகேசரி.கிளைக் காரியாலயம்
117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடவுள் எம்முடன் இருக்கிறார்

ஒவ்வொரு கிறிஸ்து பிறப்பு விழாவும் கடவுள் நம்முடன் இருக்கிறார் என்னும் உண்மையையே எமது செவிகளில் ஒலித்து நிற்கின்றது. 'கன்னிப் பெண் கருத்தாங்கி ஒரு மகனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவார்' என்று எசாயா இறைவாக்கில் கூறப்பட்டது போலவே இயேசு இம்மானுவேலாக, அதாவது நம்மோடு இருக்கும் கடவுளாக அவதரித்தார். இறைவனை எங்கேயோ தொலைவில் வானவெளிகளுக்கும் அப்பால் எம்மோடு இருப்பவராக அநுபவிப்பது ஆழமான ஆன்மிக அனுபவத்துக்கு எம்மை இட்டுச் செல்லும்.

### தமிழர் எம் நிலை

தமிழ் மக்களாகிய எமது இன்றைய நிலை மிகவும் பரிதாபமானதாகவே இருக்கிறது. அரசியல் சூழல் எந்த நம்பிக்கையும் தருவதாக இல்லை. தமிழ் மக்கள் தமது இனத்துவ அடையாளத்தைப் பேணியவர்களாக இந்த மண்ணில் கௌரவமாக வாழக்கூடிய சூழல் ஒன்று தோன்றுவதற்கான எந்த அறிகுறியும் காண முடியவில்லை. சமூக ரீதியாக அடித்தட்டு மக்கள் தமது உண்மையான உணர்வுகளையும் கருத்துக்களையும் வெளியிட அமைப்புக்களோ வழிவகைகளோ அற்றவர்களாக மௌனப் பார்வையாளர்களாக்கப்பட்டுள்ளனர்.

பண்பாட்டுத்தளம் சீர்குலைந்து போவதையும் திசையற்ற நடத்தைப் போக்குக்குள் இளைய தலைமுறை தள்ளப்படுவதையும் காணுகின்றோம். இந்நிலை பற்றி எந்த வித அக்கறையும் அற்றவர்களாக மக்கள் தலைவர்கள் எனப்படுவோர் தமது நிலைகளைத் தக்கவைப்பதிலும் அது தொடர்பான பாராட்டுக்கள், கௌரவிப்புக்கள், கொண்டாட்டங்கள் போன்றவற்றை விமரிசையாக முன்னெடுப்பதிலும் ஆர்வமாக இருப்பதைக்காணுகிறோம். இந்த நிலையில் எம் துன்பத்துக்கு விடிவில்லையா? எமது வாழ்வுக்கு விடிவில்லையா? என்ற ஒற்றைப் பெருமூச்சு மட்டும் எம் மக்களிடம் எஞ்சி நிற்கிறது.

### கடவுள் எங்கிருக்கிறார்?

கடவுள் இருக்கிறாரா? அப்படியானால் அவர் எங்கே? என்ற வினா சாதாரணமாக சிந்திப்பவர்கள் மனதில் எழத்தான் செய்கின்றது. இது மிகவும் பொருத்தமான உள்ளார்ந்த தேடலுக்கான இக்காலத்துக்கு தேவையான வினாவே.

இரண்டாம் உலகப்போர் காலத்தில் ஜேர்மனியில் உள்ள நாசிப்படை முகாம் ஒன்றில் நடந்ததாக பின்வரும் சம்பவம் கூறப்படுகிறது. எமது வினாவுக்கு விடைகாண திசையைக் காட்டுவதாக இச்சம்பவம் அமையக்கூடும்.

நாசிப்படைகள் யூதமக்களை வகைதொகையின்றி கைதுசெய்து அவர்களைத் தமது சிறையில் அடைத்தனர். கட்டாய கடின உழைப்பும், சித்திரவதைகளும் அங்கு மலிந்திருந்தன. இச்சிறைச்சாலைகளில் இருந்து யூதக் கைதிகள் தப்பிச்செல்வதைத் தடுக்க அவர்கள் கொடூரமான நடைமுறை ஒன்றைப் பின்பற்றி வந்தனர். யாராவது ஒரு யூதர் சிறையிலிருந்து தப்பிச் சென்றால் அதற்கு தண்டனையாக சிறைக்கைதிகளில் பத்துப்பேர் எழுந்தமானமாக தெரிவுசெய்யப்பட்டு பகிரங்கமாக மரண தண்டனைக்கு உட்படுத்தப்படுவர். இந்த பயங்கரவாதத்தைப் பார்க்கும் ஏனைய சிறைக்கைதிகள் தப்பி ஓடாதிருக்கவே இந்த ஏற்பாடு.

குறிப்பிட்ட சிறையொன்றிலிருந்து ஒரு கைதி தப்பி ஓடிவிட்டால் வழக்கப்படியே அவர்கள் பத்துப் பேரைப் பிடித்து தூக்கில் தொங்கவிட்டனர். இம்முறை அகப்பட்டவர்களுள் ஒருவன் மெலிந்த சிறுவன். அவன் தூக்கில் தொங்கி மரணமாக நீண்ட நேரம் எடுத்தது. அவன் துடிதுடிப்பதை பலரும் வேதனை மிகுந்த விழிகளோடு நோக்கிக்கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவன் விரக்தியின் விளிம்பில் 'கடவுள் இருக்கிறாரா?' அப்படியானால் அவர் எங்கிருக்கிறார்? இச்சிறுவன் இவ்வாறு துன்புறுகையில் அவர் என்ன செய்துகொண்டிருக்கிறார்? என முணுமுணுத்தான்.

அவனது விரக்தியின் வசனங்களைக் கேட்டபடி அவர் அருகில் நின்ற ஒருவர் 'கடவுள் அதோ அந்த சிறுவன் உருவில் துடித்துக் கொண்டிருக்கிறார்' என்று அமைதியாகக் கூறினார்.

### துடிதுடிக்கும் இறைவன்

கடவுளை சக்தியின் ஊற்றாகவும், அடக்கி ஆளும் வல்லவராகவும் சிந்தித்து பழகிய எமக்கு எமது அயலவரில் துடிக்கும் ஒருவராக துன்பத்தின் துணைபடுபவராக அல்லது வரவேண்டியவராக நாம் இறைவனைப் பார்க்கிறோமே தவிர துணைவேண்டித் துன்பப்படுபவராக நாம் அவரைப் பார்ப்பதில்லை. ஆயினும் துணை கேட்டுத் துடிக்கும் கையறு நிலையில் இறையோனைக் காண்பது கிறிஸ்தவ நம்பிக்கையைப் பொறுத்தவரையில் உறுதியான ஒரு மரபாகவே இருந்து வருகிறது.

'பசியாயிருந்தேன் எனக்கு உணவு கொடுத்தாயா? தாகமாய் இருந்தேன் எனக்கு குடிக்க கொடுத்தாயா? அந்நியனாய் இருந்தேன் என்னை வரவேற்றாயா? ஆடையின்றி இருந்தேன் என்னை உடுத்தினாயா? நோயுற்றும் சிறையிலும் இருந்தேன் என்னைப் பார்க்க வந்தாயா?' என்ற இயேசுவின் வார்த்தைகள் கடவுள் நம்முடன் துன்புறும் வடிவிலும் இருக்கிறார் என்ற ஆழமான உண்மையையே வெளிப்படுத்துகிறது.

### ஆடம்பரத்தில் அல்ல

கிறிஸ்மஸ் என்றால் ஆடம்பரம், வியாபாரம், கொண்டாட்டம், ஆடல், பாடல், கரோல், அழகிய ஆராதனைகள், தின்பண்டங்கள் என்று வரையறுத்து வைத்திருக்கிறது இன்றைய உலகு. ஆனால் இது கிறிஸ்து பிறப்பின் நோக்கத்திற்கு முரணானது. வறியவரிலும் துயர் அளப்பவரிலும், துன்புறுபவரிலும் இருக்கும் இறைவனைக் கண்டு பிடிக்கவும் அவர்களின் துயர் துடைக்கவும் வழிவகுத்து நிற்கும் ஒரு விழாவே கிறிஸ்த பிறப்பு விழாவாகும்.

இந்த கிறிஸ்து பிறப்பு விழாவை பொருளுள்ளதாக்க விரும்பினால் இந்த நாளில் ஒரு ஏழைக்கு உதவிசெய்ய, ஒரு நோயாளியை தரிசிக்க, போரினால் பாதிக்கப்பட்ட ஒரு சிறுவனுக்கு உதவிசெய்ய, முன்வாருங்கள். நிச்சயம் நீங்கள் கிறிஸ்து தரிசனம் பெறுவீர்கள்.

அருள்பணி ம.றி.கி. இரவிச்சந்திரன்

## மனித இழையில் ஒரு புனித விளக்கு

*விண்ணகத்து வெண்ணிலவாய்*
*மண்ணகத்து ஒளியாக வந்துதித்த பாலகனே*
*மனுக்குல மீட்சிதனை மனதில் கொண்டு பிறந்தவரே*
*முழு மனித விடுதலைக்காய் முத்தாக உதித்த இரத்தினமே*
*எம் மண்ணில் விடுதலைக்காய் மீண்டும்*
*பிறந்திடுவீர் இவ்வையகத்தில்.*

*இழையோடும் சோகங்கள் எம்மை விட்டு மறைந்திடவும்*
*சொல்லொணாத் துயரங்களால் பட்ட துன்பம் மறைந்திடவும்*
*கருகிய நம் வாழ்க்கையில் மீண்டும் புத்துயிர் பெற்றிட*
*வந்திடுவாய் எம்மிடையே.*

*உறவுகளை இழந்த உள்ளங்கள் ஒன்றுசேர்ந்திடவும்*
*உண்மை அன்பு பிறரில் மலர்ந்திடவும்*
*அடிமை வாழ்வு அடியோடு விலகிடவும்*
*அடக்குமுறைகள் முற்றாக அழிந்திடவும்*
*பசியும் பட்டினியும் நம்மவரை விட்டு பறந்தோடிடவும்*
*பிறந்திடுவாய் பாலகனே நம் வாழ்வில்.*

*உலகப் போக்கில் வாழும் மனிதனின்*
*நிலைதனை மாற்றிடுவாய் பாலகனே!*
*உலகமயமே வாழ்வு என்று எண்ணுவோரை*
*கண்ணோக்கும் பாலகனே!*
*எப்படியும் வாழலாம் என்போரின் எண்ணம்*
*மாற்றிடும் தெய்வமே!*
*உண்மையும் நீதியும் மண்ணில் மலர்ந்திடவும்*
*மனித நேயம் புனித ஒளியாய் வீசிடவே*
*உள்ளத்து தூய்மையும் நல்லெண்ண செயல்களும்*
*நானிலத்தில் பரவிட வழிகாட்டும் தெய்வமே*

*மண்ணில் விழும் தூறலும் தூமியும் நின்று போனாலும்*
*நிலத்தில் விழுந்த ஈரங்கள்*
*எப்போதும் நிலைத்திருக்கும் அது*
*மண்ணிற்கு நிச்சயம் ஒருநாள் பயன் அளித்திடும்*
*அதுபோல இறைவழி தனில் என்றும்செல்லும்*
*மனித இதயங்களில் ஓர் புனித*
*விளக்காய் வந்திடு எம் பாலகனே!*
*உரிமைக்கு குரல் கொடுக்கவும்*
*உண்மைக்கு சான்று பகரவும்*
*உற்ற தோழனாய் வந்திடு பாலகனே!*
*எம் அனைவருக்கும் வாழ்வளித்திடு தெய்வமே என்றும்*
*வாழ்வளித்திடு தெய்வமே!*

யே.அனுஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மலர்



## இயற்கையின் விலைமதிப்பற்ற சொத்து



வீணாவின் தந்தையின் நண்பரான சஞ்சய் ஒரு நிறுவனத்தில் விஞ்ஞானியாகப் பணி புரிபவர். தண்ணீரின் சிக்கனப் பாதுகாப்பு பற்றிய ஒரு கருத்தரங்கில் கலந்து கொள்ள வந்திருந்தவர். வீணாவின் வீட்டுக்கும் வந்தார்.

''மார்ச் 22 ஆம் திகதியை தண்ணீர் சிக்கனப் பாதுகாப்பு தினமாகக் கொண்டாட ஐ.நா. சபை முடிவெடுத்துள்ளது''. பொது மக்களிடம் அதைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதே அதன் நோக்கம். எங்கள் நிறுவனமும் அதைப் பற்றிய ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபட்டுள்ளது'' என்றார்.

''அது அவ்வளவு முக்கியமான விஷயமா?'' என்று கேட்டாள் வீணா. ''ஆம். இயற்கை நமக்கு அளித்துள்ள சொத்துக்களில் விலை மதிக்க முடியாதது தண்ணீர். நமது பூமி 70 சதவீதம் தண்ணீரால் சூழப்பட்டிருந்தாலும் 99 சதவீதத்திற்கும் அதிகமான தண்ணீரை மக்களால் உபயோகிக்க முடியாது. மீதமுள்ள தண்ணீரும் நமக்குக் கிடைப்பதில்லை. குறைவாக உள்ள குடி நீரும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது'' என்றார் அவர்.

''மாமா, தண்ணீரை சேமிக்க நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டாள் வீணா, ''முதலில் தண்ணீரை தேவைக்கு மேல் பயன்படுத்தி வீணாகக் கூடாது. தோட்டத்து செடிகளுக்கு ரப்பர் குழாய் மூலம் தண்ணீர் பாய்ச்சுவதைத் தவிர்த்து, பூவாளியைப் பயன்படுத்த வேண்டும். அது போலவே, கார், வாகனங்களை கழுவி சுத்தம் செய்ய வேண்டும்'' என்றவர் தொடர்ந்து ''குழாயை தண்ணீர் சொட்டும் படி விடாமல் இறுக மூட வேண்டும். ஒழுகும் குழாய்களை உடனடியாகப் பழுது பார்க்க வேண்டும்'' என்றார்.

''இன்றிலிருந்து நான் தண்ணீரை வீணாக்க மாட்டேன்'' என்றாள் வீணா.



ச.தரணிகா தரம் 3C
யா/புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்



இரண்டு படங்களுக்கும் ஐந்து வித்தியாசங்கள் உண்டு. கண்டுபிடியுங்கள்.



[illegible] தரம் 01
யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்



யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல்பெற்ற மாணவர்களையும் பாராட்டும் வைபவத்தில் 158 புள்ளிகளை பெற்ற மாணவி செல்வி. பைரவி தனஞ்செயனை பிரதம விருந்தினரான யாழ். பல்கலைக்கழக சட்டத் துறைத் தலைவர் பேராசிரியர் மா. சின்னத்தம்பி பாராட்டிக் கௌரவிப்பதை படத்தில் காணலாம்.



செ.அகனிதா தரம் 3D
யா/இந்து ஆரம்பப் பாடசாலை



ஆங்கில தின தேசியமட்ட மனனப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ். புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலய மாணவன் உதயகுமாரன் விதுஷனுக்கு யாழ். மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தங்கப்பதக்கம் சூட்டிக் கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

சிறுவர்களே உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**

யாழ் ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, [illegible] வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தற்போது பெய்துவரும் மழைகாரணமாக 'ஏ -9' வீதி மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளது. கிளிநொச்சி டிப்போ சந்திக்கு அருகாமையில் ஏற்பட்டுள்ள குழிகளில் நீர் தேங்கிநிற்பதையும் பாதசாரிகள், வாகன ஓட்டுநர்கள் மிகவும் சிரமத்துக்கு உள்ளாவதையும் படங்களில் காணலாம்.

(படப்பிடிப்பு:- வண்ணார்பண்ணை)

# வீதி ஓரங்களில் கட்டடம் அமைப்பதற்கு வீதி அதிகார சபையின் அனுமதி தேவை

## வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்

(யாழ். மத்தி நிருபர்)

"வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உட்பட்ட வீதி ஓரங்களில் அமைக்கப்படும் கட்டிடங்கள் சம்பந்தமாக பொது வழிகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் குறித்த பகுதிக்குப் பொறுப்பான நிறைவேற்று பொறியியலாளருக்கு ஒரு மாத காலத்துக்கு முன் எழுத்து மூலம் கொடுக்காமல் எந்தவொரு கட்டட வேலைகளைச் செய்வதோ அல்லது மறைப்போ அமைப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்."

இவ்வாறு யாழ். வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் எல்லையில் கட்டடம் கட்ட உத்தேசிக்கும் காலத்துக்கு ஒரு மாதத்துக்கு முன்பே கட்டட அனுமதி விண்ணப்பங்களை எமக்கு அனுப்பவேண்டும்.

பொது வழிகள் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்படி குறித்த பகுதிக்குப் பொறுப்பான நிறைவேற்று பொறியியலாளரால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரமில்லாமல் கட்டட வரையறைக்குள் கட்டுமானத்தைக் கட்டுவது, உடைத்தவற்றையோ உடைக்கப்பட்ட வற்றையோ மீள் நிர்மாணித்தலும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

அதேபோல கட்டுமானமொன்றின் நிறுவுகைக்கு எந்த முகவராண்மையின் அல்லது அதிகார சபையின் அங்கீகாரம் தேவைப்படுகின்றதோ அவர்கள் பொது வழி கட்டளைச் சட்டத்தின் கீழ் 24 ஏ பிரிவின்படி நிறைவேற்றுப் பொறியியலாளரால் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றின் அதிகாரம் இல்லாமல் கட்டட வரையறைக்குள் கட்டுமானத்தின் நிறுவுகைக்கான அங்கீகாரத்தை வழங்கலாகாது.

ஆனால் கட்டட விண்ணப்பங்கள் அங்கீகாரம் சம்பந்தமாக சரியான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படாமையும் வெவ்வேறு உள்ளூராட்சி சபைகள் வெவ்வேறான நடைமுறைகளைக் கடைப்பிடிப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

பல சந்தர்ப்பங்களில் எதுவித முன்னறிவித்தலோ உரிமமொன்றின் அதிகாரமோ இன்றி கட்டடங்கள் அமைப்பதும் சில கட்டிடங்களுக்கு நிறைவேற்றுப் பொறியியலாளரால் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றின் அதிகாரமில்லாமல் பிரதேச சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது.

இதனால் வழக்குகள் தொடரவேண்டிய நிலையும் கட்டப்பட்ட கட்டடங்கள் இடிக்க வேண்டிய நிலையும் ஏற்படுகிறது. இதனால் பொதுமக்களுக்கு நட்டமும் அதிகாரிகளுக்கு மேலதிக வேலையும் ஏற்படு கின்றது.

அண்மையில் கட்டட வரையறைக்குள் அனுமதியின்றி அமைக்கப்பட்ட கட்டடமொன்றின் உரிமையாளரிடம் வினவிய போது ஒரு உப அலுவலகத்தினால் வழங்கப்பட்ட அனுமதியை காட்டினார்.

இவ்விண்ணப்பம் நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு அனுப்பப்படாமலும் நிறைவேற்று பொறியியலாளரால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரம் இல்லாமலும் இவ் உப அலவலகத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

உப அலுவலக அலுவலரிடம் இது தொடர்பாகக் கேட்டபோது, சரியான கட்டட வரையறை தூரம் வரைபடத்தில் காட்டப்பட்டதால் அதை அங்கீகரித்ததாகக் கூறினார்.

ஆனால் வரைபடத்தில் காட்டிய தூரத்திற்கு ஏற்ப கட்டடம் அமைக்கப்படவில்லை. கட்டடம் வீதிப் பக்கமாக நகர்த்தப்பட்டுள்ளது.

எனவே வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதி ஓரங்களில் அமைக்கப்படும் கட்டிடங்கள் எவற்றுக்கும் நிறைவேற்றுப் பொறியியலாளரால் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றின் அதிகாரமில்லாமல் அங்கீகாரத்தை வழங்கலாகாது.

வீடமைவுச் சான்றிதழ் வழங்க முன் கட்டிடம் சரியான தூரத்தில் அமைந்துள்ளதா எனப் பரிசோதிக்க வேண்டும்.

அத்துடன் வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டத்தின் 15(1) ஆம் பிரிவின் படி அமைவுச் சான்றிதழ் வழங்கும் முன் இக்கட்டிடம் பாவிக்க அனுமதிக்கக் கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வலி. வடக்கில் மீள்குடியமர்ந்தோருக்கு பயன் தருமரங்கள் விநியோகம்

தெல்லிப்பளை

வலி. வடக்கில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட தெல்லிப்பளை, இளவாலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வட மாகாண நிர்வாகத் திணைக்களத்தினால் தென்னங்கன்று , மா , பலா , மாதுளை , பப்பாசி , எலுமிச்சை முதலிய பயன்தரு மரக் கன்றுகள் அடுத்த வாரம் முதல் விநியோகிக்கப்படவுள்ளதாக தெல்லிப்பளைப் பிரதேச சபை உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள் ளார்.

அண்மையில் 431 குடும்பங்களுக்கு ஆயிரத்து 724 வாழைக்குட்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான உதவிகளை வழங்க யு.என்.டி.பி. என்ற அரச சார்பற்ற நிறுவனம் முன்வந்துள்ளது.

இந்த நிறுவனத்தினரால் தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மீளக்குடியமர்ந்தவர்களின் தேவைகளை மதிப்பீடுசெய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப் பகுதியில் குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தினையும் சுற்றுச் சூழலையும் மேம்படுத்த யுனிசெப் மற்றும் சேவாலங்கா போன்ற நிறுவனங்கள் உதவி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஒ/228 கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் மீள்குடியமர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த சிறார்களுக்கான முன் பள்ளிக் கட்டிடத்தை சிறுவர் பாதுகாப்பு நிதியம் அமைத்து வருகின்றது.

# திருவாசக சொற்பொழிவு

யாழ்ப்பாணநிருபர்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் திருவாசக சொற்பொழிவு இன்று பிற்பகல் 4.00 மணிக்கு அச்சேழு மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'திருவாசகம்' எனும் தலைப்பில் சைவப்புலவர் நிதியதசீதரன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

அதேவேளை, எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை புன்னாலைக்கட்டுவன் திடப்புலம் நரசிங்க வைரவர் ஆலயத்திலும் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணத்தில் புதிதாக 90 ஆசிரிய ஆலோசகர்கள் நியமனம்

அச்சுவேலி

வடக்கு மாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களிலும் உள்ள ஆசிரியர் ஆலோசகர் பதவி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு 90 ஆசிரிய ஆலோசகர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கான நியமனங்கள் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் வழங்கப்பட்டுள்ளன. ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நியமனம் பெற்ற கல்வி வலயங்களில் தமது பதவிப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளவுள்ளனர்.

வலயக் கல்வி அலுவலக ரீதியாக நிலவிய ஆசிரிய ஆலோசகர் பதவி ஆளணியில் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாகாணக் கல்வித் திணைக்களம் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி தெரிவு செய்யப்படவேண்டிய ஆளணிக்கு பாட ரீதியாக போட்டிப் பரீட்சை நடத்தி அதில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப் படையில் நேர்முகத் தேர்வு இடம்பெற்றது. இதன் பின்னர் நேர்முகத்தேர்வில் சித்தியெய்தியவர்களுக்கு மாகாணக் கல்வித் திணைக்கள கல்விப் பணிப்பாளரால் நியமனம் வழங்கப்பட்டன.

ஆசிரிய ஆலோசகர் ஆளணியை நிரப்புவதற்கு இலங்கை ஆசிரியர் சேவை தரம் I வகுப்பு 2:I ஆகியவற்றைச் சேர்ந்தவர்களிலிருந்து தகுதியானர்கள் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும். ஆனால், சில பாடத்துறைகளுக்கு தகுதி உடையவர்கள் விண்ணப்பிக்காமையினால் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2:II ஐச் சேர்ந்தவர்களும் இந்தமுறை தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆசிரியர் ஆலோசகர் சேவைக்கு வருபவர்களின் வாண்மையை மேல் நிலைப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படவிருப்பதோடு அவர்களுக்கு மாதாந் தம் வழங்கப்படும் மேலதிக கொடுப்பன வையும் மூவாயிரம் ரூபா வீதம் வழங்கு வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் கிராமங்களில் பயிற்சிநிலையம்

ஏழாலை

யாழ். மாவட்டத்தில் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் கிராமங்களில் தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இவ்வருடம் மீள் எழுச்சித்திட்டத்தின் நிதியுதவியுடன் சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள தவசிக்குளம் கிராமத்தில் 14 இலட்சம் ரூபா செலவில் பயிற்சிநிலையம் ஒன்றும் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தோமை யார் கிராமத்தில் 14 இலட்சத்து 54 ஆயிரம் ரூபா செலவில் தொழில் பயிற்சி நிலையம் ஒன்றும் அமைக்கப்படவுள் ளது.

வேலைத் திட்டங்கள் பயனாளிகளின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் ஏற்கனவே கடந்த வருடத்தில் யாழ். மாவட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முள்ளானை கிராமத்திலும், உடுவில் பிரதேச செயலர் பிரிவிலுள்ள புதுமடம் கிராமத்திலும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இருளன், கொக்கானை ஆகிய கிராமங்களிலும் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் அந்திரான் கிராமத்திலுமாக ஐந்து பயிற்சி நிலையங்கள் 58 இலட்சம் ரூபா செலவில் மக்களின் பங்களிப்புடன் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கான வேலைத் திட்டங்களுக்கான நிதியுதவியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக உலக வங்கி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள்

க.பொ.த. உயர்தர பரீட்சையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் சித்தியடைந்த மாணவர்ள் பெற்ற பெறுபேறுகள் வருமாறு:-

**கணிதப்பிரிவு**

கே.லக்சனா 2C, S

**கலைப்பிரிவு**

செல்வி.கே.தர்மசுகி 3A (மாவட்ட நிலை - 17), கே.கனிமொழி 2A, B(மாவட்ட நிலை - 49), மு.ஜெயப்பிரசாத் 2A,C, ஜ.சயந்தா A, 2B, கே.மயூரதி A, B, C, ச.டிலோஜினி A, B, C , த.பாதுஜா A, B, C, ப.சிவச்சந்திரன் A, B, C, ஜி.ரஜிதா A, 2C, பவிதா A, 2C இ.பராசக்தி A, 2C, ச.தர்சன் A, 2C, ச.ஜெனிஸ்ரா A, 2C தி.கிருத்திகா A, B, S.

**வணிகப்பிரிவு**

ந.மேரிசெலஸ்ரினா 2A, B (மாவட்ட நிலை - 62), இ.மாலதி 2A, B (மாவட்ட நிலை - 81), க.கயல்விழி A, B, C.

**உயிரியல் பிரிவு**

சி.தாரணி 2B,C, அ.அன்ரன் தனேஸ் 2B, C, எஸ்.தாரணி 2B, C.

## புதிய சித்திரத் தேர்

(வட்டுக்கோட்டை நிருபர்)

மருதனார்மடம் - ஸ்ரீ சுந்தர ஆஞ்நேயர் ஆலயத்திற்குப் புதிதாக சித்திரத் தேர் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இப் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா ஜனவரி முதலாம் திகதி நண்பகல் 12 மணிக்கு ந[illegible] பரிபாலன சபை அறிவித்துள்ளது.



பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை வளாகத்தில் டெங்கு ஒழிப்புத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை பொலிஸார் கழிவுப் பொருட்களை அகற்றும் பணியில் ஈடுபட்டிருப்பதையும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லலித்புசல்ல கண்காணிப் பதையும் படத்தில் காணலாம். (படம்:- வடமராட்சி நிருபர்)

# நெடுந்தீவுக்கு படகில் பயணிப்போருக்கு பாதுகாப்பு அங்கிகள் விநியோகம்

ஏழாலை

நெடுந்தீவுக்கு போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பயணிகள் படகுகளுக்கு பயணிகளுக்கான பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்படவுள்ளது.

நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்கு பயணிகள் சேவையில் ஈடுபடுத் தப்படும் படகுகளுக்கு பயணிகள் பாதுகாப்பு அங்கிகளினை சொண்ட் நிறுவனம் வழங்கவுள்ளது.

மேற்படி பயணிகளுக்குரிய பாதுகாப்பு அங்கிகளை 'சொண்ட்' நிறுவனம் மாவட்ட செயலகத்தின் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும், இதன்முதல் கட்டமாக முந்நூறு பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது நெடுந்தீவுக்கான சேவையில் ஈடுபடுத்தப்படும் படகுகளில் பயணம் செய்யும் பயணிகளின் பாதுகாப்புக் கருதியே பயணிகளுக்கான பாதுகாப்பு அங்கிகள் விரைவில் உரிய படகுச் சேவையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

# வர்த்தகர்கள் தமது கடைகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்

## ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி

(வட்டுக்கோட்டை நிருபர்)

"வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருக்க வேண்டும். கட்டாக்காலிகளாக வீதிகளில் திரியும் கால் நடைகளைப் பொது மக்கள் கட்டுப்படுத்த வேண்டும்."

- இவ்வாறு காரைநகர் பிரதேசத்தின் சுகாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பாக நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.ஐ. கருணாதிலக தெரிவித்தார்.

கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலய ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வுக்கு காரைநகர் பிரதேச சபையின் செயலாளர் இ.லோகநாதன் தலைமை வகித்தார்.

பிரதேச சபையின் செயலாளர் தனது உரையில், பொதுமக்கள் பிரதேச சபைக்குச் செலுத்தவேண்டிய வரிகளைக் காலதாமதமின்றிச் செலுத்தி பிரதேசசபையின் அபிவிருத்தி வேலைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் புது வருடத்துக்கான வியாபார உரிமங்கள், வரிகள், வாகனங்களுக்கான வரிகள் என்பவற்றை 2011 மார்ச் 31க்கு முன்னர் பெற்று பிரதேச சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

காரைநகர் சுகாதாரப் பரிசோதகர் தனது உரையில், விற்பனை நிலையங்களில் காலாவதியான பொருட்கள் மற்றும் விற்பனைக்குத் தடைசெய்யப்பட்டுள்ள பொருட்களை வர்த்தகர்கள் வைத்திருந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் விற்பனைப் பொருட்களைக் காட்சிப்படுத்தும்போது சுகாதார விதிமுறைகளைப் பேணப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

நோய்த்தடுப்பு முறைகள் பற்றியும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் பற்றியும் எடுத்துக்கூறி பிரதேச சுகாதாரத்தைப் பேணுவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஈழத்துச் சிதம்பிரத்தில் நடைபெற்ற இறுவட்டு வெளியீட்டின்போது யாழ். பல்கலைக்கழக இசைத்துறை சிரேஷ்டவிரிவுரையாளர் செல்வி பரமேஸ்வரி கணேசனைப் பாராட்டி யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை விருதி வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம். (படம் வட்டுக்கோட்டை நிருபர்)

# யாழில் மீள்குடியமர்வதற்காக நூறு முஸ்லிம் குடும்பங்கள் வருகை

லாபிர்

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறுவதற்காக 100 முஸ்லிம் குடும்பங்கள் தென் பகுதியிலிருந்து வந்துள்ளனர்.

யாழ். பிரதேச செயலகத்தில் யாழ்ப்பாண முகவரியுடன் தமது பதிவினை மீண்டும் புதுப்பித்துள்ளார்கள். வந்திருப்பவர்களின் வீடுகள் முற்றுமுழுதாக சேதமடைந்துள்ளது. சிலர் வீடற்றவர்களாக உள்ளனர்.

மீள்குடியேற வந்துள்ளவர்கள் யாழ். வண்ணார்பண்ணை முஸ்லிம் கலவன் பாடசாலையில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளர். இவர்கள் அரச நிவாரண உதவிகளையும் மற்றும் அடிப்படைத் தேவைகளையும் எதிர்பார்த்துள்ளார்கள். இவர்களுக்கான உணவுகளை மக்கள் வழங்கி வருகின்றனர்.

யுத்தம் முடிவடைந்த பின் யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறுவதற்காக 650 முஸ்லிம் குடும்பங்கள் வந்துள்ளன. இவர்களின் முதல் பிரச்சினை வீடாகும். இவர்களில் இப்பிரச்சினையைத் தீர்க்க அரச நிர்வாகமும் முஸ்லிம் கட்சிகளும் முன் வரவேண்டுமென இப்பகுதியின் எழுச்சியில் அக்கறை உடையோர் எதிர்பார்க்கின்றனர்.

இதேவேளை கிராம அலுவலர் ரவீந்திரதாஸ், யாழ். முஸ்லிம் மக்கள் அனைவரும் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக தேர்தல் இடாப்பின் பதிவதற்காக குடும்ப அங்கத்தவர்களின் பெயர்ப் பட்டியலைப் பூர்த்தி செய்து கையளிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தால் 'சிதம்பர தரிசனம்' இறுவட்டு வெளியீடு

(வட்டுக்கோட்டை நிருபர்)

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் தயாரித்த 'சிரதம்பர தரிசனம்' இறுவட்டின் வெளியீட்டு விழா ஈழத்துச் சிரதம்பர வசந்த மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

கிழவன்காடு கலாமன்ற தலைவர் ந. சோதிநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ. பாலசுந்தரம் பிள்ளை பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டார்.

யாழ். பல்கலைக்கழக இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இசைக் கலைமாமணி காரை பரமேஸ்வரி கணேசன் பாடிய ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியாரின் கீர்த்தனைகள் இந்த இறுவட்டில் உள்ளன. மேற்படி இறுவட்டினை வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வெளியிட்டு வைத்தார்.

இசைஞான திலகம் கலாபூஷணம் வயலின் வித்துவான் உ. இராதாகிருஷ்ணன் முதற் பிரதியை வழங்க கிழவன்காடு கலாமன்ற கௌரவ உறுப்பினர் புரவலர் சண்முக சிவஞானம் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

கீர்த்தனைகள் பாடிய பரமேஸ்வரி கணேசனுக்கு பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி பாலசுந்தரம்பிள்ளை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

இவ் இறுவட்டில் பாடல்களுக்கு இசை வழங்கிய வயலின் இசைக்கலைமாமணி கே. குகபரன், மிருதங்க இசைக் கலைமாமணி பி. ரமணன், தவில் லயஞான சொரூபன் பி.நர்மதன், கெஞ்சிரா லய ஞான பாலன் எஸ்.செந்தில்நாதன், முகர்சிங் கலைஞர் கலாவித்தகர் கே. நந்தகுமார் ஆகிய கலைஞர்களும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

## காரைநகர் கோட்டக் கல்வி அலுவலக திறப்பு விழா

(வட்டுக்கோட்டை நிருபர்)

காரைநகர் கோட்டக்கல்வி அலுவலகத் திறப்பு விழா எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் வி. இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர்.

## ஆண்டு விழா

பளை

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அமைந்துள்ள சிற்றாலய ஆண்டு விழா எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இலங்கை மெதடிஸ்த திருச்சபை பருத்தித்துறை - கட்டைவேலி சேகர முகாமைக் குரு அருட்திரு என். அருள்நாதன் தலைமையில் இவ் ஆலயத்தின் ஆண்டு விழா நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

## முருக நாம பஜனை நிகழ்வு

வடமராட்சி

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் முருக நாம பஜனை இன்று 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறுகின்றது.

பிரதி வெள்ளி தோறும் நடைபெற்று வரும் வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் இடம்பெறும் இந்த பஜனையை சந்நிதி முருகன் அடியார்கள் ஒன்றிணைந்து நிகழ்த்துகின்றனர்.

## மிதி வெடி விழிப்புணர்வு நிகழ்வு

ஏழாலை

'சொண்ட்' நிறுவனத்தினால் மிதி வெடி தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசம் மற்றும் அதற்கு அருகிலுள்ள கிராமங்களில் மிதி வெடி விழிப்புணர்வு நடவடிக்கையினை சொண்ட் நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

மிதி வெடி விழிப்புணர்வு நாடகத்தினை மக்கள் மத்தியில் காட்சிப்படுத்தி விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குப்பிளான், மயிலங்காடு, வசாவிளான், இளவாலை மற்றும் பன்னாலை ஆகிய கிராமங்களில் மிதி வெடி விழிப்புணர்வு நாடகம் காட்சிப் படுத்தப்பட்டு வருகிறது.

## ஆன்மிகச் சொற்பொழிவு

வடமராட்சி

வடமராட்சி அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவிலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு 'கிருஷ்ண வழிபாடு' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இச் சொற்பொழிவை யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலய ஆசிரியர் காரை எம்.பி. அருளானந்தம் நிகழ்த்துவார்.

பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிறு தோறும் நடத்தப்பட்டு வரும் ஆன்மிக நிகழ்வு வரிசையில் இச் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# கிராம அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்குடன் மீள் எழுச்சித் திட்டம்

யாழ்ப்பாணம்

கிராமத்தின் அபிவிருத்தியையும் மக்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தும் நோக்குடன் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் கிராம அபிவிருத்திச் சங்கமும் கிராம அபிவிருத்தி அமைப்பும் ஒன்றாக இணைந்து துரிதமாகச் செயற்படவிருக்கின்றது.

இதற்கான ஒழுங்குகளை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

மக்களின் நலன் கருதி வடக்கு மாகாண சபை இத்திட்டத்தை அமுல்படுத்த முன்வந்துள்ளது. இதற்கெனப் புதிய யாப்பை உருவாக்குவதில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

இது சம்பந்தமாக வடக்கு மாகாண சபை சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபங்களுக்கு அமைவாக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலுமுள்ள மூன்று கிராம உத்தியோகத்தர் பகுதிகளிலும் இயங்கி வரும் மூன்று கிராம அபிவிருத்திச் சங்கங்களையும் மூன்று கிராம அபிவிருத்தி அமைப்புக்களையும் ஒன்றாக இணைத்துச் செயற்படுத்துவதற்கான ஒழுங்குகளைக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த இணைப்புத்திட்டத்தின் கீழ் வலி. தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள சுதுமலை வடக்கு, மானீசன்கூடல், முள்ளானை ஆகிய மூன்று கிராம உத்தி யோகத்தர் பிரிவிலுமுள்ள கிராம அபி விருத்திச் சங்கங்கள், கிராம அபிவிருத்தி அமைப்புகள் இணைக்கப்பட்டுச் செயற்பட ஆரம்பித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தித் திட்டங்களுக்காக பெறப்படும் பொருட்களை பொது நோக்கத்தினடிப்படையில் பயன்படுத்த வேண்டும்

## மத்திய மாகாண சபை உறுப்பினர் உதயகுமார்

கொத்மலை

பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டிலிருந்து அபிவிருத்திட்டங்களுக்காக பெறப்படுகின்ற பொருட்கள் பொது நோக்கத்தின் அடிப்படையில் பயன்படுத்த வேண்டும். அத்தோடு அவற்றைப் பாதுகாப்பதிலும் பயனாளிகள் அக்கறை செலுத்த வேண்டும்.பொதுமக்களின் கோரிக்கைக்கேற்ப பெற்றுக் கொடுக்கப்படுகின்ற இந்தப் பொருட்கள் மக்களுக்குரியதாகும் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித்தலைவரும் மத்திய மாகாணசபை உறுப்பினருமான எம்.உதயகுமார் தெரிவித்தார்.

தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து கொத்மலைப்பிரதேச தோட்டப்பகுதிகளின் அபிவிருத்தி திட்டங்களுக்காக பெறப்பட்ட பொருட்களை கொத்மலை பிரதேச சபை மண்டபத்தில் அண்மையில் பயனாளிகளுக்கு வழங்கி வைத்து பேசிய போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கொத்மலைப்பிரதேச சபை உறுப்பினர்களான அந்தனிராஜ் சிவகுமார் உட்பட தொழிலாளர் தேசிய சங்கத்தின் கொத்மலை, பூண்டுலோயா பிரதேச முக்கியஸ்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

எம். உதயகுமார் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது-

கடந்த காலங்களில் மக்கள் பிரதிநிதிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி பொது மக்களின் பயன்பாட்டுக்கு நேரடியாக உட்படுத்தப்படவில்லை என்றதொரு குற்றச்சாட்டு உள்ளது.

இதனைக்கருத்தில் கொண்டு மத்திய மாகாணசபை உறுப்பினராக செயற்படுகின்ற நான் எனக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியிலிருந்து பெறப்படுகின்ற பொருட்களை பிரதேச சபைகள் பிரதேச செயலகங்கள் ஊடாக மக்களுக்கு வழங்கி வருகின்றேன்.

இதன் மூலம் இந்தப் பொருட்கள் உரிய பயனாளிகளைச் சென்றடையும் என்று திடமாக கருதுகின்றேன். எனது இந்த முன்மாதிரியான செயற்பாட்டினை மத்திய மாகாணத்தின் ஏனைய உறுப்பினர்களும் கடைப்பிடிக்கத்தொடங்கியுள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

மாகாணசபை உறுப்பினர்களுக்கு அதிகாரமில்லை அபிவிருத்தித்திட்டங்களுக்காக சிறியளவான நிதியே வழங்கப்படுகின்றதென்று நாம் வெறுமனே இருந்து விடமுடியாது. கிடைக்கின்ற நிதி 25 இலட்சமாகவிருந்தாலும் இந்த நிதி முழுமையாக மக்களுக்குச் சென்றடைய வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

இந்த நிலையில் மத்திய மாகாணசபை முதலமைச்சரின் ஒத்துழைப்புடன் நுவரெலியா மாவட்டத்தில் தோட்டக்குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்கும் திட்டமொன்றினையும் முன்னெடுத்து வருகின்றேன். அத்துடன் மத்திய மாகாணத்திலுள்ள ஏனைய அமைச்சர்களுடன் தொடர்பு கொண்டு மேலும் பல அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றேன்.

# வரவு- ஊக்குவிப்பு நிதியை கணக்கிட்டு நிலுவையை ஜனவரியில் வழங்க பணிப்பு

இறத்தோட்டை,

அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான இறத்தோட்டையை அடுத்துள்ள நிக்களோய தோட்டத் தொழிலாளர்களுக்கு கடந்த இரண்டு மாத சம்பளத்துடன் கொடுபடாமல் விடுபட்ட வரவுப் பணம் ரூபாய் 90 மற்றும் உற்பத்தி ஊக்குவிப்புத் தொகையான ரூபா 30 ஆகியவற்றைக் கணக்கிட்டு நிலுவைப் பணத்தை ஜனவரி 10 ஆம் திகதிக்கு முன் வழங்கும்படி மாத்தளை தொழில் திணைக்கள தொழில் அதிகாரி செல்வி ருவனி மெனிக்கே தோட்ட நிர்வாகத்துக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நாட் சம்பளமான ரூபாய் 405 நிக்கலோயா தோட்டத் தொழிலாளருக்கு முழுமையாக வழங்கப்படுவதில்லை என்ற புகாரையடுத்து லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனின் முக்கியஸ்தர்கள் தோட்டத்துக்கு நேரடியாகச் சென்று விபரங்களைச் சேகரித்து வந்ததன் பின் இது குறித்து மாத்தளை தொழில் திணைக்களத்துக்கு விடுத்திருந்த முறைப்பாட்டைத் தொடர்ந்து 22 ஆம் திகதி நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இவ்வாறு தோட்ட நிர்வாகத்துக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

தொழில் திணைக்களத்தில் தொழில் அதிகாரி ருவனி மெனிக்கே தலைமையில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையின்போது யூனியன் சார்பில் அதன் பொதுச் செயலாளர் எஸ். இராமநாதன், நிதிச் செயலாளர் ஆர். நடராஜா, தோட்ட அதிகாரி சி.எஸ். அலதெனிய ஆகியோர் கலந்து கொண்டனர்.

2009 ஆம் ஆண்டு கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதிலிருந்து இவ்வாறு கொடுபடாமல் விடுபட்டுள்ள சம்பளப் பணம் இருப்பின் அதனையும் கணக்கிட்டு நிலுவையுடன் பெற்றுத் தரும்படி இப்பேச்சுவார்த்தையின் போது வலியுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மின்சாரப் பொறியில் சிக்கி உடல் கருகி விவசாயி மரணம்

(பண்டாரவளை மேலதிக நிருபர்)

காட்டு விலங்குகளிடமிருந்து பயிர்ச் செய்கையைப் பாதுகாக்கும் நோக்கில் அமைக்கப்பட்டிருந்த மின்சாரப் பொறியில் சிக்கி விவசாயி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் ஊவா- பரனகம பகுதியில் கடந்த 21 ஆம் திகதி இடம் பெற்தாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இந்த மின்சாரப் பொறிக்கு அகப்பட்டு உயிரிழந்த நபர் ஒரு பிள்ளையின் தந்தையான ஊவா பரணகம கிரவணாகம என்ற இடத்தைச் சேர்ந்த டி.எம். டிக்கிரிபண்டா (வயது 39) என பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

குறித்த விவசாயி சில தினங்களுக்கு முன் தனது தோட்டத்தில் போடப்பட்ட உருளைகிழங்குப் பயிர்களைப் பாதுகாக்கவேண்டி மின்சார கம்பிகளை அமைத்துள்ளார்.

சம்பவதினம் குறித்த தோட்டத்துக்கு சென்ற அவர்தவறுதலாக அக்கம்பியில் சிக்கி உடல் கருகி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊவா- பரணகம பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# ரூ.2 இலட்சம் கப்பம் கோரி வர்த்தகரின் மனைவி கடத்தல்

(செங்கடகல)

இரண்டு இலட்சம் ரூபா கப்பம் கோரி வர்த்தகரின் மனைவி இனந் தெரியாத கோஷ்டியினரால் கடத்தப்பட்டுள்ளதாக தம்புள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் மூலிகைப் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர் ஒருவரின் மனைவியே நேற்று முன்தினம் இவ்வாறு கடத்தப்பட்டவராவார்.

பொருளாதார மத்திய நிலையத்திற்கு முச்சக்கர வண்டியில் வந்த சிலரே இவரை கடத்திச் சென்றுள்ளதாகவும் இவரை விடுவிப்பதற்கு இரண்டு இலட்சம் ரூபாவை கப்பமாகத் தருமாறு கையடக்க தொலை பேசி மூலமாக கோரிக்கை விடுத்துள்ளதாகவும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து தம்புள்ள பொலிஸாரும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வந்த நிலையில் குறித்த வர்த்தகரின் மனைவி கொழும்பு பிரதேசத்தில் கை விடப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை தம்புள்ள பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# பதுளையில் பன்றிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நபர் கண்டு பிடிப்பு

(பண்டாரவளை மேலதிக நிருபர்)

. பதுளைப் பகுதியில் முதலாவதாக பன்றிக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நபரொருவர் தியத்தலாவை மாவட்ட வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக தியத்தலாவை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பன்றிக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ள குறித்த நபர் தியத்தலாவை கஹகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகின்றது.

# சீமெந்து ஏற்றிச் சென்ற லொறி 300 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்து; சாரதி பலி

## இருவர் படுகாயம்; வெலிமடையில் சம்பவம்

(பண்டாரவளை மேலதிக நிருபர்)

கெப்பெட்டிபொல கிரிந்திஎல்ல நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டத்துக்கு சீமெந்து ஏற்றிச் சென்ற லொறியொன்று சுமார் 300 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி உயிர் இழந்துள்ளதோடு அதில் பயணித்த மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் கடந்த 21 ஆம் திகதி வெலிமட கெப்பட்டிப்பொல கில்டன் தோட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்த லொறிச் சாரதி வெலிமட - நுகத்தலாவ திமுதுகம பகுதியைச் சேர்ந்த எச்.எல்.சுஜீவ புஸ்பசமன் லியனகே (வயது 44) என பொலிஸார் தெரிவிப்பதுடன் படுகாயமடைந்த இருவரில் ஒருவர் பதுளை பொது வைத்தியசாலையிலும் மற்றையவர் வெலிமட வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தனர்.

கெப்பெட்டிபொல பிரதேசத்தில் அமைக்கப்பட்டு வரும் கிரிந்திஎல்ல நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டத்துக்கு நூறு சீமெந்து மூடைகளை ஏற்றிக்கொண்டு கெப்பெட்டிபொல - கில்டன் தோட்டத்தின் ஊடாக மேற்படி லொறி பயணித்துக் கொண்டு இருந்த வேளையிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வெலிமட பொலிஸார் விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# HIV நோயிலிருந்து எதிர்கால சமூகத்தை பாதுகாப்போம்



சர்வதேச HIV/AIDS தினத்தையொட்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் நடாத்தப்பட்ட பாடசாலை மட்டத்திலான கட்டுரைப்போட்டியில் முதலாமிடத்தை பெற்றுக்கொண்ட யா/ அளவெட்டி அருணோதயா கல்லூரிமாணவன்

**உதயகுமார் அகிலனின் கட்டுரை**

(சென்றவாரத் தொடர்ச்சி)

அத்துடன் பாலியல் நடவடிக்கைகளை அங்கீகரித்து விபசார விடுதிகளை நடாத்தவும் அனுமதி வழங்கி உள்ள நாடுகளிலும் எம்மவர்கள் ஆயிரக்கணக்கிலே உள்ளனர். அப்படியான விபசார விடுதிகளில் விபசாரிகளிடம் வாங்கிய எயிட்ஸை இங்குள்ள ஏதுமறியாத அப்பாவிப் பெண்

> **எயிட்ஸினால் உருவாகக் கூடிய கொடுமைகள் இறப்புகளையும் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொள்ளுதல் மிகமிக அவசியம் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு காலடி எடுத்துவைப்பவர்களுக்கு விமான நிலையத்தில் வைத்தே குருதிப் பரிசோதனை செய்யப்பட வேண்டும். என்பதை வலியுறுத்தி அதைச் சட்டமாக்க வேண்டும்.**

களிடம் விட்டுச்செல்லக் கூடிய வாய்ப்பு உள்ளது. இது இவ்வாறு இருக்க பல வருடங்களாக இங்கு நடைபெற்ற யுத்தத்தை காரணம் காட்டி இந்தியா மற்றும் தமிழ் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அகதிகளாக தங்கியிருந்தவர்களும் யுத்தம் நிறைவடைந்த நிலையில் யாழ்.மாவட்டம் நோக்கி வருகின்றனர். இந்தியா, தமிழ் நாட்டில் பல மில்லியன் எயிட்ஸ் நோயாளிகள் உள்ளனர். சிவப்பு விளக்கு பகுதி என்கின்ற விபசார விடுதிகள் பகிரங்கமாகவே இயங்கி வருகின்றது. அங்கு குளிர் காய்ந்தவர்கள் எங்கள் மண்ணிலே எச்.ஐ.வி.யைக் கொட்டிவிடப் போகின்றனர். இவையெல்லாம் கடுமையாக சிந்திக்க வேண்டிய விடயங்களாக வேண்டும்.

எயிட்ஸ் இன்று உலகில் மிகவும் அஞ்சப்படும் ஒரு கொடிய நோய். அது வந்தால் வாழ்வு கசங்கிவிட்டது; கருகிவிட்டது என்று தான் பொருள் அத்தகைய பயங்கரமான நோய் பயங்கரமான செயல்களில் இருந்துகூட சிலவேளைகளில் தப்பிவிடலாம். ஆனால், எயிட்ஸில் இருந்து யாருமே தப்பி பயங்கரவாத செயல்களினால் ஏற்படும் பயங்கரவாதத்தை விட மிகப் பயங்கரமானது எயிட்ஸின் தாக்கம் நாகத்தின் நஞ்சிலிருந்து தப்பலாம்; துப்பாக்கி ரவையில் இருந்து தப்பலாம்; எம் மண்ணில் கோரத்தாண்டவம் ஆடிய இறுதிக்கட்ட யுத்தத்தின் பிடியில் இருந்து கூட லட்சக்கணக்கிலானவர்கள் உயிர் பிழைத்துள்ளனர். ஆனால் எயிட்ஸில் இருந்து யாருமே தப்பமுடியாது. போர் ஒன்று முடிந்துவிட்டது என்று எவ்வளவு தூரம் ஆனந்தப்பட்டவர்கள் எல்லாம் இன்றைக்கு மாவட்டத்தில் நடந்து கொண்டிருக்கும் கலாசார பிறழ்வுகளைப் பார்த்து மனம்வெதும்பும் நிலையே உள்ளது. இத்தகைய மாறிவரும் - வந்து கொண்டிருக்கக் கூடிய ஆபத்தான விளைவுகளையும் சம்பவங்களையும் வெறுமனே பார்த்துக்கொண்டிருப்பது எம்மை நாமே அழித்து எமக்காகவும் எம் உறவுக்காகவும் இறப்பதற்கு முதலே புதைகுழி ஒன்றை வெட்டிவைக்கும் நிலைமைக்கு ஒப்பானதாகும். இதற்கு பாடசாலைகள், பொது அமைப்புக்கள் மற்றும் வைத்தியசாலைகள் பொது மக்கள் கூடும் இடங்கள் என்று விழிப்புணர்வுப் பிரசாரங்களை மேற்கொள்வதன் மூலம் நிறைய பயன் அடையமுடியும். எயிட்ஸ் என்று சொல்லப்படுகின்ற உயிர்க்கொல்லி நோய் பாலியல் நடைவடிக்கைகளினால் மட்டுமே ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குத் தொற்றிக்கொள்கின்றது என்கின்ற உண்மையை அவர்களுக்கு விளங்க வைக்க வேண்டும்.

ஏனைய நோய்களுக்கு மருந்துகள் இருக்கின்றபோதிலும் இந்த உயிர் கொல்லி எயிட்ஸுக்கு இதுவரை மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்கின்ற உண்மையை மக்களுக்கு தெரிவு படுத்த வேண்டும். போரின் கோரப்பிடியில் சிக்கி கணவன்மாரை இழந்துள்ள ஆயிரம் ஆயிரம் விதவைகள் உள்ளனர். இவர்களில் 18, 20, 22 வயதுகளிலும் விதவைகள் இருக்கின்றனர். இந்த வயதில் விதவைகள் என்ற செயலை நினைத்துப் பார்க்க நெஞ்சு வலிக்கின்றது இவர்கள் கலாசாரப் பிறழ்வுகளில் ஈடுபடாமல் இருக்கும் வகையில் வெள்ளம் வரும் முன் என்பதற்கு அமைவாக நடவடிக்கை எடுப்பதுடன் இளைஞர்கள் இவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்க முன்வர வேண்டும். மனிதாபிமான நடவடிக்கையாக இளைஞர்கள் கருதி செய்வார்களேயானால் யாழ். குடாநாடு எதிர்கொள்ளக் கூடிய பாரிய சமூகச் சீரழிவுகளை முளையிலே கிள்ளக்கூடியதாக இருக்கும் என்பதுடன் எதிர்காலத்தில் எயிட்ஸினை எதிர்கொள்ளக்கூடிய சவால்களில் இதுவும் ஒன்றாக கருதமுடியும் எம்மை நோக்கி வந்து கொண்டிருக்கக்கூடிய [illegible] கொள்வதற்கான சவால்களை எதிர்கொண்டு வெற்றி பெறுவதே எமக்கு இருக்கும் ஒரே வழியாக இருக்கின்றது.


எச்.ஐ.வி. என்ற எயிட்ஸினை எமக்கு கிட்ட நெருங்கவிடாது தடுப்பது அவசியம். அதற்கு ஒருவனுக்கு ஒருத்தி என்ற வாழ்வே சிறப்பானதாக அமையும். தெரியாத, அறிமுகம் இல்லாதவர்களுடன் பாலியல் உறவினைத் தவிர்த்தல் அவசியம். போதைப்பொருள் பாவனையை முற்றாக ஒழித்துக்கட்ட வேண்டும், இணையத்தளம் மூலம் படமாக பெறக் கூடிய ஆபாசப் படங்களையும், கைத் தொலைபேசி மூலம் பார்க்கக் கூடிய படங்களையும் தடைசெய்ய வேண்டும், இள வயதினரிடையே அதிகரித்துச்செல்லும் காமக்கிளர்ச்சியை கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும், அவர்களுக்கு போதிய விளக்கம் அளித்து, நல்வழிப்படுத்தி சமூக மாற்றங்களை உருவாக்க வேண்டும்.

மூலைக்கு மூலை முளைகொண்டு வரும் விபசார விடுதிகளை தடை செய்யவும், கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவதும் அவசியமானது மட்டுமல்ல, காலத்தின் கட்டாய தேவையும் கூட. விபசரிகளுக்கு மறுவாழ்வு கொடுத்து மன்னித்து சமூகத்தில் வாழக் கூடிய வழிகளை உருவாக்கி கொடுத்தால் அவசியமானது எயிட்ஸினால் உருவாக்கக் கூடிய கொடுமைகளையும் இறப்புகளையும் பற்றி பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கையில் மேற்கொள்ளுதல் மிகமிக அவசியம். வெளிநாடுகளில் இருந்த இலங்கைக்கு காலடியெடுத்து வைப்பவர்களுக்கு விமான நிலையத்தில் வைத்தே குருதிப் பரிசோதனை செய்யப்பட வேண்டும். என்பதை வலியுறுத்தி சட்டமாக்க வேண்டும்.

ஒரு காலத்தில் யாழ்.குடாநாட்டின் கலாசாரம் உண்ணத நிலையில் இருந்தது, எமது கலாசார பண்பாட்டினை வியந்து போற்றினார்கள், ஒருவனுக்கு ஒருத்தி என்னும் மகோன்னத வாழ்க்கை நடாத்தியவர்கள் எம்மவர்கள். திருமணம் ஆகாத பெண்கள் ஆண்களுடன் நேரெதிரே நின்று பேசுவதற்கு நாணும் அளவுக்கு இறுக்கமான குடும்பச் சூழலை பிரதிபலிக்கும் உயர்பண்பாடு, தமிழரின் விழுமியத்தை பாதுகாப்பாக ஒவ்வொரு செயற்பாட்டிலும் கலாசார அடையாளப்படுத்தக்கூடியதாக இருந்தது.

எனவே தான் ஒரு இனத்தின் ஆணிவேறாக அவ் இனத்தின் கலாசாரம் திகழ்கின்றது. கலாசாரம் பண்பாட்டில் அழிவுகள் சிதைவுகள் ஏற்படுமிடத்து அவ் இனத்தின் அழிவென்பது தவிர்க்க முடியாததாகிவிடும் எனவே எம் இனத்தின் அழிவுகளுக்கு நாமும் கோடரிக்காம்புகளாகவும், பாத்திரவாளிகளாகவும் இருக்க போகின்றோமா? சிந்திப்போம்! செயற்படுவோம்'. **(முற்றும்)**

## ஆன்மிக ஓசை



**படைப்பும், அழிப்பும், எல்லாவற்றின் ஆதாரமும், தங்குமிடமும், நித்தியமான விதையும் நானே.**

**- கிருஷ்ணர்**



**கர்த்தர் நன்மையானதை தருவார்; நம்முடைய தேசமும் தன் பலனைக் கொடுக்கும்**

**- சங்கீதம்**



**தர்மம், இறைவனது கோபத்தை அணைத்துவிடும். துர்மரணத்தை தடுக்கும்.**

**- நபிகள் நாயகம்**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் பிரபலமானவர்கள் வரிசையில்...



## தமிழ் இசை நாடக கலைஞர் வி.வி.வைரமுத்து

## இவரைப் பற்றி 25

**இலங்கை தமிழ் இசை நாடக வரலாற்றில் முடிசூடா மன்னனாக என்றும் இருப்பவர் வி.வி.வைரமுத்து. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர், வட பகுதியில் பிரசித்தி பெற்று விளங்கிய இசை நாடகத்தின் பல துறைகளில் தனக்கென ஒரு தனி முத்திரையை பதித்தவர். இன்று இசை நாடகத்தை யாழ்.மக்கள் மறந்துவிட்டாலும், சகலகலாவல்லவனாக விளங்கிய வைரமுத்துவை மறந்திருக்க மாட்டார்கள். யாழ்ப்பாண கலை வரலாற்றில் பதிவான இவர் பற்றி சில குறிப்புக்கள் இங்கே.......**

- யாழ்ப்பாணத்தில் துறைமுகத்துக்குப் பெயர் போன காங்கேசன்துறைச் சேர்ந்த வேலப்பா - ஆச்சிக்குட்டி தம்பதியினருக்கு மகனாக 1924 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி வைரமுத்து பிறந்தார்.
- 1929ஆம் ஆண்டு காங்கேசன் துறை சைவ வித்தியாலயத்தில் தனது ஆரம்பக்கல்வியை ஆரம்பித்தார்.
- வைரமுத்து ஆங்கில மொழி அறிவோடு நல்ல உயர் கல்வியைப் பெற வேண்டும் என்று விரும்பிய பெற்றோர், அவரை தமது குடும்ப நண்பரான க.முருகேசு ஆசிரியரிடம் ஒப்படைத்தனர்.
- 1932 ஆம் ஆண்டு கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் 3 ஆம் வகுப்பில் வைரமுத்து சேர்த்துக் கொள்ளப்பட்டார்.
- பாடசாலைகளில் படிக்கும் காலத்தில் வைரமுத்து முதல் முதலாக நடித்த இசை நாடகம் 'அப்பூதியடிகள்' இதில் அப்பூதியடிகளாக நடித்து பலரின் பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டார்.
- இசையில் அதிக ஆர்வம் இருப்பதைக் கண்ட வளர்ப்புத் தந்தையான க.முருகேசு அவரை சங்கீதம் கற்பதற்கும், ஆர்மோனியம் பயில்வதற்கும் சேர்த்துவிட்டார்.
- அக்காலத்தில் ஈழத்திலிருந்து இந்தியாவிற்குச் சென்று கலைகளைக் கற்றுக்கொள்வது வழக்கம். 1941 தொடக்கம் 1942 வரை மதுரையில் வித்துவான் செல்லப்பிள்ளையிடம் வைரமுத்து முறையாக கர்நாடக சங்கீதம் கற்றார்.
- இரண்டு வருடங்களில் சங்கீத வித்துவானாகவும், நாடக நுணுக்கங்களை அறிந்த ஒரு நடிகனாகவும் பாலபண்டிதராகவும் நாடு திரும்பினார்.
- யாழ்ப்பாணப் பெற்றோரிடையே அன்று தொடக்கம் இன்று வரை இருந்து வரும் ஆசை பிள்ளைகள் அரசாங்க வேலை பார்க்க வேண்டும் என்பது. இதே போல் வைரமுத்துவின் வளர்ப்பு தந்தையும் விரும்பி வைரமுத்துவுக்கு இரத்தினபுரியில் ஆசிரியர் வேலை வாங்கிக் கொடுத்தார்.
- நாடக் கலையில் ஆர்வமுள்ள வைரமுத்து, அடிக்கடி விடுமுறை எடுத்து யாழ்ப்பாணம் வந்து மேடை நாடகங்களில் நடிப்பார். இதனால் இவரின் ஆசிரியர் வேலை பறிபோனது.
- நடிகமணி 1944 ஆம் ஆண்டு அண்ணாவியார் சின்னய்யாவின் மகள் இரத்தினத்துடன் திருமணம் பந்தத்தில் இணைந்தார்.
- 'ஸ்ரீவள்ளி' நாடகத்தில் வரும் 'காயாத கானகத்தே' அரிச்சந்திர மயான காண்டத்தில் வரும் 'யாரடி கள்ளி நீதான்' என்னும் பாடல்களை வைரமுத்து பாடும் போது, ரசிகர்கள் 'வன்ஸ்மோர் (Once More) வைரமுத்து' எனக் கேட்டு பாடவைப்பார்கள்.
- மேடை நாடகங்களில் பெண் பாத்திரங்களில் நடிக்கும் வாய்ப்பே வைரமுத்துவுக்கு முதலில் கிடைத்தது. 'சத்தயவான் சாவித்திரி' நாடகத்தில் சாவித்திரியாக நடித்துப் பலரின் கவனத்தையும் ஈர்த்தார்.
- மேடை நாடகப் பெண் பாத்திரங்களில் இவர் காட்டி வந்த புதுமைகளையும் நடிப்பு நுணுக்கங்களையும் பிற்காலத்தில் பல கலைஞர்கள் பின்பற்றி வந்துள்ளனர்.
- 'சம்பூரண அரிச்சந்திரா' நாடகத்தில் சந்திரமதியாகவும்,'சத்தியவான்சாவித்திரி' நாடகத்தில் சாவித்திரியாகவும்,'ஸ்ரீவள்ளி' நாடகத்தில் வள்ளியாகவும், 'நல்ல தங்காள்' நாடகத்தில் நல்லதங்காளகவும் பெண் பாத்திரங்கள் ஏற்று நடித்துள்ளார்.
- 1938 ஆம் ஆண்டு தனது 14 ஆம் வயதில் 'சங்கீத கோவலன்' என்னும் இசை நாடகத்துக்கு முதன் முதலாக ஆர்மோனியம் வாசித்துள்ளார்.
- நடிப்பில் இவர் எவ்வளவு சிறப்புற்று விளங்கினாரோ, அதே அளவு நாடகத்துடன் தொடர்புடைய ஏனைய கலைகளிலும் ஈடிணையற்று விளங்கியுள்ளார்.
- 1950 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் மேடையேற்றப்பட்ட 'சம்பூர்ண அரிச்சந்திரா' நாடகத்திலேயே வைரமுத்து முதன் முதலாக அரிச்சிந்திரனாக நடித்தார்.
- 1953 ஆம் ஆண்டு யாழ்.மாநகர சபை மண்டபத்தில் 'மயான காண்டம்' நாடகத்தை பார்த்து ஆச்சரியப்படாதவர்கள் யாருமே இல்லை எனலாம். அந்தளவிற்கு வைரமுத்து தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியிருந்தார்.
- வைரமுத்துவின் வாழ்க்கைக்கு ஒரு திருப்பு முனையாக அமைந்த 'மயான காண்டம்' என்னும் இந்த இசை நாடகம் இலங்கை முழுவதும் மேடையேற்றப்பட்டது.
- 1960 ஆம் ஆண்டு நடிக மணி என்றும், 1964 ஆம் ஆண்டு அமைச்சர் தொண்டமானால் 'நாடகச் சக்கரவர்த்தி' என்றும், 1969 ஆம் ஆண்டு நாடகவேந்தன என்றும், 1970 ஆம் ஆண்டு தந்தை செல்வாவினால் 'நடிப்பிசை மன்னன்' என்றும், 1972 ஆம் ஆண்டு சு.வித்தியானந்தனால் 'கலைக்கோமான்' என்றும் பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
- வைரமுத்துவின் பாடிக்கொண்டே நடிக்கும் திறமையை அறிந்த தென்னிந்திய நடிகர் திலகம் சிவாஜிகணேசன், 'என்னால் கூட இப்படி நடிக்க முடியாது' என பாராட்டியுள்ளார்.
- இசை நாடகத்தில் கொடிகட்டிப் பறந்த நடிகமணி, வானொலி ஒன்றிக்கான நாடக ஒலிபதிவுக்காக கொழும்பு சென்ற போது மாரடைப்பால் 1989.07.09 அன்று மரணமானார்.



அரிச்சந்திரா மயான காண்டத்தில் ஒரு காட்சியில் நடிகமணி வைரமுத்து

தொகுப்பு - அஸ்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிப்பீட்டு 2010

ஜனவரி 3 : சரத்குமார் நடித்த 'ஜக்குபாய்' படம் ரிலீஸ் ஆவதற்கு முன்பே இணையத் தளத்தில் வெளியானதால் பரபரப்பு ஏறப் பட்டது.

ஜனவரி 8 : ஹொலிவுட் படம் 'அவதார்' கோல்டன் குளோப் விருது பெற்றது.

ஜனவரி 25 : இளையராஜா, ஏ.ஆர் ரகுமானுக்கு பத்மபூஷணன் விருது அறிவிக்கப்பட்டது.

பெப்ரவரி 1 : ஏ.ஆர் ரகுமானுக்கு 2 கிராமிய விருதுகள் வழங்கப் பட்டது.

பெப்ரவரி 2 : தன்னை ஏமாற்றி ரூபா 7 கோடி மோசடி செய்தவிட் டதாக நடிகர் சிங்கமுத்து மீது வடி வேலு பொலிஸில் முறைப்பாடு அளித்தார்.

பெப்ரவரி 6 : தமிழ் பெண்களை இழிவாக பேசியதாக நடிகர் ஜெய ராம் வீடு தாக்கப்பட்டது. பின்னர் அவர் மன்னிப்பு கேட்டார்.

பெப்ரவரி 6 : தனது கணவர் முத்துக் குமாரைக் காணவில்லை என்று நடிகை கனகா பொலிசில் புகார் கொடுத்தார்.

பெப்ரவரி 18 : நடிகர் அஜித்குமார் ரசிகர்கள் தனது வீட்டை தாக்கிய தாக ஸ்டன்ட் மாஸ்டர் ஜாக்குவார் தங்கம் சென்னை பொலிஸில் கமிஷனரிடம் முறைப்பாடு கொடுத்தார்.

மார்ச் 3 : சாமியார் நித்தியானந்தாவு டன் நடிகை ரஞ்சிதா நெருக்க மாக இருக்கும் வீடியோ காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

மார்ச் 12 : இயக்குநர் செல்வராகவன் நடிகை சோனியா அகர்வாலுக்கு குடும்ப நல நீதி மன்றம் விவாகரத்து வழங்கியது.

மே 14 : நடிகை குஷ்பு தமிழக முதல்வர் கருணாநிதி முன்னிலையில் தி.மு.கவில் சேர்ந்தார்.

மே 30 : இலங்கையில் நடக்கும் சர்வதேச இந்திய திரைப்பட விழாவில் தமிழ்த் திரை யுலகினர் யாரும் பங்கேற்கக்கூடாது என்று தென்னிந்திய திரைப்படக் கூட்டமைப்பு தீர்மானம் நிறைவேற்றியது.



ஜூலை 12 : 'ரெடி' ஹிந்தி படப்படிப்பிற்காக இலங்கை வந்த அசின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என நடிகர் சங்கம் அறிவித்தது.

ஜூலை 25 : நடிகை மீரா வாசுதேவன் - விஷால் விவாகரத்து பெற்றனர்.

ஆகஸ்ட் 24 : ஆந்திராவில் பிடிபட்ட போதை மருந்து கும்பலுடன் தொடர்பு இருப்பதாக வெளியான தகவலுக்கு நடிகை த்ரிஷா மறுப்புத் தெரிவித்தார்.

செப்ரெம்பர் 16 : ஆபாச எஸ்.எம்.எஸ். அனுப்பிடதாக ராகவேந்திரா என்பவர் மீது வழக்குத் தொடர்ந்து நடிகை சினேகா நீதிமன்றில் கண்ணீர் மல்க சாட்சி அளித்தார்.

அக்டோபர் 1 : 'எந்திரன்' படம் வெளி யானது 2 ஆயிரம் படப்பிரதிகளுடன் உலகம் முழுவதும் வசூலில் சாதனை படைத்தது.

அக்டோபர் 4 : நயன்தாராவிடமிருந்து கணவரை பிரித்து தன்னுடன் சேர் த்து வைக்க வேண்டும் என்று பிரபு தேவாவின் மனைவி ரமலத் குடும்ப நல நீதிமன்றில் வழக்கு தொடர்ந் தார். பின்னர் பிரபுதேவா நயன்தாரா வுக்கு நீதிமன்றம் நோட்டீஸ் அனுப் பியது.


அக்டோபர் 22 : 'பசங்க' படத்துக்கு தேசிய விருது. அதில் நடித்த குழந் தை நட்சத்திரங்களுக்கும் இயக்குநர் பாண்டியராஜூக்கும் விருது கிடை த்தது.

அக்டோபர் 30: 'உன்னையே காதலிப் பேன்' பட வில்லன் வேலு தன்னை திருமணம் செய்ய வற்புறுத்துவதாக பொலிஸில் முறைப்பாடு செய்தார் அப்பட நாயகி பாக்கியாஞ்சலி.

நவம்பர் 7 : தனது தந்தை விஜய குமார், தாய் மஞ்சுளா, அண்ணன் அருண்விஜய், இயக்குநர் ஹரி ஆகியோர் தன்னை தாக்கியதாக பொலிஸில் நடிகை வனிதா முறைபாடு செய்தார். விஜயகுமார் தரப்பு வனிதா மற்றும் அவரது கணவர் மீதும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நவம்பர் 21: 'கர்நாடக முன்னாள் முதல்வர் குமாரசாமிதான் எனது கணவர் எங்களுக்கு குழந்தையும் உள்ளது' என ஒரு பேட்டியில் பரபரப்பாக தெரிவித்தார் குட்டி ராதிகா.

## உதிர்ந்த மலர்கள்



மார்ச். 23 : ஒளிப்பதிவாளர் பி.என்.சுந்தரம்

ஏப். 25 : 'ரயில் பயணங் களில்' ஸ்ரீநாத்

மே. 29 : ஒளிப்பதிவாளர் ராஜ்பரீத்

ஜூன். : 20 வலம்புரி சோமநாதன்

செப். 8 : நடிகர் முரளி

செப்.12 : பாடகி சொர்ணலதா

செப். 30 : இசை அமைப்பாளர் சந்திரபோஸ்

அக். 9 : நகைச்சுவை நடிகர் எஸ்.எஸ்.சந்திரன்

டிச. 12 : இயக்குநரும் ஒளிப்பதிவாளருமான பி.எஸ்.ரங்கதா

## டும் டும் டும்

ஜன். 21 : நடிகை நவ்யா நாயர் - சந்தோஷ் மேனன்

ஜன. 27 : கஞ்சா கருப்பு - சங்கீதா

ஜன. 31 : ஆர்ட் டைரக்டர் சஞ்சய் கிரண் - திலகா

மார்ச். 16 : ராஜஸ்ரீ - புஜங்கரா

மார்ச். 27 : நடிகை ஸ்ரீதேவிகா ரோஹித் - ராமச்சந்திரன்

ஏப். 8 : ரம்பா - இந்திரன்

ஏப். 25 : சிந்து மேனன் - பிரபு

ஆக. 24 : பிரகாஷ்ராஜ் - போனிவர்மா



செப். 3 : சவுந்தரியா ரஜனிகாந்த் - அஸ்வின்

செப். 24 : நடிகர் பாலா - அமிர்தா


டிச. 2 : நடிகர் விஷ்ணு - ரஜினி



இலிங்கன்

மைனா ரீமேக்

ண்மிட்டுள்ளார். டுபாயில் நடைபெ விழாவில் மைனா படம் பங்கேற்றது. கூறுகையில், மைனா படத்தை இந்தி டப் செய்யும் எண்ணம் இல்லை. முற் வுள்ளேன். மே மாதம் இந்தியில் மை



நித்தியானந்தா சீன் சென்ஸர் கட்

பிரபல சாமியார் நி சிகள் வெளியாகி பல கட்ட நினைத்த புதுப் திருந்தனர். வில்லாள வெளியீட்டுக்குத் த சபைக்கு அனுப்பப்ப தேவநாதன் ஆகியோ சொன்னார்கள். படக் வில்லை. இந்தியுடுத் இதுபற்றி படத்தின் சாமியார் நித்யானந்த வைத்திருந்தோம். அ என்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 500 திருநங்கைகளின் கதை

**திருநங்கை** ஒருவர் ஹீரோயினாக நடிக்கும் 'நர்த்தகி' படத்தின் இயக்குநர் விஜய பத்மா கூறியது:



சினிமாவில் திருநங்கைகள் கேலியாகவே சித்தரிக்கப்படுகின்றனர். அவர்களின் வாழ்வில் எவ்வளவு சோகம் ஒளிந்திருக்கிறது அவர்களின் திறமை, காதல், பாசம் போன்ற அத்தனையையும் வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் 500 திருநங்கைகளை சந்தித்து சிறுவயது முதல் அவர்கள் சந்தித்த கஷ்டங்கள், அவமானங்கள் அதை எதிர்கொண்ட விதம் ஆகியவற்றை தெரிந்து கொண்டேன்.

ஆச்சரியப்படத்தக்க உண்மைகள் வெளிப்பட்டன. இதை மையமாக வைத்து 'நர்த்தகி' கதை உருவாகி இருக்கிறது. கல்கி என்ற திருநங்கை ஹீரோயினாக நடித்துள்ளார். இவர் எம்.ஏ.மாஸ் கம்யூனிகேஷன் பட்டம் பெற்றவர். திருநங்கைகளுக்காக கல்யாண வரன் அமைப்பும் நடத்தி வருகிறார். அமெரிக்க அரசு இவரது சேவையை பாராட்டி லீடர்ஷிப் புரோகிராம் என்ற கௌரவம் வழங்கி இருக்கிறது. தனது சொந்த வாழ்வில் சந்தித்த இடையூறுகளையும் இப்படத்தில் வெளிப்படுத்தி இருக்கிறார் கல்கி. ஹீரோவாக விவின் நடிக்கிறார். திருநங்கைகளுக்கென கவுடி, ஹிந்தி கலந்துபேசும் இப்பேச்சை இப்படத்தில் பயன்படுத்தி இருக்கிறோம். இது அவர்களுக்குள் உள்ள ரகசிய மொழி என்பதால் சில வார்த்தைகள் மட்டும் இதில் இடம் பெறுகின்றன. இதை கேட்டு ஈடுபாடுகொண்ட ஜீ.வி.பிரகாஷ்குமார் இந்திய பாரம்பரிய இசை கருவிகளை பயன்படுத்தி இசை அமைத்திருக்கிறார். என்.கேசவன் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

**மைனா** திரைப்படம் பெரிய ஹிட்
...ானது. இப்படத்தை இந்தியில் ரீமேக்
செய்ய டைரக்டர் பிரபுசாலமன் திட்ட
...பற்ற 7 ஆவது சர்வதேச திரைப்பட
... இதில் கலந்து கொண்ட பிரபு சாலமன்
...தியில் ரீமேக் செய்யவுள்ளேன். படத்தை
...ற்றிலும் புதுமுகங்களை வைத்து இயக்க
...மனா படத்தை ரீமேக் செய்ய திட்டமிட்டு
இருக்கிறேன் என கூறினார்.





வருகம்

## கோடம்பாக்கம் செய்தி கேட்டீங்களா?

எதிர்பார்த்த வாய்ப்புகள் வராததால பூர்ண நடிகை வருத்தமா இருக்காராம். இதனால சம்பளத்தையும் குறைச்சிட்டேன்னு தெரிஞ்ச இயக்குநர்களுக்கு தூது அனுப்பிட்டு இருக்காராம்... இருக்காராம்... இருந்தாலும் வாய்ப்புகள்தான் கதவை தட்டலயாம்... தட்டலயாம்....



...நித்தியானந்தா நடிகை ரஞ்சிதாவுடன் உல்லாசமாக இருப்பது போன்ற காட்
...ல மாதங்கள் ஆகி விட்ட நிலையில், அந்த சம்பவங்களை காட்சியாக்கி கல்லா
...ப்பட குழு, தங்கள் படத்தில் நித்தியானந்தா தொடர்பான காட்சிகளை வைத்
...ான் என்ற பெயரில் உருவாகியிருக்கும் அந்த படம்.
... தயாராகியிருக்கும் இப்படம் சென்சார் சான்றிதழுக்காக சமீபத்தில் சென்சார்
...பட்டது. படத்தை பார்த்த அதிகாரிகள், நித்தியானந்தா, காஞ்சிபுரம் அர்ச்சகர்
...ரை பிரதிபலிக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த காட்சிகளை நீக்கச்
...க்குழுவினர் எவ்வளவோ கேட்டும் காட்சிகளை அதிகாரிகள் அனுமதிக்க
...த்து நித்தியானந்தா, தேவநாதன் தொடர்பான காட்சிகள் நீக்கப்பட்டன.
...ர் டைரக்டர்கள் வெற்றிவேல், சூரியன் ஆகியோர் அளித்துள்ள பேட்டியில்,
...ந்தா மற்றும் அர்ச்சகர் தேவநாதன் காட்சிகளை ஒரு பாடலில்தான்
...அதை தணிக்கை குழுவினர் அனுமதிக்காமல் வெட்டி நீக்கி விட்டனர்.

## சினி பிட்ஸ்

- ஏ.ஆர்.முருகதாஸ் தயாரிக்கும் படத்தில் நடிக்கிறார் 'மைனா' அமலா பால்.
- '7ஆம் அறிவு' படத்தின் படப்பிடிப்பு ஸ்ருதி ஹாசன் படித்த பள்ளியில் நடந்தது. அதில் பங்கேற்ற ஸ்ருதி 'இந்த படப்பிடிப்பை பறக்கவே முடியாது. சக மாணவிகளுடன் விளையாடி கழித்த நாட்கள் ஞாபகம் வருகின்றன' என நெகிழ்ந்தாராம்.
- 'துள்ளுவதோ இளமை' படத்தில் அறிமுகமான நடிகர் தனுஷ் சினிமாவில் நுழைந்து 10 வருடம் நிறைவடைந்துள்ளது.
- 'வானம்' பட படப்பிடிப்பில் பைக்கிலிருந்து விழுந்து காயமடைந்துள்ளார் சிம்பு.
- 'அவன் இவன்' படத்துக்காக உடல் எடை கூட்டினார் விஷால். இப்போது எடையை குறைக்க வேண்டும் என அவரிடம் கூறி இருக்கிறார் அடுத்து விஷால் படத்தை இயக்கும் பிரபு தேவா.
- 'சந்திரமுகி' படத்தின் 2 ஆம் பாகமான 'நாகவள்ளி' தெலுங்கு படத்தை ரஜனிக்குத் திடையிட்டு காட்டினார் இயக்குநர் வாசு.
- கமல்ஹாசன், கே.எஸ்.ரவிக்குமாருக்கு வேர்க்கடலை பர்பி என்றால் பிடிக்கும். மதிய சாப்பாட்டுக்குப் பிறகு தவறாமல் சாப்பிடுவார்கள்.
- 'யுவன் யுவதி' படத்தில் நடிக்கும் ரிமா கலிங்கால், நீச்சல் தெரியாவிட்டாலும் சிசல்ஸ் தீவில் நடந்த அண்டர் வாட்டர் காட்சியில் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் நடித்தார்.
- கான்ஸர் குழந்தைகளுக்காக நிதி திரட்ட த்ரிஷா ரசிகர் மன்றம் சார்பில் த்ரிஷாவின் வெவ்வேறு போஸ்கள் அடங்கிய கலண்டர் வெளிவரவுள்ளது.
- ருவிட்டர் மூலம் நிறைய சினிமா நண்பர்கள் கிடைத்துள்ளனர் என மகிழ்ச்சி அடைந்துள்ளார் பிரகாஷ் ராஜ்.
- கன்னடத்தில் நடிக்க வந்த வாய்ப்பை கால்ஷீட் பிரச்சினையால் மறுத்துள்ளார் அஞ்சலி.
- லண்டனில் உள்ள புகழ்பெற்ற மேடம் டுஸாட்ஸ் (Madame Tussauds) மெழுகுச் சிலை அருங்காட்சியகத்தில் விரைவில் சூப்பர் ஸ்டார் ரஜினியின் மெழுகுச் சிலையை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாறிவரும் உலக போக்குகளுக்கு ஏற்ப விவசாய முறைகளிலும் மாற்றங்கள் ஏற்படவேண்டும்

## யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் கூறுகிறார்

**யாழ்.**குடாநாட்டு விவசாயிகளுக்கு நவீன முறையிலான பயிற்செய்கை முறைகளை எதிர்வரும் ஆண்டில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவிக்கின்றார்.

யாழ.ஓசைக்காக நேர்கண்ட போது அவர்,

யாழ்.குடா நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பயிற்செய்கை முறைமைகள் மற்றும் விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாக விரிவாகக் கூறினார்.

யாழ்.குடாநாட்டு விவசாயிகளைப் பொறுத்தவரை பெரும்பாலும் நெற் செய்கையே நம்பியுள்ளனர். வன்னி மாவட்ட விவசாயிகளைப் போலல்லாமல் ஒரு போகத்தை அதுவும் சிறு போகமாகவே நெற்செய்கையை மேற்கொண்டு வருகின்றனர். வன்னிப் பெருநிலப்பரப்பு விவசாயசெய்கைக்கு ஏற்ற நிலமாக இருப்பது மட்டுமன்றி அதற்கான புறச்சூழல்களும் சாதகமாக காணப்படுகின்றன.

குறிப்பாக நீர்ப்பாசனக் குளங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. யாழ். குடாநாட்டில் ஒரு போகத்தை நம்பியே விவசாயிகள் நெற்ச்செய்கையை மேற்கொள்கின்றனர். வட கீழ் பருவப் பெயர்ச்சி மழை இதற்குச் சாதகமாக அமைகின்றது.

தற்போது பருவ நிலை மாற்றங்களாலும் விவசாய உள்ளீடுகளின் விலை அதிகரிப்பதாலும் நெற் செய்கையில் குடாநாட்டு விவசாயிகள் பலர் நாட்டமின்றி இருக்கின்றனர். அத்துடன் இவ்வாண்டு 13,131 ஹெக்ரெயரில் யாழ்.மாவட்டத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால் 10,520 ஹெக்ரெயர் நிலப்பகுதி இதுவரை பயிற்செய்கைகள் செய்யப்படாமல் உள்ளது. இதற்கு பல காரணங்கள் உண்டு. மிதிவெடி அபாயம் மற்றும் உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைகள். பெரும்பாலான விவசாய நிலப்பகுதி தரிசு நிலங்களாக மாற்றமடைந்து வருகின்றன.

எனினும் விவசாயிகளின் நன்மை கருதி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். அதன் ஒரு கட்டமாக விவசாயச் செய்கையில் ஈடுபடுவதற்கு தூண்டுதலாக விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சிக்கருத்தரங்குகள் யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்திலும் மற்றும் விவசாய சம்மேளனங்களினூடாக தேர்ச்சி பெற்ற விவசாய போதனாசிரியர் மூலம் பயிற்சி வழங்கும் நடவடிக்கைகளை மாதம் இருமுறை நடத்தி வருகின்றோம்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரை உணவுப் பயிர்ச்செய்கையும் முக்கியமாக விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. குறிப்பாக யாழ்.குடா நாட்டில் 750 ஹெக்ரெயரில் வாழைச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. வாழைச்செய்கையை பொறுத்த வரை கூடியளவு நீர் பயன்படுத்தப்படுகிறது. விவசாயிகளின் அறிவீனத்தால் அதிகளவு நீரை வாழைகளுக்கு பாய்ச்சும் போது நிலத்தடி நீர் உவர் நீராக மாறும் சாத்தியக்கூறுகளும் அதிகரித்துக் காணப்படுகின்றது. எனவே நீரை அளவுடன் பயன்படுத்த வசதியாக சொட்டு நீர்ப்பாசன முறையை அறிமுகப்படுத்தி பிரதேச ரீதியாக அமுல்படுத்தியும் வருகின்றோம். இது குறித்து விவசாயிகளுக்கு போதிய விழிப்பூட்டல் செயன்முறையை மேற்கொள்வதிலும் அக்கறை காட்டி வருகின்றோம்.



இச் சொட்டு நீர்ப்பாசன முறையானது இலகுவானதும் செறிவான வாழைச் செய்கைக்கு உகந்ததாகவும் வெற்றியளிக்கக்கூடிய முறையாகவும் அமைந்துள்ளது. இது குறித்து வாழைச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு யாழ்.மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. இம் முறை மூலம் நீர்ப்பாசனத்துக்கான நீரின் அளவைக் குறைத்து உற்பத்தியின் தரத்தையும் அளவையும் மேம்படுத்த முடியும்.

அது மட்டுமன்றி சிறுதானியப் பயிர்ச் செய்கையாளர்களுக்குத் தேவையான நாற்றுமேடை தொடர்பான பயிற்சிகளும் எதிர் காலத்தில் வழங்கப்படவுள்ளன. சிறுதானியப் பயிற்செய்கையின் போது விதைகளின் வீண் விரயத்தை தடுக்க நாற்றுமேடைகளில் பயிரிட்டு பின்னர் விளை நிலங்களில் நடும் முறையும் காணப்படுகிறது. புகையிலை, மிளகாய், நெல் முதலிய பயிர்களுக்கு நாற்றுமேடை அமைத்து பயிர்களை பாதுகாப்பாக வளர்த்து அதன் பின்னர் விளை நிலங்களில் நடப்படுகிறது.

இத்தகைய நாற்றுமேடைகள் அமைக்கும் முறைகளில் விவசாயிகள் மத்தியில் போதிய தெளிவின்மை காணப்படுகிறது. இதனால் பல பிரச்சினைகளுக்கு விவசாயிகள் முகம்கொடுத்து வருகின்றனர். மேலை நாடுகளில் காலங்களுக்கு ஏற்ற முறையில் நாற்றுமேடைகளை அமைக்கின்றனர். டெபொக் நாற்றுமேடை, நெரிடோக்கோ நாற்றுமேடை என்பவை நாற்றுமேடைகளில் சிலவாகும். இத்தகைய நாற்றுமேடைகள் மரக்கறிப் பயிற்சிசெய்கைக்கும் சிறுதானியச் செய்கைக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவை குறித்து போதிய விழிப்பூட்டல்கள் செய்யப்படவேண்டும். இதற்கான போதிய வளங்கள் எம்மிடம் இல்லை.

**நேர்காணல்**
**எஸ்.நதிபரன்**

யாழ்.குடாநாட்டில் இப்போது சுமார் 250 விவசாய சம்மேளனங்கள் இயங்கிவருகிறன. அவற்றினூடாக விவசாயிகளுக்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.குடாநாட்டில் தற்போது மாமரச் செய்கை பிரபலமடைந்த வருகிறது. 684.5 ஹெக்ரெயரில் மாமரங்கள் செய்கை செய்யப்பட்டு வருகின்றன. மாமரச் செய்கையில் ஈடுபடுவோர் மாமரங்களின் தரம், உற்பத்தி திறன் என்பனவற்றைக் கருத்தில் கொள்ளாமல் ஈடுபடுகின்றனர். இச் செய்கையில் ஈடுபடுவோர் மாமரங்களை உரியமுறையில் கத்தரித்து வளர்ப்பதன் மூலம் சிறந்த அறுவடையைப் பெறமுடியும். இதனடிப்படையில் விவசாயிகளுக்கு இலவசமாக கத்தரிக்கும் கருவிகள் விவசாய சம்மேளனங்களூடாக வழங்கப்படுகின்றன. அத்துடன் கத்தரித்தல் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

இறுதியாக இந்த நவீன யுகத்தில் அசேதனப் பசளை பயன்படுத்துவதில் விவசாயிகள் அதிக நாட்டம் கொள்கின்றனர். இந் நிலை முற்றிலும் மாறவேண்டும். தற்போது சேதனப்பசளை தயாரிக்கும் முறைகள் எமது திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இயற்கை முறையில் தயாரிக்கப்படும் பசளைகளை விளை நிலங்களுக்கு பயன்படுத்துவதன் மூலம் நிலம் மாசுபடுவதை தடுக்கலாம்.

அசேதனப் பசளையான இரசாயன உரங்களை அதிகளவு பயிர்களுக்கு இட்டால் நிலக்கீழ் நீர் மாசுபடுகின்றன. அத்துடன் விளைநிலங்களும் விரைவில் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றன. அத்துடன் உற்பத்திப் பொருட்களிலும் நச்சுத்தன்மை கலக்க வாய்ப்புள்ளது. இதனால் மனிதர்களுக்கு புற்றுநோய் முதலிய கடும் நோய்கள் தாக்கவும் வாய்ப்புள்ளது. எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு இயற்கையானதும், பாதுகாப்பானதும் செலவு குறைந்ததுமான இயற்கைப் பசளைகளை விளை நிலங்களுக்கு இட்டால் பல்வேறு பாதிப்புக்களைக் குறைக்க முடியும் - என்றார்.

**இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்களின் அளவுகளும் நெல்லின் இனங்களும்.**

AT - 303, AT - 353, AT - 362, BW - 361, BG - 406, AT - 402, H4, பச்சைப் பெருமாள், மொட்டைக் கறுப்பன், பெரிய வெள்ளை

**நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட பிரதேச அளவு - 2010**

88 ஹெக்ரெயர், 703 ஹெக்ரெயர், 426 ஹெக்ரெயர், 38 ஹெக்ரெயர், 35.37 ஹெக்ரெயர், 558 ஹெக்ரெயர், 105 ஹெக்ரெயர், 679ஹெக்ரெயர், 679 ஹெக்ரெயர், 1536 ஹெக்ரெயர், 242 ஹெக்ரெயர்

**மரக்கறிச் செய்கை மேற்கொள்ளப்பட்ட பிரதேசத்தின் அளவு - 2010**

மிளகாய் - 68.75 ஹெக்ரெயர்
சி.வெங்காயம் - 47.04 ஹெக்ரெயர்
கோவா-11ஹெக்ரெயர்
கரட் - 13.5 ஹெக்ரெயர்
பீற்றூட் - 18.5 ஹெக்ரெயர்
தக்காளி - 26.5 ஹெக்ரெயர்
கத்தரி - 27.75 ஹெக்ரெயர்
மரவள்ளி - 37.5 ஹெக்ரெயர்
லீக்ஸ் - 06ஹெக்ரெயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி விருப்பாவணம் மரணத்தின் பின்னர்

'குயில் போல் கூவி வரும் உயில்'

இறுதி விருப்பாணம் (LAST WILL) என்றும் மரண சாதனம் என்றும் உயில் என்றும் பல்வேறு நாமங்களால் அழைக்கப்படும் ஒருவரது மரணத்திற்கு முந்திய சாசனம் அவரது சொத்துக்களை விபரப்பட்டியலாக கொண்டு அமைக்கப்படும்.

'வைத்தியர்களால் முற்றாகக் கைவிடப்பட்ட நோயாளி அடுத்து நாடிச் செல்வது ஒரு பிரசித்த நொத்தாரிசேயாகும்' என இறுதி விருப்பாவணம் பற்றி நகைச்சுவையாகக் கூறுவது உண்டு. ஒருவர் தனது இறுதிக்காலத்தில் தனது சொத்துக்களை மற்றொருவருக்கு ஆதனக்கைமாற்றம் செய்யும் அதிகாரம் பெற்ற ஆவணமே உயில் ஆகும். இந்த உயில் ஒருவரது மரணத்தின் பின்னரே செயல் வடிவம் பெறும். அதுவரை அது எதுவும் பேசாது மௌனமாகவே இருக்கும்.

ஒருவர் தனது மரண சாசனத்தின் மூலம் தனது அசையும் ஆதனங்களையும் அசையாத ஆதனங்களையும் ஆதனக்கைமாற்றம் செய்யலாம்.

ஒரு இறுதி விருப்பாவணத்தின் முதல் பந்தியில் பின்வரும் வாசகம் காணப்படுதல் வேண்டும். உதாரணமாக ஒரு வாசகம்,

'யாழ்ப்பாணம் சுண்டிக்குளி கண்டிவீதி 112ஆம் இலக்க இல்லத்தைச் சேர்ந்த கந்தப்பு அரியராசா ஆகிய நான் வாழ்வின் அநித்தியத்தையும் மரணத்தின் நிச்சயத்தையும் கருத்திற்கொண்டு தெளிந்த சிந்தனையோடும் பூரண அறிவோடும் முழு சம்மதத்துடனும் எழுதிக்கொள்ளும் இறுதி விருப்ப ஆவணமாவது'

மேலே குறிப்பிடப்பட்டவாறு முதல் பந்தி அமைந்த பின்னர் அதைத்தொடர்ந்து வரும் பந்திகளில் இறுதி விருப்பாவணத்தில் உள்ளடக்கப்படும் ஒவ்வொரு அசையா ஆதனத்தினதும் ஆதனடாப்பும் காணிப்பதிவகத்தில் அதன் முற்பதிவின் ஆங்கில எழுத்தும் இலக்கமும் எழுதப்படல் வேண்டும். ஆதனடாப்பில் காணப்படும் ஆதனத்தின் பெயரும் அதன் அமைவிடமும் மிகப் பிரதானமானதாகும். இதேவேளை, ஒவ்வொரு ஆதனடாப்பும் ஒவ்வொரு பந்தியில் குறிப்பிடப்படல் வேண்டும்.

இறுதி விருப்பாவணத்தின் இறுதிப்பந்தியில் இந்த இறுதி விருப்பாவணத்தை எழுதியவர் இறந்த பின்னர் அதனை தகுதி வாய்ந்த நீதிமன்றம் ஒன்றில் ஒரு சட்டத்தரணி ஊடாக தத்துவ வழக்கு ஒன்றை தாக்கல் செய்து இந்த இறுதி விருப்பாவணத்தைச் சம்ர்ப்பித்து தத்துவ பத்திரம் (Letters of Probate)எடுப்பதற்கு ஒரு நிறைவேற்றுனரை இறுதி விருப்பாவணம் எழுதுபவர் முழுப்பெயர் குறித்து நியமனம் செய்தல் வேண்டும். அப்போது அந்த நிறைவேற்றுனரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி போன்ற விபரங்களையும் குறிப்பிடுதல் வேண்டும்.

## எத்தனை பிரதிகள்

பொதுவாக ஒரு காணி உறுதியின் அல்லது சாதனத்தின் மூன்று பிரதிகளில் அந்த உறுதியை நிறைவேற்றுபவர் கையொப்பம் இடுதல் வேண்டும். ஆனால், ஓர் உறுதி விருப்பாவணத்தின் இரண்டு பிரதிகளே தயாரிக்கப்பட்டு அதில் (இறுதி விருப்பாவணம்) கையொப்பம் இடவேண்டும். தகுதி வாய்ந்த இருவர் சாட்சிகளாகக் கையொப்பம் இடல் வேண்டும். இந்த இரண்டு பிரதிகளில் ஒன்று இறுதி விருப்பாவணத்தை நிறைவேற்றியவரிடம் ஒப்படைக்கப்படும். மற்றது பிரசித்த நொத்தாரிசிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும். காணிப்பதிவகத்தில் இணைப்பிரதி ஒப்படைக்கப்பட வேண்டியதில்லை. ஆனால் ஒரு பிரசித்த நொத்தாரிசு அந்த இறுதி விருப்பாவணத்தின் இலக்கம் அது நிறைவேற்றப்பட்ட திகதியை மாதாந்த அட்டவணையில்(Monthly List) குறிப்பிடுதல் அவசியம். வேறு எந்த விபரமும் வெளியிடப்படக் கூடாது. இறுதி விருப்பாவணத்தின் இரகசியத் தன்மையை பேணவே இந்த சட்ட ஏற்பாடாகும். இந்த விடயத்தில் பிரசித்த நொத்தாரிசு மிகவும் விழிப்பாக செயற்பட வேண்டும்.

## ஆதனத்தின் பெறுமதி

இதுவரை காலமும் ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட பணப்பெறுமதியுடைய சொத்துக்களை ஒருவர் இறுதி விருப்பாவணம் எழுதாமல் இறந்தால் அது தொடர்பில் மாவட்ட நீதிமன்றிற்கு கொண்டுவரப்பட வேண்டிய தேவை குடியியல் நடவடிக்கை சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேற்படி குடியியல் நடவடிக்கை முறைச் சட்டத்தின் 554 ஆம் பிரிவின் உப பிரிவு 02 பின்வரும் வாசகத்தை கொண்டுள்ளது.

'For the issue of Probate of a will or the grant of letters of administration in respect of an estate the value of which is over rupees five hundred thousand'

ஆனால் புதிதாக மேற்படி குடியியல் நடபடி முறைச் சட்டக்கோவைக்கு கொண்டுவரப்பட்ட 11ஆம் இலக்க 2010 சட்டம் மேற்படி சட்ட ஏற்பாட்டில் ஒரு திருத்தத்தைக் கொண்டுள்ளது. இதன்படி இறுதி விருப்பாவணம் ஒன்றை எழுதாமல் 40 இலட்சத்திற்கு மேற்பட்ட சொத்துக்களை விட்டு இறந்தால் அது தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என பின்வரும் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'......Which is less than rupees five hundred thousand of the words which is less than rupees four million.....' என்ற வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சட்ட ஏற்பாடுகள் 2010 ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கிடப்பட்டுள்ளது.

இதன்படி 40 இலட்சத்திற்கு மேற்பட்ட சொத்துக்களை விட்டு ஒருவர் இறந்தால் அது தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பது கட்டாயமாகும்.

## சட்டமும் சமூகமும் 08






## வங்கிக் கணக்கீடுகள்

ஒருவர் வங்கியில் வைப்பிலிடும் பணத்தை தனது மறைவுக்குப் பின்னர் யார் பெற்றுக் கொள்ள வேண்டும் என தனது இறுதி விருப்பாவணத்தில் குறிப்பிடுவதை விட தனது மறைவுக்குப் பின்னர் யார் அப்பணத்தைப் பெறவேண்டும் என்பதை வங்கி அதிகாரிகளிடம் தெரிவித்து அதற்குரிய படிவத்தைப் பெற்று ஒரு பின் உரித்தாளரை (Nonminee) நியமிப்பதே பொருத்தமானதாகும். இது பல விதமான சட்ட சிக்கல்களை இல்லாமற் செய்து விடும்.

மேலே கூறப்பட்ட சட்ட ஏற்பாடுகள் மரணச் சொத்து விவகார வழக்குகளில் புதிய திருப்புமுனைகளை ஏற்படுத்தியுள்ளன.

சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
**அனுப்பவேண்டிய முகவரி**
**யாழ் ஓசை**
வீரகேசரி கிளைக் காரியாலயம்,
117, புகையிரத வீதி, யாழ்ப்பாணம்.

## புது விடியலுக்காய் காத்திருக்கிறார்கள்

காலை விடிந்தது துயில்
நீங்கி எழுந்தான் கதிரவன்
துயில் எழ நீ ஏன் தயங்குகிறாய்?
மூடிய விழிகளுக்குள் ஆயிரம் கனவுகள்
அதை சிதைத்திட மனம் வரவில்லையோ?
அந்த நாள் ஞாபகங்கள் இன்று
வந்த உன்னை தாக்கிறதா

அன்று உன் தாய்க்குச் செய்த குறும்புகள்
இன்று உன் பிள்ளைகள் உனக்கு
செய்யும் போது வலிக்கிறதா?
உன் தாயை தொலைத்துவிட்டு
ஏங்கிய இரவுகள் இன்னும்
விடியவில்லை உனக்கு
உன்னை தொலைத்துவிட
இடம் தராதே - ஏனென்றால்
உன் பிள்ளைகள் விடியலுக்காய் காத்திருக்கிறார்கள்.



## திருப்தி

*உன் குறை தீர்க்க உனக்கு*
*ஒருவரில்லை ஆனால்*
*இங்கு என்குறை தீர்த்து*
*நீ உவகை அடைகிறாய்.*

## ஏக்கம்

அம்மா என்றழைக்கும்
ஆயிரம் குரல் கேட்டிடும்
ஆனால் மகளே என்றழைக்கும்
ஓர் குரல் கேட்கவில்லை.

## யாழில் ரயில்

யாழில் ரயில் ஓசை கேட்குதோ - இல்லையோ
யாழ் ஓசை கையில் தவழ்ந்திடும் போது
ஒரு குழந்தை அணைக்கும் இன்பம்
அடைந்திடும் மனது இங்கே.

திருமதி.றீற்றா இராசலிங்கம்
உடுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி 07

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 | 06 | 07 |
| 08 | 09 | | 10 | 11 | 12 | 13 | |
| 14 | | 15 | 16 | 17 | 18 | | 19 |
| 20 | 21 | 22 | | 23 | | 24 | 25 |
| | 26 | 27 | 28 | | 29 | 30 | 31 |
| 32 | 33 | 34 | 35 | 36 | | 37 | |
| 38 | 39 | | 40 | 41 | 42 | 43 | |
| 44 | | 45 | 46 | 47 | | 48 | 49 |

**இடமிருந்து வலம்**

01. எல்லை போடப்படும் மரங்களில் ஒன்று
02. சுமை
08. கோணம்
10. வாக்கியம்
15. சூரனின் அழிவுக்கு காரணம்
20. யானைக்கு வருவது (திரும்பியுள்ளது)
24. நல்ல
26. பல கூறுகள் சேர்ந்தவற்றை இவ்வாறு அழைப்பர்
29. யுத்தத்தில் அழிவை ஏற்படுத்தும்
32. தொடக்கம்
40. எழில்
45. இப்படி அழைக்காத உயிரில்லை
48. பொறுமைக்கு ஒப்பானது

**மேலிருந்து கீழ்**

01. அதிகாலையில் பாடப்படும் ராகம்
02. விதம்
04. சீனாவிற்கு பெருமை சேர்த்தது
05. நீராகாரம்
11. பிரேதம்
15. குளத்தில் வளரும் பூ
19. கடவுளுக்கு சாத்துவது (குழம்பியுள்ளது)
21. உலோகம்
24. தாம்பூலத்துள் சிவப்பது
28. நிகழ்வு
32. அரவணைத்தல்
36. திங்கள்

**குறுக்கெழுத்து போட்டி 05க்கான விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2அ | ஞ் | ச | னா | தே | வி | | க |
| று | | ங் | | க | டு | க | தி |
| கு | ங் | கு | ம | ம் | | த | ரை |
| | ரா | | ன | | தா | வு | |
| | ம | க | ம் | | ள | | தா |
| வி | பூ | தி | | அ | ம் | பு | லி |
| தை | | ரா | ம | ன் | | ல் | |
| | ஒ | ளி | | பு | வ | ன | ம் |

## பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1. **திருமதி.றோ.ம.தயானந்தன்**
15ம் மைல் கல்,
உடுப்பிட்டி.
2. **திருமதி.தி.சிதம்பரநாதன்**
டச்வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
3. **சந்திரலீலா.நா**
அருளம்பலம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

**குறுக்கெழுத்துப் போட்டி 07 க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக்கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.**

**அனுப்பவேண்டிய முகவரி**
**குறுக்கெழுத்துப் போட்டி**
**'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,**
**117, புகையிரத நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

* பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.

# யாழ்ப்பாண நாட்டின் வரலாற்று கதாநாயகன்


# பூதத்தம்பி

07

**(சென்ற வாரத் தொடர்ச்சி)**

வாள்களுடனும் துப்பாக்கிகளுடனும் பாய்ந்து வரும் வீரர்களைக் கண்டதும் அவர்கள் தங்களைத் தாக்கத்தான் வருகிறார்கள் எனத் தப்பாகப் புரிந்து கொண்டு வேகமாகத் தம் அரைகளிலிருந்த வாள்களை உருவிக் கொண்டனர்.

பூதத்தம்பியும் புரட்சிக்காரர்களும் அப்படியான எதிர்பொன்றினை எதிர்பார்க்கவில்லை. தேவாலயத்தின் முன் தொடங்கிய யுத்தத்தின் எதிரொலி பிரார்த்தனை செய்து கொண்டிருந்தவர்களை விழிப்படையச் செய்தது. அதனால் தேவாலயத்தினுள் நுழைந்தவர்களை உடனடியாக அவர்களும் எதிர்த்து நிறுத்தத் தம்மை தயார்செய்து கொள்ள முடிந்தது. எனினும் தேவாலயத்தினுள் ஒல்லாந்தர் பலர் படுகொலையுற நேர்ந்தது.



யாழ்ப்பாணக் கோட்டைக்குள் அமைந்திருந்த ஒல்லாந்தரின் சதுரங்க வடிவத் தேவாலயம்

சிங்கள முதலியாரின் வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்கள். அவர்களாலும் ஒல்லாந்த வீரர்களாலும் புரட்சிகாரர்களை சில பொழுதுகள் தாக்குப்பிடிக்க முடிந்தது. பூதத்தம்பி, கோட்டையின் ஏனைய பகுதிகளில் எதிர்பார்த்தபடி தாக்குதல் நிகழாதிருப்பதைக் கண்டான். மனதில் கலக்கமும் வியப்பும் ஏற்பட்டது. கோட்டை மதில்களில் இருந்த வீரர்கள் தயக்கத்துடன் கோட்டைக்கு வெளியில் பார்ப்பதைக் கண்டான் அவர்கள் தயக்கத்திற்குக் காரணம் விரைவில் புரிந்தது.

காலையில் கோட்டையிலிருந்து வெளியேறிய பதில் கமாண்டர் ஜாக்கோப் வன் நீவ், பருத்தித்துறைக்குச் செல்லவில்லை. இடைநடுவில் தன்பயணத்தை முறித்துக் கொண்டு வேகமாகக் கோட்டைக்குள் அவன் படையுடன் வேகமாகப் புகுந்தான். தேவாலயத்தின் உள்ளும் வெளியிலும் நிகழ்ந்து கொண்டிருக்கும் பயங்கரச் சண்டையைக் கண்டான்.

சிலநிமிடங்களில் சண்டை ஓய்ந்தது. பூதத்தம்பியின் பக்கத்தில் பலர் படுகொலையுண்டனர். ஒல்லாந்தர் பக்கத்திலும் சிங்கள முதலியார் அன்ரோமிடோ பக்கத்திலும் பலர் இறந்திருந்தனர். பூதத்தம்பி உட்பட புரட்சிக்காரர்கள் பதினொரு பேர் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் பதினொருவரும் கடுமையாகத் தாக்கப்பட்டனர். இறந்தவர்களும் கைதானவர்களும் தாம் இந்தச் சதிக்கும் கலவரத்திற்கும் காரணமானவர்கள் என கமாண்டர் கருதியமையால் உடந்தையாக மாறவிருந்த ஏனையோர் தப்பிக்க முடிந்தது.

பால்தேயஸ் பாதிரியார் புரட்சியாளர்க்குக் கிடைத்த தண்டனையைத் தன் நூலில் பின் வருமாறு விபரிக்கிறார்:

'இச்சதித்திட்டத்தின் பின்னணி மிகக் கவனமாக ஆராயப்பட்டது. அவர்களின் வாய்களினாலேயே உண்மைகள் வெளிவந்தன. அவர்களில் சிலரைத் தூக்கிலிடுமாறும், சிலரின் சிரசுகளைத் துண்டிக்குமாறும், சிலரைச் சிலுவைகளில் அறையுமாறும் தீர்ப்பு வழங்கப்பட்டது. இச்சதிக்கு காரணமான டொன் லூயிஸ் பூதத்தம்பியும், மன்னாரைச் சேர்ந்த சுதேசி ஒருவனும், ஐந்து போர்த்துக்கேயர்களும் இவ்வாறான தண்டனைகளைப் பெற்றனர். அவர்கள் முதலில் சிலுவை ஒன்றில் இறுகப் பிணைக்கப்பட்டனர். அவர்களின் கழுத்துக்கள் துண்டிக்கப்பட்டன. பின்னர் அவர்களின் மார்புகள் பிளக்கப்பட்டு இருதயங்கள் பிடுங்கி எடுக்கப்பட்டன. அவை அத்துரோகிகளின் முகங்களில் வைக்கப்பட்டன. மலாக்காவில் பிறந்த கலாதேறா என்ற பாதிரியின் தலை துண்டிக்கப்பட்டது. இப்பாதிரி தனது சுகயீனத்தைக் காட்டி குருமனையிலிருந்து வெளிவர மறுத்தார். ஆனாலும் அவர் தனக்குரிய தண்டனையை அடைந்தார். இந்த வெட்கங்கெட்ட சதி வேலையில் இவருக்கும் சிறு பங்குண்டு. தண்டனை பெற்ற துரோகிகளால் இவருக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டிருக்கின்றது. தமது ஆத்மாவின் தந்தை என விழித்துத் தம் நோக்கங்களை விளக்கி அவருக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது. அவர் மனது குற்றத்தை ஒப்புக்கொள்ள வில்லை. தனது நாட்டுச் சதிகாரர்களைக் காட்டிக்கொடுக்க அவர் மனம் இடந்தரவில்லை.

**கலாநிதி க.குணராசா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

இரவு 8.00 மணியிருக்கும். இருள் கவிந்தவேளை. புத்தூரிலுள்ள எனது உறவினர் ஒருவரின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் புறப்படுகிறேன்.

பருத்தித்துறை வீதி வழியாக எனது பயணம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. செல்லும் வழியில் உள்ள ஆலயம் ஒன்றின் பூங்காவனத் திருவிழா களைகட்டியிருந்தது. பலவருடங்களாக இரவு நேரத் திருவிழாக்கள், இரவு நேர நிகழ்வுகள் என்பவற்றுக்கெல்லாம் பாதுகாப்புச் சூழ்நிலைகளைக் காரணம் காட்டி அனுமதி மறுக்கப்பட்டிருந்தமை தெரிந்த விடயமே. ஆனால், தற்போதைய சூழலில் இரவுநேர நிகழ்வுகளுக்கு பஞ்சமே இல்லை எனும் அளவிற்கு பொதுமக்கள் இராப்பொழுதைக் கழிக்கின்றனர்.

அதிலொரு அங்கமாக அந்த சிற்றூரின் பெருமையைப் பறைசாற்றும் சிவன் கோயிலின் பூங்காவனத் திருவிழா. கோயிலைச் சுற்றியுள்ள இடங்களிலெல்லாம் வண்ணக் கொடிகளாலும் வண்ண ஒளிகளை உமிழும் மின்குமிழ்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அந்த பிரதேசப் பரப்பில் பொருத்தப்பட்டிருந்த ஒலி பெருக்கிகளின் அலறல்கள் ஒரு புறம் காதைப்பிழந்தன.

அந்தளவிற்கு 10 இற்கும் மேற்பட்ட ஒலி பெருக்கிகள் ஆலய சுற்றாடலின் அமைதியைக் குலைத்தன.மோட்டார் சைக்கிளின் வேகத்தை தணித்து அந்த ஆலயத்தில் எழுந்தருளியுள்ள இறைவனை வணங்கி விட்டு எனது பயணத்தைத் தொடர்ந்தேன்.

புத்தூரிலுள்ள உறவினருடன் உரையாடி விட்டு மீண்டும் அதே வழியாக எனது வீடு நோக்கி விரைந்து கொண்டிருந்த போது நேரமோ இரவு 10.00 மணியை நெருங்கிக்கொண்டிருந்தது. வரும் வழியாக அதே சிவன் ஆலயத்தை அடைந்த போது சினிமாப்பாடல்கள் அப்புனித சூழலை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன.

பெரும்பாலான ஆலயங்களில் பூங்காவனத் திருவிழாக்களின் போது பணத்தின் இருப்பை பறைசாற்றும் பாட்டுக் கோஷ்டிகளில் ஒன்றுதான் அங்கு நடந்து கொண்டிருந்தது. பல வருடங்களாக இத்தகைய இசை நிகழ்ச்சியை ரசிக்கும் பாக்கியம் கடந்த காலங்களில் கிடைக்காமல் போயிருந்தது. எனவே சிறிது நேரம் இந்த பாட்டுக்களைக் கேட்டு ரசித்துவிட்டுச் செல்லாம் என்ற தவிப்பில் அங்கு நடக்கும் நிகழ்ச்சியைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தேன். யாழ்.நகரின் புகழ் பூத்த இசைக்குழவினர் தமது இசையால் ரசிகர்களை குஷிப்படுத்தியவாறு இருந்தனர். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என ஏராளமானோர் இசை நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கு திரண்டிருந்தனர்.

முன்னர் இரவு வேளை என்றதுமே நேர காலத்துடன் வீடுகளுக்குள் முடங்கிப் போகும் மக்கள் தற்போது சுதந்திரக் காற்றை சுவாசிப்பது போல ஒருவித பிரமிப்பில் திளைத்திருந்ததைக் கண்டேன். பல ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட சிறைக் கைதிகள் விடுவிக்கப்படுகையில் அவர்களின் முகத்தில் எத்தகைய பூரிப்பு இருக்குமோ அதேபோல் அங்கு திரண்ட மக்களின் முகங்களிலும் ஒருவித பூரிப்பு பளிச்சிட்டதை அவதானிக்க முடிந்தது. இசைக்குழுவின் பிரபல அறிவிப்பாளரின் கணீரென்ற காந்தக் குரல் பார்வையாளர்களை வசீகரித்தது. அந்த அறிவிப்பாளர் தனது வசீகரக் குரலில் அடுத்த பாடலுக்கான அறிவிப்பைச் செய்து கொண்டிருக்கிறார். அறிவிப்பு முடிகிறது. பாடகர்கள் மேடையில் தோன்றுகிறார்கள். சுறா படத்தில் வரும் 'நான் நடந்தால் சர வெடி' என்ற பாடல் தூள்கிளப்புகிறது.

**20 வயதிருக்கும். இறுக்கமான ஜீன்சும் ரிசேட்டும் அணிந்த பருவப் பெண். பேரழகி இல்லாவிட்டாலும் இளம் பெண்ணுக்குரிய எடுப்பான தோற்றமும் பளபளப்பும் கதகதப்பும் அவளில் தெரிந்தது. பார்வையாளர்களின் விழிகள் அனைத்துமே அந்த இளநங்கையின் மீதே கூர்மையடைந்திருந்தது.**



அந்தப் பாடலின் இசையினால் உந்தப்பெற்ற பலர் தங்களை மறந்து ஆடிக் கொண்டிருக்கின்றனர். இந்தச் சமயத்தில் யாரும் எதிர்பாராத விதமாக ஒரு இளம் பெண் மேடையின் முன் தோன்றினாள். சுமார் 20 வயதிருக்கும். இறுக்கமான ஜீன்சும் ரி-சேட்டும் அணிந்த பருவப் பெண். பேரழகி இல்லாவிட்டாலும் இளம் பெண்ணுக்குரிய எடுப்பான தோற்றமும் பளபளப்பும் கதகதப்பும் அவளில் தெரிந்தது. பார்வையாளர்களின் விழிகள் அனைத்துமே அவ் இள நங்கையின் மீதே கூர்மையடைந்திருந்தது.

அடுத்து என்ன நடக்கப்போகிறது என்ற அங்காலாய்ப்பில் பார்வையாளர் இருந்தனர். அவர்களைத் திணறடிப்பது போல பாட்டுக் கோஷ்டியை ரசித்தவாறு இருந்த ஒரு இளைஞனின் கையைப்பிடித்து இழுத்தாள் அந்தப் பெண். மேடையில் இருவரும் குத்தாட்டம் போட்டனர். நவீன சினிமாவின் பாடல்க் காட்சிகளில் வரும் அத்தனை அம்சங்களையும் அந்த இளம் ஜோடிகளில் கண்டுகொண்டேன். ஒருவரையொருவர் கட்டித் தழுவியபடி அவர்கள் போட்ட ஆட்டம் அங்கு நின்ற அனைவரையும் வாயடைக்க வைத்தது. அந்தப் பாட்டு முடியும் வரைக்கும் அந்த ஜோடி தமது ஆட்டத் திறமையை வெளிப்படுத்தியபடியிருந்தனர். அவர்களது ஆட்டத்தை உற்சாகப்படுத்தும் வகையில் கூடி நின்ற இளைஞர்களின் கரவொலிகள், விசிலடிகள் ஒரு புறம் அவர்களின் குத்தாட்டத்தை பார்க்க முண்டியடித்த மக்கள் இன்னொரு புறம் என பார்வையாளர் அரங்கமே ஆர்ப்பரித்தபடி அதிர்ந்தபடி இருந்தது.

ஈஸ்வரா! உனது சந்நிதானத்திற்கு முன்னாலேயே இப்படியான அலங்கோலங்கள் எல்லாம் நடந்தேறுகின்றதே இது எல்லாம் எம் இனத்தின் தலை விதியா? அல்லது நீ செய்யும் சதியா? என எண்ணி என்னையே நொந்து கொண்டேன். அதற்குப் பின்னர் என்ன நடந்திருக்கும் யார் அந்தப் பெண்? எப்படி அவளால் இவ்வாறு செய்ய முடிந்தது? அந்த இளைஞனுக்கும் யுவதிக்கும் ஏற்கெனவே ஏதேனும் உறவுத் தொடர்புக்கள் இருந்ததா? என்ற பல கேள்விகள் பலர் மனங்களைத் துளைத்திருக்கும்.

முன்னர் இரவு வேளை என்றதுமே பெண்கள் வீடுகளுக்குள் முடங்கி விடுவார்கள். ஆனால் தற்போது நிலமை தலைகீழாக மாறிவிட்டது. நாகரிகம் என்ற போர்வையில் அநாகரீகமாக நடக்க முற்படுகின்றனர்.

தற்போது செல்லிடத் தொலைபேசிக் கலாசாரம் மேலோங்கியிருப்பதால் யாழ். குடாநாட்டில் நடந்தேறுகின்ற சமூகச் சீரழிவுகளுக்கெல்லாம் அதுவும் ஒரு ஊந்துகோலாக அமைகிறது. நாளுக்கு நாள் கைத்தொலைபேசி பாவனையாளர்களின் தொகை அதிகரித்துச் செல்கின்றது. இன்றைய அவசர உலகில் மக்களின் பல்வேறு அவசரத் தேவைகளுக்கு கைத்தொலைபேசி பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளதெனில் மிகையில்லை.

ஆனால், அதை தவறாகப் பயன்படுத்தும் கலாசாரம் மேலோங்கியிருப்பது வேதனைக்குரியது. பாடசாலைகளுக்குக் கூட வயது குறைந்த மாணவர்கள் கொண்டு சென்று பயன்படுத்துகின்றார்கள்.

இன்று வயது வித்தியாசம் இன்றி அனைவரும் கைத்தொலைபேசி என்ற மாயைக்குள் அமிழ்ந்து கிடக்கின்றனர். மது போதைக்கு அடிமையானவர்கள் அவற்றிலிருந்து விடபடமுடியாமல் தவிப்பது போல கைத்தொலைபேசிப் பாவனைக்கு அடிமையானவர்கள் அதிலிருந்து விடுபட முடியாதவர்களாக தவிக்கின்றனர். இது எமக்கு சாபக்கேடே தவிர வேறொன்றுமில்லை.

அளவுக்கு மீறிய கைத்தொலைபேசிப் பாவனையால் வாழ்வியல் யதார்த்தத்தை உணராதவர்களாகப் பலர் இருப்பது விசனிக்கத்தக்கது. குடாநாட்டில் கலாசாரச் சீர்கேடுகள் உச்சத்தைத் தொட்டுநிற்கிறது. இதற்கு முறையற்ற தொலைபேசிப்பாவனை முக்கிய காரணமாக இருக்கின்றது.

ஆக, இன்றைய நவீன யுகத்தில் தகவல் தொடர்பாடல்களின் அசுர வளர்ச்சியால் உலகமே எமது கைக்குள் அடங்கியிருக்கிறது. அந்தளவிற்கு வியத்தகு விஞ்ஞானத்தின் வளர்ச்சி உலகத்தேயே ஆட்டிப்படைத்து வருகிறது. ஆனால் அத்தகைய தகவல் தொடர்பாடல்களை தவறான நடவடிக்கைகளுக்கு பிரயோகப்படுத்தும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தே வருகிறன.

அத்தகைய அளவுக்கதிகமான எல்லை மீறிய பயன்பாடுகள் புற்றுநோய் போல எமது சமூகத்தில் நிலையெடுத்துள்ளது. இதனால் பல்வேறு பட்ட உடல், உள, சமூக, கலாசார பிரச்சினைகளுக்கும் அத்திவாரமிடுகின்றன. எனவே எதிர்காலத்தில் கைத்தொலைபேசிகளின் எல்லை மீறிய பயன்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமா? என்பது விடை தெரியாத புதிராகவே இருக்கப்போகிறது.

**உதிஷ்டிரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மைக் கட்சிகளைக் கலைக்கும் ஜே.வி.பி. உறுப்பினரின் கருத்து இனவாதமாகும்

### கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பிரசாந்தன்

மண்டூர்,

சிறுபான்மை கட்சிகளை கலைக்க வேண்டும் என்ற ஜே.வி.பி. உறுப்பினரின் கூற்று இனவாதத்தை தூண்டும் செயலுக்கு ஒப்பானது என நாம் கருதுகின்றோம். இரத்தமும் சதையும் சிந்திய தன் விளைவாக இலங்கையின் இறைமைக்கு ஏற்ப பதிவு செய்யப்பட்ட கட்சி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியாகும். (ரி.எம்.வி.பி.) இக் கட்சியையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் ஆகிய கட்சிகளை கலைக்க வேண்டும் என்ற அவரின் கூற்று வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலுள்ளது. ஜனாதிபதியும் அரசும் இந்த நாட்டில் இன ஒற்றுமையை வலுப்படுத்த முனையும் இவ்வேளையில் இவ்வாறு கூறியிருப்பது இனவாதம் பேசி பிரிவினையைத் தூண்டி இரட்டைவேடம் போடும் செயலுக்கு ஒப்பானது.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை அமர்வில் உரையாற்றிய ரி.எம்.வி.பி. கட்சி உறுப்பினர் பூ. பிரசாந்தன் கூறினார்.

"பொறி" என்ற பெயரில் சமாதானத்திற்கான உலக அமைப்பு துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டிருப்பதாக கூறி அதற்கு ஒரு கண்டனப் பிரேரணை மாகாண சபை உறுப்பினர் எஸ். புஸ்பராசாவினால் கொண்டுவரப்பட்டது.

இக் கண்டனப் பிரேரணை மீது உரையாற்றிய ஜே.வி.பி. உறுப்பினர் விமல் பியதிஸ்ஸ இத் துண்டுப் பிரசுரத்தை நானும் கண்டிக்கிறேன்.

எனினும் இன ரீதியாக வெளியிடப்படும் துண்டுப் பிரசுரங்களை கண்டிக்க முடியாது.

அப்படியானால் இனப் பெயருடன் இயங்கும் ரி.எம்.வி.பி., ஸ்ரீ.ல.மு.கா., தேசிய காங்கிரஸ் முதலிய கட்சிகளையும் முதலில் தடை செய்ய வேண்டும் என்றுகூறினார்.

சுமார் 2 மணித்தியாலம் நடைபெற்ற இந்த விவாதத்தில் பதில் முதலமைச்சரும், வீதி அபிவிருத்தி அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை உரையாற்றுகையில்,

நாட்டில் இன துவேசத்தை மிகவும் பாரதூரமாக ஊட்டியதே ஜே.வி.பி. கட்சியின் உறுப்பினர்களேயாவார்.

சிறுபான்மை கட்சிகளை தடை செய்ய வேண்டும் என்று கூறுவது வேடிக்கைக் குரியது. ஒரு சமூகம் சார்ந்த கட்சி அச் சமூகத்துக்கு சேவை செய்வது இனத்துவேசமல்ல. ஏனைய சமூகத்தினை நசுக்க முற்படுவதே இனக்குரோத செயலாகும்.

இனமுரண்பாடுகளை அரசு நிதானமாக கையாளும் வேளையில் ஜே.வி.பி. உறுப்பினரின் கூற்று அநாகரீகமானது. ரி.எம்.வி.பி. தலைவரும் தேசிய காங்கிரஸ் தலைவரும் கிழக்கு மாகாண சபை அமைப்பதற்கு முக்கிய பங்கு வகித்துள்ளனர். அந்த சபையில் இருந்து நீங்கள் தூற்றுவது முறையற்றது என்று குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சர் விமலவீர திசாநாயக்க, உறுப்பினர்களான எ. கிருஷ்ணானந்தராசா, ரசாக் பரீட் ஆகியோரும் இந்த விவாதத்தில் உரையாற்றினர்.

ஈழம் பிரிக்கும் முதல் படியே 13 ஆவது சரத்து என்றும் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் தேவையில்லை என்றும் மாகாண சபை முறைமையை அமுல்படுத்தினால் அது பெரும்பான்மை சமூகத்துக்கு பாதிப்பு என்றும் கருத்துப்பட அந்த துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறப்பட்டது.

# ஈழத்துப் பூராடனாரின் மறைவு

முதுபெரும் தமிழறிஞரான இலக்கிய கலாநிதி ஈழத்துப் பூராடனார் (க.தா.செல்வராஜகோபால்) தனது எண்பத்து இரண்டாவது அகவையில் கனடாவில் காலமானார்.

மட்டக்களப்பு செட்டிபாளயத்தை பிறப்பிடமாகவும் தேத்தாத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட பயிற்றப்பட்ட ஆசிரியரான இலக்கிய கலாநிதி ஈழத்துப் பூராடனார் தனது வாழ்நாளில் பெரும் பகுதியை தமிழ் இலக்கிய செயற்பாட்டுக்காக அர்ப்பணித்தவர். ஈழத்திலும் புலம்பெயர்ந்து வாழ்ந்த கனடா தேசத்திலும் இவர் ஆற்றிய தமிழ்த் தொண்டுகள் அலாதியானவை.

தூர்ந்து போன நிலையில் காணப்பட்ட ஏட்டுச் சுவடிகளைப் பாதுகாத்து அவற்றை நூலுருவாக்குவதிலும் பழந்தமிழ் இலக்கிய இலக்கண நூல்களைப் பாதுகாப்பதிலும் அவற்றை மீள்பதிப்பு செய்வதிலும் புதிய நூல்களைக் கொள்வனவு செய்து தனது இல்லத்தில் மாபெரும் நூலகம் ஒன்றை வைத்திருந்த இலக்கியப் பெருமையாளர் இவர்.

வில்லிசை கூத்து, கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், ஆய்வு, விமர்சனம் என தமிழ் இலக்கிய வடிவங்கள் பலவற்றிலும் காலூன்றி தனது முழுமையான பங்களிப்பையும் பதிவையும் உண்டு பண்ணியவர்.

மட்டக்களப்பின் மூத்த படைப்பாளிகளான எப்.எக்ஸ்.நடராசா வீ.சீ.கந்தையா, புலவர் மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை, இரா.நாகலிங்கம்(அன்பு மணி) போன்ற மூத்த தமிழறிஞர்களுடன் மிகவும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்த அன்னார் ஈழத்தில் வாழ்ந்த காலத்தில் வாசிப்பு, தேடல் என்பவற்றில் தனது பொழுதை கழித்ததுடன் மனோகரா அச்சகத்தினை நிறுவி இதன் மூலமாக பல படைப்பாளிகளின் ஆக்கங்களை சகாய விலையில் பதிப்பித்து வெளியிட்ட பெருமைக்குரியவர்.

கால ஓட்டத்திற்கமைய கனடாவில் குடும்பத்தாருடன் புலம் பெயர்ந்து வாழ்ந்த அன்னார் அங்கு கோபால் கம்பியூட்டர் என்ற பெயரில் பழைய தமிழ் எழுத்துருவை கணினி மூலம் எழுத்துருவாக்கிக் காட்டியவர்.

புலம் பெயர்ந்த நாடுகளில் செம்மொழியாகிய தமிழ்மொழி ஒலிக்க வேண்டும் என்பதற்காக அந்நாடுகளில் தமிழை போதிக்க வேண்டும் என்பதில் உறுதியுடன் செயற்பட்டதோடு கனடாவில் தமிழ் போதிக்கும் கல்வியகங்களை நிறுவி அதன் மேலாளராக பணிபுரிந்தார்.

உலக தமிழாராட்சி மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்த அன்னார் தமிழ் அழகி என்ற பன்னிரண்டாயிரம் பாடல்களை எழுதி காப்பியமாக வெளியிட்டவர்.

1978இல் கிழக்கிலங்கையை உலுக்கிய புயலை (சூறாவளியை) சித்தரித்து புயல் பரணி என்ற நூலை வெளியிட்டார். நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை, கிராமிய கலை என நீண்டு செல்லும் இலக்கிய செயற்பாடுகளில் முத்திரை பதித்த மூத்த படைப்பாளியான இலக்கிய கலாநிதி ஈழத்துக் பூராடனார் சிறந்த ஓவியக் கலைஞராகவும் தனது ஆற்றலை வெளிக்கொணர்ந்த பன்முக ஆளுமையாளர்.

கனடாவில் தனது அந்திம காலத்தை கழித்த அன்னார் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாணவர்களின் நலன்கருதி அவ்வப்போது தன்னால் இயன்ற நிதி உதவிகளை அளித்தவர்.

இலக்கிய கலாநிதி ஈழத்துப் பூராடனாரின் பிரிவு குறித்து மண்முனை தென் எருவில் பற்று கலைஞர் ஒன்றியத்தின் தலைவர் கலாபூஷணம் ஆ. அரசரெத்தினம், மண்முனை தென்எருவில்பற்று பிரதேச கலாசார பேரவையின் தலைவரும் பிரதேச செயலாளருமான செ. அருள்ராசா, துறைநீலாவணை முரசொலி நாடக மன்றத் தலைவர் செல்லையா பேரின்பராசா, களுதாவளை கிராமியக் கலை மன்றத்தின் உறுப்பினர்கள் போன்றோர் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளனர்.

**அன்னாரின் வாழ்வும் பணியும்**

பற்றிய இரங்கல் கூட்டம் தேத்தாத்தீவில் இடம்பெறவுள்ளதாக மண்முனை தென்எருவில் பற்று கலாசார பேரவையின் செயலாளர் இ.கோபாலபிள்ளை தெரிவித்தார்.

# அரச உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மொழியை போதிக்கும் நடவடிக்கை தொடரும்

### அமைச்சின் உதவிச் செயலாளர்

ஏறாவூர்,

வடக்கு, கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் அனைத்து மாகாண அரச சேவை திணைக்களங்களில் அரச கரும மொழிக் கொள்கையை வெற்றிகரமாக முன்னெடுக்கும் வகையில் அரச சேவை உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மொழியைப் போதிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் உதவிச் செயலாளர் என்.எம்.ஆர். பெரேரா அறிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அரச கரும மொழிக் கொள்கையின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 01 ஆம் திகதிக்குப் பின்பு அரச சேவையில் இணைந்து கொண்ட அனைத்து உத்தியோகத்தர்களும் 5 வருட காலப் பகுதிக்குள் இரண்டாம் மொழியில் தேர்ச்சியடைவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன் பிரகாரம் குறிப்பிட்ட காலப் பகுதியில் நியமனம் பெற்ற சகல உத்தியோகத்தர்களும் எதிர் வரும் 2012 ஆம் ஆண்டிற்குள் இரண்டாம் மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமையினைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அரச சேவை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இரண்டாம் மொழிப் போதனைப் பயிற்சி வகுப்புக்கள் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம் மொழிப் பயிற்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

# ஓய்வூதியக் கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பில் ஆராய்வு

திருக்கோவில்,

விவசாயிகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவை அதிகரித்து வழங்குவது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகவும் அதிகரித்த ஓய்வூதியக் கொடுப்பனவு அடுத்த சிறுபோகத்தின் போது வழங்கப்படும் என கமநல சேவைகள் ஆணையாளர் நாயகம் ரவீந்திர ஹேவாவிதாரண தெரிவித்தார்.

தற்போது விவசாயிகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு ஆயிரம் ரூபா முதல் நான்காயிரம் வரை வழங்கப்படுகிறது. இதனடிப்படையில் நாடளாவிய ரீதியில் 8 ஆயிரம் பேர் விவசாய ஓய்வூதியத்தை மாதாந்தம் பெற்று வருகின்றனர்.

விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தில் 18 வயது முதல் 40 வயது வரையிலான அங்கத்தவர்கள் சேர்ந்து கொள்ள முடியும். அவர்களிடமிருந்து சிறுதொகை மேற்படி திட்டத்திற்கான பங்களிப்பாக அறவிடப்படுகிறது. 60 வயதுக்குப் பின்னர் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதைக்குட்பட்டவர்களில் காணப்படும் தாக்கங்கள் பற்றிய விளக்கங்களும் அவற்றைக் குறைப்பதற்கான இடையறுப்பு அணுகுமுறைகளும் பற்றிய பார்வை.

ஆக்கம்
ஸ்ரீ.நதிபரன் B.A. (Hons)



(சென்ற வாரத் தொடர்ச்சி)

இல்லாவிடில் குடும்பம் - சமூகம் ஆகியவற்றுடனான உறவு அறவே விடுபட்டு விடக்கூடிய அபாயமும் உண்டு. இதனால் இவர்களின் எதிர்காலமே சூனியமாகி விடும். அவர் மட்டுமன்றி அவரைச் சார்ந்துள்ளவர்களும் பாதிப்படைவர். எனவேதான் இளவயதினரை அதிகம் அக்கறையெடுத்து உதவி செய்யவேண்டும்.

இராணுவ ரீதியான அல்லது ஆயுதக் குழுக்களின் சித்திரவதை முறைகளுக்கு அப்பால் சமூகத்தின் மத்தியில் பொதுவாகக் காணப்படும் குடும்ப ரீதியான சித்திரவதையைக் கொள்ளலாம். குடும்பங்களுக்குள் இடம் பெறும் முரண்பாடுகளால் குடும்ப அங்கத்தவர்கள் அல்லல்படும் அவலம் நம் சமூகத்தின் மத்தியில் காணப்படுகிறது. ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி, பிள்ளைகள் என்போர் அங்கம் வகிக்கின்றனர். பொதுவாகப் பார்த்தால் கணவன் - மனைவி - பிள்ளைகளுக்கு இடையில் இடம் பெறும் முரண்பாடுகள் மூலம் ஏற்படும் இடர்ப்பாடுகள் மூலம் குடும்பத்திலுள்ளவர்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்படுகின்றனர்.

இங்கு குறிப்பாக கணவன், மனைவிக்கு சித்திரவதை செய்தல் அல்லது இருவரும் சேர்ந்து தமது பிள்ளைகளைச் சித்திரவதைக்குட்படுத்தல் போன்றவாறு சித்திரவதையானது குடும்பத்தைச் சுற்றியும் காணப்படுகிறது. இதனால் குடும்ப வாழ்க்கை சிதறடிக்கப்படுவது மாத்திரமன்றி பிள்ளைகளின் எதிர்காலமும் பாழடிக்கப்படுகிறது. ஏனெனில் பிள்ளைகள் கல்வி கற்கும் வயதினராகையால் அவர்களது கல்வியும் கற்கும் ஆற்றலும் மழுங்கடிக்கப் படுகிறது எனலாம்.

மேற்குறிப்பிட்ட குடும்ப ரீதியிலான சித்திரவதைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பாதிப்படைந்தோரை சுமுகமான வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான உதவிகள் அளிக்க வேண்டும். குடும்ப ரீதியான சித்திரவதை பெரும்பாலும் மதுப்பாவனையாலே ஏற்படுகின்றது. எனவே குடும்பத் தலைவன் மதுப்பாவனைக்கு அடிமைப்பட்டிருந்தால் மதுப்பாவனையை நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதற்கு உளவளத்துணை பெரிதும் துணை புரியும்.

எனவே குடும்ப மற்றும் ஆயுதக் குழுக்களால் மேற்கொள்ளப்படுகின்ற சித்திரவதைகளால் பாதிக்கப்படுபவரை உடனடியாக இனங்கண்டு மதிப்பீடு செய்து அவர்களுக்குரிய சிகிச்சைகள் அளிக்க வேண்டும். இதனால் அவர்களை இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டுவரமுடியும்.

பொதுவாக சித்திவதைக்குபட்டவர்களுக்கு மேற்கொள்ளப்படவேண்டிய சிகிச்சை முறைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. மருத்துவ உதவிகள் (Medical treatment)
2. இயன் மருத்துவ சிகிச்சை (Physiotherapy)
3. உளவளத்துணை (Counselling)
4. யோகா மற்றும் தளர்வுப் பயிற்சி (Yoga & relaxation exercise)
5. குடும்ப, பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டு பாதிப்படைந்தவர் சித்திரவதைக்குட்படுத்தப்படுவதற்கு முன் ஏதேனும் தொழில்கள் செய்தால் அவரின் மறுவாழ்வுக்காக அவரின் விருப்பத்திற்கேற்ப தொழிலைத் தொடங்குவதற்கான பொருளாதார ரீதியான உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல். இதற்கு ஏனைய தொண்டு நிறுவனங்களின் உதவியை நாடலாம். (Income generation activities).

(தொடரும்)

# மாதுளம் பழமும் மருத்துவச் சிறப்பும்



- மாதுளம்பூ, இரத்த வாந்தி, இரத்த மூலம், வயிற்றுக்கடுப்பு, சூடு முதலியவற்றை போக்கும். பூவை கஷாமாயம் செய்து குடித்தால் தொண்டை தொடர்பான பல பிணிகளும் அகலும்.
- மாதுளம் பழ ரசம் தாதுவைப் பெருக்கும், வாந்தியை நிறுத்தும் மற்றும் பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய்க் குறைபாடுகளை அகற்றும். இதுதவிர, காதடைப்பு, வெப்பக் காய்ச்சல், மந்தம், மயக்கம் ஆகியவற்றையும் பழ ரசம் விலக்கும்.
- மாதுளம் பழ ரசத்துடன் ஒன்றரைப் பங்கு கற்கண்டு அல்லது வெள்ளைச் சர்க்கரை சேர்த்துப் பாகுபதத்தில் காய்ச்சி வைத்துக்கொண்டு சாப்பிட்டு வந்தால் பித்தம் தொடர்பாக ஏற்படக்கூடிய பிரச்சனைகள் நீங்கும்.
- அன்றாடம் பாதி மாதுளம் பழம் அளவிற்கு நன்றாக மென்று சாப்பிட்டு வந்தால் மலக்கட்டு நீங்கி, நன்றாக மலம் இளகி இறங்கும்.
- மாதுளம் பழச்சாறும், இஞ்சிச் சாறும் சம அளவு எடுத்து சிறிதளவு தேன் கலந்து சாப்பிட்டால் எவ்வளவு கடுமையான இருமலும் குணமாகும். மாதுளம் பழத்தின் விதைகளை எடுத்து வெயிலில் உலர்த்திப் பொடி செய்து தினமும் பசும்பாலில் சிட்டிகை அளவு கலந்து சாப்பிட்டு வந்தால் தாது பலம் பெற்று உடலும் நலம் பெறும்.

# மிளகு எனும் அற்புத நிவாரணி

- காய்ச்சலுடன் வயிற்று பொருமலையும் மிளகு தணிக்கிறது. ஜீரண உறுப்புகள் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டுத் தொந்தரவில்லாமல் செயல்பட உதவுகிறது. காரசாரமான மிளகு உமிழ்நீரை அதிகம் சுரக்க வைக்கிறது. ஜீரணக் கோளறும் உடனே குணமாகிறது. உணவும் நன்கு செரிக்க ஆரம்பிக்கிறது.
- வீட்டில் எப்போதும் கறுப்பு மிளகுத் தூள் இருப்பது நல்லது. ஜீரணம் ஆகாதபோதும், நிறையச் சாப்பிட பிறகும் கால் தேக்கரண்டி மிளகுத் தூளை மோரில் கலந்து குடித்தால் உடன் ஜீரணமாகும். இல்லையெனில் வெல்லக்கட்டியில் ஆறு மிளகை வைத்து அரைத்து அந்தப் பொடியை தண்ணீருடன் சாப்பிடலாம்.
- தும்மல் மற்றும் சளியுடன் ஜலதோஷம் என்றால் இருபது கிராம் மிளகுத்தூளை பாலில் கொதிக்க வைத்து ஒரு சிட்டிகை மஞ்சள் தூளும் கலந்து தினம் ஒரு வேளை வீதம் மூன்று நாட்கள் மட்டும் சாப்பிடவும்.
- பற்சொத்தை, பல்வலி, பேசும் போது நாற்றம், பல் கூச்சம் உள்ளவர்கள் சில நாட்களுக்கு மிளகுத் தூளும் உப்பும் கலந்த பற்பொடியை வீட்டில் தயாரித்துப் பல் துலக்கி வரவும்.
- மிளகு இரசமும், மிளகு சோந்த உணவு வகைகள் மூளையின் செயற்பாட்டை அதிகரிக்கச் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசு வளர்ப்போம் பசுவினைப் பாதுகாப்போம்

சைவ வழிபாட்டில் முக்கிய இடம் பெறுவது பசு வழிபாடாகும். ஏனைய மிருகங்களுக்கு இல்லாத சிறப்பு இப் பசுவிற்கு உண்டு. சைவ சமயத்தின் தாற்பரியமாக திகழ்வது பசுவாகும். பசுவானது தெய்வாம்சம் மிக்கதாக போற்றி வழிபடப்படுகின்றது. இன்றைய சூழலில் இத்தகைய பசுக்கள் பேணிப் பாதுகாக்கப்படுகின்றனவா?



பசுவைத் தெய்வமாகப் போற்றி வணங்கியோர் இன்று தடம் மாறுகின்றார்கள். இத்தகைய பசுவதை என்னும் பாவச் செயல்கள் நிறுத்தப்படவேண்டும். இதற்காகப் பசுக்கள், இடபங்களைப் பேணும் இணையத்தினர் பசுக் கொலைக்கு எதிராக செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். காரணம் பசுக் களானது தெய்வாம்சம் பொருந்திய வையாக விளங்குகின்றன. ஏன் பசுவதைக்கு எதிராக போராட்டங் கள் நடைபெறுகின்றன என்பதை நாம் சிந்திக்கும் போது பசுவின் சிறப்பானது நன்கு விளங்கு கின்றது. பசுவின் சிறப்புப் பற்றி

பசுவினை கோமாதா என வழிபடும் மரபு நம்மிடையே பழங்காலந் தொட்டு நிலவி வந்துள்ளது.

சிவலோகத்திலே சிவனது சந்நிதியில் இடபம் இருக்கும் அதன் பக்கத்திலே நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்னும் ஐவகைப் பசுக்கள் இருக்கும். இவை முறையே கபிலநிறம், கரு நிறம், வெண்ணிறம், புகைநிறம், செந்நிறம் உடையனவாம். இவ்வைந்தும் சிவனது திருவருளினாலே திருப்பாற்கடலில் இருந்து சிவபூசையின் பொருட்டும், யாகாதி கருமங்களின் பொருட்டும் பூமியில் உற்பவித்தன. இப்பசுக்களின் ஒவ்வொரு உறுப்பிலும்

இவற்றிற்கு என்ன நடக்கின்றன என்பன சிந்திக்கவேண்டிய விடயமாகின்றது. இத்தகைய சிந்தனைப்புலத்திலே சைவப்புலவர் சு.செல்லத்துரையால் எழுதப்பட்ட கோமாதா எனும் நூலில் இடம்பெறும் பாடலானது மேலும் ஆழமான சிந்தனைக்கு தூண்டுகின்றது. இன்றைய சம கால நடப்பியலைக் காட்ட விளைகின்றது. அவருடைய பாடல்களிலே,

**'கோபூசை செய்தென்றும் கோயில்**
**தோறும்**
**கும்பிட்டு வாழ்ந்த மக்கள்**
**கோலம்மாறிக்**
**கோவினையே கொல்களத்தில்**
**வெட்டிவீழ்த்திக்**
**கொத்துறொட்டி ஆக்கியுண்ணல்**
**கொடுமையன்றோ**
**தாமாகத் தாவரநல் லுணவையுண்டு**
**தமதுழைப்பும் தகுபயனும் தந்துவாழும்**
**கோமாதா குலத்தினையே கொன்று**
**தின்னும்**
**கொடுமையினைப் போக்கிடவே**
**திரண்டு வாரீர்' எனக்**
**குறிப்பிடுகின்றார்.**


இவருடைய இவ் அறைகூவலானது சமகால யாழ்ப்பாணச் சூழல் எத்திசை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது என்பதைக் காட்டுகிறது. இது வேதனைக்குரிய விடயமாகும். இதற்குச் சான்றுகளாக இன்று அதிகரித்துச் செல்லும் மாட்டிறைச்சி கடைகளையும் கொத்துரொட்டிக் கடைகளையும் குறிப்பிடலாம். நாவலரது காலத்தில் கந்தபுராண கலாசாரம் என உயர்நிலை பெற்ற யாழ்ப்பாணத்துக் கலாசாரம் எத்தகைய இழிநிலை நோக்கிச் செல்கின்றது என்பது கேள்விக்குரிய விடயமாகும். யாழ்ப்பாணச் சூழலில் பண்பாட்டு அடையாளங்களுடன்

யும் ஏன் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும் என்பதும் சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

### பசுவின் சிறப்பு

தமிழர் வாழ்வின் உலகியல் செழிப்புக்கு உரமூட்டுவது பசுவாகும். தாயினுடைய, தெய்வத்தினுடைய பிரதி விம்பமாகக் கருதப்படுவது பசு. அதனாலேயே அது அழும் பொழுது அம்மா என்று அழுகின்றது.

பசுவிலிருந்து பெறப்படும் அனைத்துப் பொருட்களும் சமய பூசை வழிபாட்



டில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இதனால் பசுவைப் பூசித்து வழிபடுவதே மனித வாழ்வின் தர்மம் எனப் படுகின்றது.

சிவபெருமான் இடபத்தை வாகனமாகக் கொண்டுள்ளார். தருமமே இடபமாகி சிவபெருமானுக்கு வாகனமானது என்பார்கள். தர்மமே இடபதேவரானது என்றால் தர்மத்தின் பெருமைக்கும் இடபத்தின் பெருமைக்கும் இணையில்லை. மாடு என்றால் செல்வம். 'விடை தேவர் குலமன்றோ இச்சுரபி குலம்' என்று சேக்கிழார் சுவாமிகள் போற்றுவர்.

தெய்வத்தன்மையைக் காணலாம். பசுவினது உடலில் தெய்வங்களும், தீர்த்தங்களும், உலகங்களும், முனிவர்களும் கோயில் கொண்டிருக்கிறார்கள். அவற்றினை நோக்கும் போது,

**கொம்பின் அடியில்** - பிரம விஷ்ணுக்கள்
**கொம்பின் நுனியில்** - கோதாவரி முதலிய தீர்த்தங்களும் சராசரங்களும்
**சிரத்தில்** - சிவன்
**நடு நெற்றியில்** -உமாதேவி
**மேல் நாசியில்** - முருகக் கடவுள்
**உள் நாசியில்** -நாகேசர்
**இரு காதுகளிலும்** - அச்சுவினி தேவர்
**இரு கண்களிலும்** - சூரியசந்திரர்
**பல்லில்** - வாயு
**நாவில்** - வருணன்
**ஊங்காரத்தில்** - சரஸ்வதி
**இருதயத்தில்** - இயமன்
**கெண்டைத்தலத்தில்** - இயக்கர்
**உதட்டில்** - உதய அஸ்தமன சந்திகள்
**கழுத்தில்** - இந்திரன்
**திமிலில்** - அருக்கர்கள்
**மார்பில்** - சாத்தியர்
**நான்கு கால்களிலும்** - அனில வாயுக்கள்
**முழந்தாள்களில்** - மருத்துவர்
**குரத்தின் நுனியில்** - நாகலோகத்தார்
**குரத்தின் நடுவில்** - கந்தருவர்
**மேற்குரத்தில்** - தேவமாதர்கள்
**முதுகில்** - உருத்திரன்
**சந்திகளில்** - வசுக்கள்
**அரைப்பலகையில்** - பிதிரர்கள்
**பகத்தில்** - சத்தமாதர்கள்
**அபானத்தில்** - இலக்குமி
**அடிவாலில்** - நாகேசர்
**வால்மயிரில்** - சூரியன் ஒளி
**மூத்திரத்தில்** - கங்கை
**சாணத்தில்** - யமுனை
**உரோமத்தில்** - முனிவர்கள்

எனச் சொல்லப்படுகின்றன. இதனால் பசுவினது உடலானது தெய்வீகம் நிறைந்ததாக விளங்குகின்றது.

பசுவினது சிறப்பானது வீட்டுக்கிரியையில் தொடங்கி ஆலயக்கிரியை வரை முக்கிய இடம்பெறுகின்றது. பஞ்ச கௌவியம் எனப்படும் கோசலம், கோமயம், பால், தயிர், நெய், என்பன அபிடேகத்திற்குரிய திரவியங்களாக விளங்குகின்றன.

சைவநெறியில் விதிக்கப் பெற்ற எண் வகையான ஸ்தானங்களுள் மருதஸ்நானம் என்பதும் ஒன்று. பசுவின் காலில் பட்டதூசியில் இலட்சுமி கடாட்சம் உண்டு. திருநீற்றை நிறையப்பூசுதல் ஆக்கிநேயஸ்தானம் எனப்படும். திருக்கோயிலில் கிடைக்கப் பெறும் பிரசாதமான திருநீறு பூசுதல் பார்த்திப ஸ்நானம் எனப்படும்.

மகா கும்பாபிஷேகம், வீடு குடிபுகுதல், திருமணக்கிரியைகள், கோபூசை பிதிர்யாகங்களில் கோதானம் என்பவற்றில் பசுவானது முக்கிய இடம்பெறுகின்றது. பசுவின் உயர்வு கருதி சைவசித்தாந்தம் ஆன்மாவை பசு என்றழைக்கின்றது. பசுக்களின் முதல்வன் என்பதால் சிவன் பசுபதி எனப்படுகின்றான்.

திருமுறைகளிலே பசுவின் சிறப்பானது உயர்வாகப் போற்றப்பட்டுள்ளது. 'யாவர்க்குமாம் பசுவுக் கொரு வாயுறை' என்று திருமூலரும் 'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்' என சம்பந்தரும் உயர்வாக போற்றுகின்றனர்.

இலக்கியங்களை நோக்கும் போது தமிழ் அரசர்கள் பசுவுக்குத் தீமை செய்யாது போர் செய்தனர் எனவும் பசுக்களைப் பாதுகாப்பதில் பகை அரசரும் உடன்பாட்டுடன் செயற்பட்டார்கள் என்பதை பின்வரும் புறநானூற்றுப் பாடல் புலப்படுத்துகின்றது.

**'ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்**
**தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன்**
**இறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறாதோரும்**
**எம் அம்பு கடிவிடுதலும் நும் அரன்**
**சேர்மின்'**

எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வேதங்களில் முதல் வேதமாகிய இருக்கு வேதப்பாடல்கள் பசுவைப் போற்றுகின்றன.

எவரும் தீங்கு செய்தல் கூடாது. உருத்திரனின் அன்னை, வசுக்களின் பிள்ளை, அமுதத்தின் மையம், ஆதித்தியனின் சகோதரி அனைவருக்கும் அதிதி, பாவம் அறியாத பிராணி எனக் குறிப்பிடப்படுகின்றது.

**எஸ்.ரி.குமரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆழிப்பேரலைக்கு உறவுகளைப் பறிகொடுத்த மக்களுக்கு ஆறுதல் சொல்வார் யாரோ?

"கண்ணிலே நீரெதற்கு காலமெல்லாம் அழுவதற்கு..." என்று நவயுகக் கவிஞன் ஒருவன் பாடிச்சென்றான். எமது வாழ்வியல் நீரோட்டத்தில் இடம்பெறும் அவலங்கள் பற்றிச் சிந்திக்கும்போது மேற்போந்த வரிகளே மனதில் நிழலாடுகின்றன.

இலங்கை வாழ் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்களது வாழ்வியல் பயணத்தைச் சீர்குலைக்கும் துன்பச் சுமைகள் அதிகம். போரின் தீ நாக்குகளுக்குள் இரையாகிப் போனவர்கள் ஏராளம் பேர். அத்தகைய செயற்கை அழிவுகள் ஒருபுறம் எமது தொண்டையை நெருக்க இயற்கை அழிவுகளும் அவ்வப்போது எம்மை சீண்டுகின்றன. இதனால், துன்பச்சுழியில் சிக்கிய எமது வாழ்வியல் பயணம் பல்வேறு தடங்கல்களுக்கு மத்தியிலும் தொடர்ந்து வருகின்றமை கண்கூடு.

ஆம். தென்னாசியப் பிராந்தியத்தையே உலுக்கிய சுனாமிப் பேரனர்த்தம் ஏற்பட்டு 6 வருடங்கள் கடந்தோடிவிட்டன. எனினும், அதனால் ஏற்பட்ட வடுக்கள் இன்னும் ஆறாத ரணங்களாகவே இருக்கிறன. 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் காவுகொள்ளப்பட்ட ஏராளமான உயிர்கள், சொத்தழிவுகள் இன்னும் எம் மனங்களைக் காயப்படுத்துக்கின்றன.

அன்று காலை 8.45 மணியிருக்கும் கடலன்னையே தமது வாழ்வளிக்கும் தெய்வமாகக் கருதி கடலை நம்பிவாழும் கரையோர மீனவக் குடும்பங்கள் தமது வழமையான வேலைகளைச் செய்துகொண்டிருந்தன. அன்று விடுமுறை நாள் என்பதால் சுற்றுலாப் பயணிகளும் கடற்கரைகளில் குழுமியிருந்தனர். கரையோரக் கிராமங்களில் உள்ள சிறுவர்களும் விடுமுறை நாளை இன்பமாகக் கழிக்க ஆயத்தமாக இருந்தார்கள். அந்த கண நேரத்தில் இயற்கையின் சதி விளையாடியது. சீறிவந்த இராட்சத அலைகளின் முரட்டுக்கரங்களுக்குள் ஏராளமான அப்பாவி மக்கள் அகப்பட்டு மாண்டனர்.

தென்னாசியப் பிராந்தியத்தையே உலுக்கிய ஆழிப்பேரலை பல நாடுகளிலுள்ள கரையோரப் பிரதேசங்களைத் துவம்சம் செய்தது. போரின் வலிகளைச் சுமந்து கொண்டிருக்கும் இலங்கை வாழ் தமிழர்களையும் அந்த இராட்சத அலைகள் விட்டு வைக்கவில்லை. போரின் தீ நாக்குகளுக்குள் அகப்பட்டு மாண்ட தமது உறவுகளை எண்ணி ஏங்கிநின்ற மக்களுக்கு இந்தப் இயற்கைப் பேரிடர் மேலும் மீளாத் துயரத்தைக் கொடுத்தது.

அன்றைய தினம் வீதிகள் எங்கும் பரபரப்புக் குடிகொண்டிருந்தது. சாடைமாடையாக பேரிரைச்சல்களுடன் ஓடித்திரிந்த வாகனங்கள், அபாய ஒலியுடன் பறந்து கொண்டிருந்த நோயாளர் காவு வண்டிகள் மக்களின் மரண ஓலங்கள் என ஒரே ரணகளமாகியிருந்தன.

என்ன நடந்ததென்றே அறிய முடியாதளவிற்கு பரபரப்பு சூழ்ந்திருந்த வேளை வகைதொகையின்றி யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் குவிந்த பிணங்கள் ஏதோ பேரிடர் நிகழ்ந்துவிட்டது போன்ற பிரமை எல்லோர் மனங்களிலும் குடி கொண்டிருந்தது. காயப்பட்டவர்களின் தொகையும் அதிகரித்தமையால் யாழ். போதனா வைத்தியசாலை விடுதிகள் நிரம்பி வழிந்தன.

யுத்தம் நடைபெற்றபோது கூட இத்தகையதொரு அனுபவம் எம் மக்களுக்கு ஏற்படவில்லை. இந்த விஞ்ஞான யுகத்தில் வாழும் நாம் இவ்வுலகில் எத்தனையோ வியத்தகு மாற்றங்களெல்லாம் நடந்தேறும் நிலையில் இத்தகையதொரு அழிவை



தடுக்கமுடியாதவர்களாகவுள்ளோம். இதிலிருந்து இயற்கையை யாராலுமே வெல்லமுடியாது என்ற நினைப்பு துளிர்விட்டது.

இலங்கையின் வட எல்லையிலுள்ள காரைநகர் - கசூரினா கடற்கரையிலிருந்து பருத்தித்துறை முனை உட்பட கிழக்குக் கரையோரங்கள் தென் கரையோரங்களையும் உள்ளடக்கியவாறு ஆழிப்பேரலை தனது திருவிளையாடல்களை அரங்கேற்றியது. சுனாமி புரிந்த ஊழித் தாண்டவத்தால் கரையோரப் பிரதேசங்களிலெல்லாம் உயிரழிவுகளும் சொத்தழிவுகளும் நிதர்சனமாயின. கடற்கரைக்கு அப்பால் வாழ்ந்தவர்களையும் துரத்திவந்த பேரலை கணப்பொழுதில் அள்ளிச் சென்றது. மீண்டும் ஒரு யுத்தம் தொடங்கிவிட்டதோ என்ற பிரமிப்பில் இருந்ததாக சுனாமியிலிருந்து உயிர் பிழைத்த ஒருவர் கூறினார்.

'கிபிர்' விமானங்களின் இரைச்சல்களை நிகர்த்ததாகவே சுனாமிப் பேரலைகளின் இரைச்சல்கள் கேட்டதாக அந்தப் பேரலைகளின் இரைச்சலைக் கேட்டவர்கள் தெரிவித்தார்கள்.

இப்பேரனர்த்தத்திற்கு வடக்கு-கிழக்கைச் சேர்ந்த மக்களே அதிகம் பாதிக்கப்பட்டனர். இவ் இயற்கையின் சீற்றத்தால் உயிர் அழிவுகள் சொத்தழிவுகள், அங்கவீனமடைந்தோர், வதிவிடத்தை இழந்து நிர்க்கதியானோர், அநாதைகளானோர், உடல் உளப் பாதிப்புக்குட்பட்டோர் என பல தரப்பட்ட பாதிப்புக்களை மக்கள் சந்தித்தனர். பாதிப்படைந்தோரில் அதிகளவானோர் மீனவக் கிராமங்களைச் சேர்ந்தவர்களாகையால் அவர்களின் மீன்பிடி உபகரணங்கள் எல்லாம் நாசமடைந்தன. இதனால் அவர்கள் தமது அன்றாட வாழ்க்கையையே கொண்டு நடத்தமுடியாமல் அல்லாடி நின்றனர். இவர்களுக்கு தேவையான உடனடி உதவிகளை அவசர அவசரமாக நகர்ப்புற மக்கள் வழங்கியமையை யாராலும் மறக்கமுடியாது. உணவு, உடை போன்ற அத்தியாவசிய உதவிகள் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்த மக்களுக்கு வழங்கப்பட்டன.

அரச இயந்திரங்கள் உறங்கிக்கொண்டிருந்தபோது அயல் வீடு பற்றியெரியும் போது யாருடைய அனுமதிக்கும் காத்திராது தீயை அணைக்க முற்படுவோரைப்போல் பொது மக்கள் தமது சகோதரர்களுக்கு நிகழ்ந்த அவலத்தைப் போக்கச் செயற்பட்டமையைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. சுனாமிப் பேரனர்த்தம் ஏற்பட்டு ஆறு ஆண்டுகள் கடந்தோடி விட்ட நிலையிலும் இன்னும் மக்கள் அத்துயரிலிருந்து விடுபடமுடியாதவர்களாக தவித்துவருகின்றனர்.

பல தொண்டு நிறுவனங்கள் மனிதாபிமான உதவிவழங்குவதற்காக இலங்கையில் கால்பதித்துள்ளன. எனினும் அவை வழங்கிய உதவிகள் வினைத்திறனான வகையில் சென்றடைய வில்லையென பலரும் ஆதங்கப்படுகின்றனர். இதற்கு அரசும் அது சார்ந்த திணைக்களங்களும் ஒத்துழைக்காமையும் ஒரு காரணம் என்றவாறும் தொண்டு நிறுவனங்களால் முன்வைக்கப்படுகின்றது.

எது எப்படியோ, நிகழக்கூடாத ஒரு சம்பவம் நிகழ்ந்துவிட்டது. இதற்கு இயற்கையைத் தவிர யாரையும் குற்றம் கூறிப் பயனில்லை. என்றாலும் தப்பிப்பிழைத்தோருக்கு உரிய உதவிகள் வழங்கப்படவேண்டும்.

அவர்களை சமூகத்துடன் இணைப்பதற்கான நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டவர்கள் இறங்க வேண்டும். இதற்கு அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் தன்நலம் கருதாத சேவையாற்ற முன்வரவேண்டும்.

**இலங்கையின் சுனாமிப்பேரனர்த்தத்தின்போது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை-**

| மாவட்டம் | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 1256 |
| முல்லைத்தீவு | 2902 |
| கிளிநொச்சி | 32 |
| திருகோணமலை | 984 |
| மட்டக்களப்பு | 2975 |
| அம்பாறை | 9051 |
| அம்பாந்தோட்டை | 4500 |
| மாத்தறை | 1061 |
| காலி | 3774 |
| களுத்துறை | 170 |
| கொழும்பு | 65 |
| கம்பஹா | 07 |

மேற்கூறப்பட்ட 12 மாவட்டங்களில் 38 ஆயிரத்து 195 பேர் இறந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மையத்தின் புள்ளிவிபரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சுனாமிப்பேரனர்தத்தினால் தென்னாசியப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை-**

| | |
|---|---|
| இந்தோனேஷியா | 1 84 135 |
| இலங்கை | 38 195 |
| இந்தியா | 22 969 |
| தாய்லாந்து | 5305 |
| கிழக்கு ஆபிரிக்கா | 137 |
| மலேசியா | 74 |
| மியான்மார் | 59 |
| பங்களாதேஷ் | 02 |

*மேற்படி நாடுகளில் 2 இலட்சத்து 50 ஆயிரத்து 676 பேர் சுனாமி அனர்த்தத்தின்போது உயிரிழந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.*

*சுனாமி அனர்த்தத்தால் காணாமற் போனோர்களின் தொகை இத்தரவுகளில் உள்ளடக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

எஸ். நதிபரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலக்கிய இன்பம்

**பழந்தமிழ் புலவர்கள் கூறும் மேன்மக்களும் கீழ்மக்களும்**

'சாதி இரண்டென்று இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர்' என ஔவையின் வார்த்தைகளிலிருந்து மனிதரில் சாதிகள் இருவகைப்படுத்தி நோக்கப்படுகின்றது. ஒன்று ஆண்சாதி மற்றையது பெண்சாதி. ஆனால் நாம் மனிதரில் பல வேற்றுமைகளை உருவாக்கி தீண்டத்தகாதோராக குரோத மனப் பான்மையுடன் நோக்கும் வழக்கம் நம்மிடையே இருந்து வருகின்றமை கண்கூடு. பழந்தமிழ் நூலோர் மனித சாதியை மேன்மக்கள் என்றும் கீழ் மக்கள் என்றும் வகுத்து நோக்கினார்கள். உயர் குடியிற் பிறந்தவர்கள் நற்குணங்களை தன்னகத்தே கொண்டவர்களாகவும் தீய எண்ணங்களை உடையவர்களை இழி குலத்தவர்களாகவும் நோக்கினர்.

இன்று எம்மத்தியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தவர்கள் மத்தியில் நிலவிவரும் சாதி பற்றிய கருத்தியலுக்கும் பழந்தமிழ்ப் புலவர்கள் வாயிலாக அறியக்கிடக்கின்ற பழந்தமிழரின் சாதி பற்றிய கருதுகோள்களுக்குமிடையே பாரிய வேறுபாடுகளை காணலாம்.

பழந்தமிழ் நூலோர் கூறும் உயர் குடிப்பிறந்தோர் பற்றிச் சுருக்கமாகப் பார்ப்போம்.

மேன்மக்கள் எப்போதும் தமது நிலையினின்றும் மாறமாட்டார்கள். தமக்கென்று உரிய கொள்கையினின்றும் பிறழமாட்டார்கள். தமக்கு பிறர் தீமை செய்யினும் உத்தம குணத்துடன் அவர்களுக்கு நன்மையே செய்வார் என உயர் குடிப்பிறந்தார் பற்றிய பண்புகள் எடுத்து விளக்கப்பட்டுள்ளது.

இதனை ஔவையார் பின்வருமாறு கூறுகிறார்.

'கெட்டாலும் மேன்மக்கள்
மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்'

என்பதிலிருந்து உலகில் உள்ள பொருட்களைச் சுட்டால் கரியாகிவிடும். ஆனால் சங்கு மட்டும் சுட்டாலும் கரியாகாது. மாறாக வெண்மையாகவே காட்சி தரும்.அதே போலவே உயர்குடிப்பிறந்தாரை எவ்வாறெல்லாம் துன்புறுத்தினாலும் தமது நிலையினின்றும் வழுவமாட்டார்கள் என்பதே அவரது கருத்தாகும்.

இதிலிருந்து பெரியவர்கள் எத்தனை துன்பங்கள் வரினும் தமது நிலையினின்றும் மாற மாட்டார்கள் எனலாம்.

கீழ் மக்கள் பற்றிக் கருத்துரைக்கும் பழந்தமிழ் நூலோர் கீழ் மக்கள் என்போர் உதவி புரிந்தோர்களையும் மறந்து அலட்சியம் செய்வர். நன்றி பாராட்டுதல்கள் என்பவை அவர்களது அகராதியிலேயே இருக்காது.

இன்றைய காலகட்டத்தில் எமது சமூகத்தின் மத்தியிலேயும் இப்படியான இழி குணங்களை உடையவர்கள் மலிந்து காணப்படுகிறார்கள். தமது காரியம் நிறைவேறும் மட்டும் பெரியோர்களுக்கு 'பந்தா' பிடிப்பவர்கள் தமது காரியம் நிறைவேறியதும் செத்த நாயிலிருந்து உண்ணிகளர்வது போல் விலகி விடுவார்கள். இத்தகைய கருத்துக்களை பழந்தமிழ்ப் புலவர் ஒருவர் பின்வரும் சம்பவத்தினூடாக விளக்குகின்றார்.

கணவனும் மனைவியும் தமது இல்லற வாழ்வில் இணைந்திருந்தார்கள். மனைவி நாள்தோறும் கணவனுக்குரிய பணிவிடைகளை அன்போடு செய்து வந்தாள். உணவு வகைகளை இன்முகத்துடன் பரிமாறினாள். இன்னுரை கூறுவாள், விசிறுவாள், இரவிலே நித்திரை செய்யும் போது கால்களை வருடுவாள். படுக்கை விட்டு எழும்பியதும் கணவருக்குரிய அத்தனை கடமைகளையும் செய்தாள். இவ்வாறு தனது கணவனுக்கு சேவை செய்து வந்தாள். துரதிஷ்டவசமாக பொருளீட்டு தன் பொருட்டு வேறொரு தேசத்திற்கு கணவன் தன் மனைவியை விட்டுப் பிரிந்துசெல்ல வேண்டி ஏற்படுகிறது. அம் மாதரசியை விட்டுப் பிரிய மனமின்றி உள்ளம் உடைந்து கவலையுடன் புறப்பட ஆயத்தமானான்.

அப் பெண்மணியோ உடலை விட்டு உயிர் போவது போல தன் கணவன் போவதைக் குறித்து பெரிதும் வருந்தினாள். உள்ளம் உருகியவாறு கணவனின் திருமேனியை உற்று நோக்கியபடி இருந்தாள். அவளைத் திரும்பத் திரும்பப் பார்த்தபடியே செல்லுகின்றான். இந்த இடத்தில் அந்த பெண் தனக்குத்தானே கூறி வருந்துவதாக புலவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். அவரது பாடல் இதோ,

'மா லோதி நித்தம் தமியன்
வருந்தி வருடப் பெற்ற
காலோ நடந்தன,கண்ணோ
திரும்பின கற்றவர்க்குப்
பூலோகமும் தரும் மாவலிவா
ணன் பொருப்பிடத்தே
மேலோர் இரங்குவார், கீழோர்
எந்நாளும் விரோதிப்பாரே'

இதன் கருத்து யாதெனில்,

நான் நாள் தோறும் அன்புரை கூறி என் மெல்லிய கரங்களால் வருடப்பெற்ற உந்தன் கால்கள் என்னை விட்டுப் பிரிந்து செல்கின்றன. ஆனால் என்னிடமிருந்து எந்த தயவையும், உதவியையும் பெறாத உந்தன் கண்கள் என்னை அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்க்கின்றன.

இதிலிருந்து கண்கள் மேலானவை கால்கள் நன்றிமறந்ததனால் கீழானவை. எனவே மேலான உனது கால்களே விரோதிக்கின்றன. என்பதே இந்தப் பாடலின் கருத்தாகும். இதன் உட்பொருள் யாதெனில் மேலோர் என்றும் உதவி புரிவர். அதாவது பிறரிடம் எந்த வித பிரதிபலனையும் பாராமல் உதவுவார்கள். ஆனால் கீழோர் உதவிபுரிந்தவரையும் வெறுத்து விரோதம்புரிவர். என அழகாகக் கலாரசனையுடன் மேலோர், கீழோரின் பண்புகளைப் புலவர் எடுத்து விளக்கியுள்ளார்.

ஆக, எமது சமூகத்தில் இன்று புரையோடிப் போயிருக்கின்ற சாதிக் கொடுமை பற்றி விவாதிக்கும் பெரியவர்களிடத்தே மேற்கூறிய உயர்குடிப் பிறந்தாரிடத்தில் இருக்க வேண்டிய உயர் பண்புகள் பொய்த்துப்போய் குரோத உணர்வு பழிவாங்கும் வக்கிர உணர்வுகள் மேலோங்கியிருக்கின்றன.


இந்நாட்டில் இத்தனை அவலங்களை நாம் சந்தித்து வருகின்றோம். எங்கு பார்த்தாலும் விரோதங்களும், அழிவுகளுமே எச்சங்களாகிக் கிடக்கின்றன. பண்டைய எமது தமிழ்ப் பாரம்பரியங்களிலுள்ள மூத்தோர் வகுத்துரைத்த உயர் விழுமியங்களைப் பின்பற்றி அதனின்றும் விலகிச் சென்று கொண்டிருப்பதையே இது காட்டுகின்றது.

எனவேதான் எம் முன்னோர் வாழ்ந்து காட்டிய அற வாழ்வைப் பின்பற்றி அதன்படி நடந்தால் இம் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்பது நிதர்சனமாகும்.

**எஸ். நதிபரன் B.A. (Hons)**

# ஊர்ப் புதினம்





அது யாழ்ப்பாண நகரை அண்டிய ஒரு சந்தை. எனது வீட்டுத் தேவைக்கு பழவகைகள் சிலவற்றை வாங்கலாமென நானும் நின்றிருந்தேன்.

மரக்கறிகள், பழவகைகள் ஒரு புறமும், மீன் வகைகள் இன்னொரு புறமும் இருந்தன.

சந்தையின் பரபரப்பில் நானும் நின்றிருந்தேன்.

மாம்பழங்கள் எங்கேனும் இருக்கிறதா? எனக் கண்ணோட்டம் விட்டேன். சற்றுத் தூரத்தில் மாம்பழ வியாபாரி ஒருவரைக் கண்டு அந்தப் பக்கம் நோக்கி முன்னேறினேன்.

அப்போது மாம்பழம் வாங்கிய ஒருவரைக்கண்டேன். அவர் மாம்பழம் வாங்கும் முறை என்னைச் சிந்திக்க வைத்தது.

சொப்பிங் பை ஒன்றில் வாசித்த பழைய புதினப் பத்திரிகைத் தாள்கள் சிலவற்றை வைத்திருந்தார்.

அவற்றை சொப்பிங் பையினுள் பரவி விட்டு அவற்றுனுள் நன்றாகப் பழுத்த அந்த மாம்பழங்களை வாங்கினார். நான் அதைப் பார்த்து விட்டு ஏன் கண்ணூறு, நாவூறு பட்டு பழத்தின் ருசி போய் விடுமோ எனப் பயப்பிடுகிறீர்களோ எனச் சிரித்துக் கொண்டே கேட்டேன்.

'ஓ.... அதுவும் ஒரு காரணந்தான். ஆனால் பிரதான காரணம் அதுவில்லை. நன்றாகப் பழுத்த மாம்பழங்களைச் சொப்பிங் பையினுள் பட்டு உராய்ந்து தோல் கறுத்து பழத்திலும் அழுகல் தாவி விடும். இதனால் பழங்களை பழுதாகி சுவையும் கெட்டு விடும்.

இவ்வாறு பழைய புதினப் பத்திரிகைத் தாள்களால் மூடி சொப்பிங் பையினுள் வைத்தால் பழங்கள் நன்றாக இருக்கும். வீட்டில் சற்று மறந்தாலும் பழங்களின் சேதம் பெரிதாக இருக்காது.

நான் மீன்களை வாங்கும் போதும் இவ்விதம் பேப்பரால் சுற்றித்தான் வாங்குவேன். மீன் வாங்கி விட்டு ஓரிரு மணித்தியாலங்கள் வேறு வேலை பார்த்துவிட்டு வீட்டிற்குச் சென்றாலும் அவை பழுதடையாமல் இருக்கும். மீன்களைச் சந்தையிலேயே வெட்டு விட்டுப் பேப்பரில் போடுவது முக்கியம்.

அப்பொழுது தான் பழுது படாமல் இருக்கும். அதைவிட பேப்பரில் மூடி பொருள்களை நாம் சொப்பிங் பாக்கினுள் கொண்டுசென்றால் மற்றவர்களின் விடுப்புக் கதைகளுக்கு பதில் சொல்லும் அவசியமும் இருக்காது அல்லவா' என்றார்.

நல்லதொரு முன் உதாரணம். சிறந்த பாதுகாப்பு முறைகள். பஞ்சிப்படாமல், மறதிக்குணம் இல்லாது நாமும் பின்பற்றிப் பார்த்தால் என்ன

வாசகர்களே! இது உங்களின் கவனத்திற்கு.

**- சிவகாமி -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கில் படித்த இளைஞர்கள் வேலையற்றுக் கிடக்கும் பரிதாப நிலை!



இன்று வடக்கு - கிழக்கு பகுதி முழு வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. வேலையின்றி இளம் சமூகம் பெரும் சுமையுடன் பாரிய நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளது.

வறுமைக்கு எதிராக உலகம் போராடத் தவறிவிட்டது என ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் கூறியுள்ளார். வறுமைக்கு எதிரான போராட்டத்துக்கு நிதியுதவி வழங்க செல்வந்த நாடுகளும் தவறி வருகின்றன.

வறுமையாலும் பட்டினியாலும் தினமொன்றுக்கு 25 ஆயிரம் பேர் எதிர்காலத்தில் உயிரிழப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது மூன்றாம் மண்டல நாடான இலங்கையில் மீண்டும் பஞ்சம், பசி, பட்டினி ஏற்படக்கூடிய அபாயநிலை தோன்றிவருகின்றது. குறிப்பாக, இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் க.பொ.த. சாதாரணதரம், உயர்தரம் கற்ற 2 இலட்சத்து 83 ஆயிரம் இளைஞர் - யுவதிகள் வேலையற்று தொழில்களின்றி அலைந்து திரிகின்றனர். இவர்கள் குடும்பத்தில் தொழில் அற்ற மிகை சுமையாளர்களாக (Excess Burden) வாழ்ந்து வருகின்றனர்.

மேலும், வடக்கு-கிழக்கில் வேலையற்ற பட்டதாரிகளை அரசதுறைகளில் பொருத்தமான பதவிகளில் வேலைக்கு அமர்த்தும் திட்டத்தின் கீழ் 1999, 2005 இல் தொழில்கள் வழங்கப்பட்ட போதும் 80 வீதமான பட்டதாரிகள் தொடர்ந்தும் வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் பதிந்து பட்டங்களைச் சுமந்தவாறு அடுத்த 5, 6 ஆண்டுகளுக்கு காத்திருக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது.

இதனைவிட தற்போது 4 ஆண்டுகள் தொழில்நுட்ப கல்லூரிகளில் பயின்ற HNDA, HNDC மற்றும் டிப்ளோமா பெற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கி நாட்டின் வறுமை நிலையைத் தணிப்பது அரசின் கடமையாகும்.

ஆனால், அரசு இவர்களது வேலை விடயத்தில் பாராமுகமாகவுள்ளது. இவ் விடயத்தில் வடக்கு- கிழக்கு பகுதிகளில் போட்டா போட்டி போட்டுக்கொண்டு வெற்றிபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் பத்திரிகைகளில் நாம் நடவடிக்கை எடுப்போம்; பாராளுமன்றில் கதைப்போம்; நிதியமைச்சில் கதைப்போம் என்கிறார்கள்.

இப்படிக் கூறிவிட்டால் பிரச்சினையும் தீராது வேலைகளும் வந்து சேராது - வறுமை நிலையும் தணியாது. இதனை விட வடக்கு-கிழக்கு பகுதிகளில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கட்சியொன்று அமைச்சுப் பதவி எடுத்துள்ளது. அந்த அமைச்சு கூட வறுமைத்தணிப்புத் திட்டத்தின் ஓர் அங்கமாக வேலை வாய்ப்பு விடயத்தில் எவ்வித அக்கறையும் செலுத்தவில்லை.

எனவே, இன்றைய காலகட்டத்தில் வடக்கு-கிழக்கில் உள்ள படித்து விட்டு வேலையற்று இருக்கின்ற இளைஞர் - யுவதிகளுக்கும் மிகுதியான வேலையற்ற பட்டதாரிகளுக்கும் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கும் பொறுப்பு வாய்ந்த அரச அதிகாரிகள், கல்விமான்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ('வாக்குக் கேட்ட போது வழங்கிய உறுதிமொழிகளுக்கும்') தார்மீக பொறுப்பேற்று வேலை வழங்கும் விடயத்தில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், விலைவாசி அதிகரித்து சாதாரணமாக ஒருநேர உணவு கூட உண்ண முடியாத நிலையிலுள்ள வறிய ஏழை மக்களின் வாழ்வை வளம்படுத்த தற்போது வழங்கப்பட்டுவரும் சமுர்த்தி உணவு முத்திரைக்கான கொடுப்பனவை அதிகரித்து 5 ஆயிரம் ரூபா வருமானம் பெறும் (அரச அலுவலர் அல்லாத) சகலருக்கும் ஏதாவதொரு உதவித்திட்டத்தின் கீழ் உதவி வழங்கி பசி, பட்டினியைப் போக்கி எமது சமுதாயம் வறுமை தணிந்து வாழ அனைவரும் ஒரு கணம் சிந்தித்துச் செயற்பட்டால் வாழ்வு வளம் பெறும் என்பது நிச்சயம்.

**நவாலியூர் செ. ரமேஷ்**

# மண்டைதீவு வழமைக்கு திரும்புவது எப்போது?

1990 ஆம் ஆண்டு மண்டைதீவில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது பெருமளவு சொத்துக்கள் அழிக்கப்பட்டன. பலர் இறந்தார்கள். சிலரைக் காணவில்லை. அவர்கள் உயிரோடு இருக்கின்றார்களா? இல்லையா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இயற்கை வளம்கொண்ட மண்டைதீவு, சுடுகாடு போல் காணப்படுகின்றது. தற்போது யுத்தம் முடிவுக்கு வந்தும் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து தமது சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ளபோதும் இவர்களது வீடுகள் சொத்துக்கள் அழிந்த நிலை காணப்படுகின்றன.

மீளக்குடியேறிய மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் வீடுகளை நிர்மாணித்து வழங்கிவருகின்ற போதும் அவர்கள் தொழில்வாய்ப்பு இன்றி நிவாரணத்தை நம்பியே வாழ்ந்துவருகின்றனர். நிவாரணமும் போதாத நிலையிலேயே உள்ளது. மீளக்குடியேறிய சிலர் தொழில் வாய்ப்புக்கள் இன்றி மீண்டும் குடும்பமாக திரும்பிச் சென்றும் உள்ளனர்.

மண்டைதீவுப் பகுதியில் உள்ள அரசினர் பாடசாலைகளில் மண்டைதீவு கார்த்திகேசு வித்தியாலாயம் இராணுவ நடவடிக்கையின் போது முற்றிலும் பாதிப்படைந்த நிலையில் உள்ளது.

இந்த வித்தியாலயத்தைப் புனரமைத்து மீண்டும் ஆரம்பிக்குமாறு பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள், புத்திஜீவிகள் ஆகியோர் ஒன்றிணைந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். சைவப்பெரியார் கார்த்திகேசு என்பவர் நீண்ட காலத்துக்கு முன்பு தனது சொந்த பணத்தில் இப் பாடசாலையை நிர்மாணித்து நடத்திவந்தவர். பின்பு பாடசாலை அரச உடமையாக்கப்பட்டு தரமுயர்த்தப்பட்டது. மேற்படி பாடசாலையில் கல்விகற்றவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர்பதவி வகித்துவருகின்றனர். அவர்கள் வித்தியாலயப் புனரமைப்புப் பணிக்கு வேண்டிய உதவிகள் செய்யக் காத்திருக்கின்றனர். அதோடு பாராளுமன்ற பிரதிநிதிகள் தங்கள் வரவு-செலவு திட்டத்தில் கூடிய நிதி ஒதுக்கீடு செய்து வழங்கவும் முன் வர வேண்டும்.

மண்டைதீவு மக்கள் இதுவரை முழுமையாக மீளக்குடியேறவில்லை எனக் கூறி அபிவிருத்திப் பணிகளை செய்யாது காலம் தாழ்த்துவது குறித்து மக்கள் கவலையும் அதிருப்தியும் அடைந்துள்ளனர். மக்களின் அன்றாடத் தேவைக்குரிய குடிநீர் மின்சாரம் தொலைபேசி இணைப்பு பொதுச்சந்தை போன்ற அபிவிருத்திப் பணிகள் இதுவரை நடைபெறவில்லை. இந்தநிலையில் இடம் பெயர்ந்த மக்கள் எப்படி மீளக் குடியமர முடியும்?

இதேவேளை, மண்டைதீவு அரசினர் வைத்தியசாலை வீதியில் குடியிருக்கும் மக்கள் மீளக்குடியேறாததனால் அரசினர் வைத்தியசாலையை வேறு இடத்தில் திறப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இதற்கு இப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். சகல வசதிகளும் கொண்ட இவ் வைத்தியசாலையை புனரமைக்காது காலம் கடத்திவருவது குறித்து மக்கள் கவலையும் அதிருப்தியும் அடைந்துள்ளனர். மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுத்தால் மக்கள் மீள குடியமருவார்கள்.

மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட்டால் மக்கள் மீண்டும் குடியேறுவார்கள் என்பதை சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் சிந்தித்து செயற்படவேண்டும்.

மண்டைதீவு மக்களின் குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில், அல்லைப்பிட்டி செட்டிகாட்டு பகுதியில் இருந்து குழாய் மூலம் நீர் வழங்கும் திட்டத்தை நிறைவேற்றினால் குடிநீர் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

மீளக்குடியேறிய சிலர் தொழில் வாய்ப்பு இன்றி மீண்டும் வன்னி செல்வதில் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

மண்டைதீவு பகுதியில் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசத்தினால் ஆரம்பிக்கப்பட்ட மீன் தூள் ஆலை தற்போது பாதிக்கப்பட்ட நிலையில் நீண்ட காலமாக இயங்காதுள்ளது. இதை இப்பகுதி மக்களின் நலன் கருதி ஆடைத் தொழிற்சாலையாக மாற்றி அமைத்து இப்பகுதி இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படுமானால் மக்களின் இடப்பெயர்வுக்கும் தொழில் பிரச்சினைக்கும் முற்றுப்புள்ளி வைக்கலாம்.

**வேலணை நிருபர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண் 7 இல் பிறந்தவர்களுக்குரிய பலன்கள் - கேது

இப்போது இல்லற சந்நியாசிகளான 7 ஆம் எண்காரர்களைப் பற்றி விரிவாகப் பார்ப்போம். சோதிட நூல்கள் எல்லாம் இந்தக் கேதுவைப் பற்றி மிகவும் பய முறுத்துகின்றன. கேதுவைப் போல் கெடுப்பானில்லை! இராகுவைப் போல் கொடுப்பானில்லை என்று சோதிட சாத் திரங்கள் கூறுகின்றன.

இந்த எண் மனிதனின் சக்திக்கு அப் பாற்பட்டது! மற்ற எண்களெல்லாம், மனி தனின் பிராத்தனைகளுக்கும், சக்திக்கும், வசியங்களுக்கும் கட்டுப்பட்டவை. ஆனால் இந்த 7 ஆம் எண் மட்டும் இறை வனின் சர்வ வல்லமை மிகுத் எண்ணாக உள்ளது!

இவர்களது பேச்சில் எப்போதும் பரம் பொருள், விதி, இறைவன் என்ற வார்தை கள் மிகுந்திருக்கும் 7 ஆம் எண்ணானதும் இளமைக் காலத்தில் போராட்டங்களை யும், வறுமையையும் (பெரும்பாலோர் க்கு) கொடுக்கும்.

ஆனால் நடு வயதிற்கு மேல் பெருத்த யோகங்களையும், பெரும் செல்வத்தை யும் கொடுத்துவிடும். இவர்கள் தங்களின் கடுமையான உழைப்பில் வந்த பணத்தை, ஏழைகளின் நல்வாழ்க்கைக் காகவும், ஆலயத் திருப்பணிகளுக்காக வும், பொதுத் தொண்டிற்காகவும் அனாதை ஆசிரமத்திற்காகவும் செல வழிப்பார்கள்.

இவர்கள் உடையிலே எளிமையும், ஆனால் சுத்தமும் இருக்கும். தங்களது கடமையிலேயே மிகவும் கவனமாக இருப்பார்கள். இவர்களது செயல்களில் ஒரு கண்ணியம், கட்டுப்பாடும் இருக் கும். உலகத்தை உய்விக்க வந்த இயேசு கிறிஸ்து ஆதிசங்கராச்சாரியார், ரவீந்திர நாத தாகூர் ஆகியோரெல்லாம் இந்த 7 ஆம் எண்ணில் பிறந்தவர்களே!

இவர்களுக்குச் சித்து விளையாட்டுக் கள் எல்லாம் எளிதில் கைகூடும்! இவர்கள் உலகப் பயணம் செய்து, தங்க ளது அனுபவங்களை உலகத்தாருக்கு அழகுடன் எடுத்துரைப்பார்கள். பொருளா தார நிலை 7 ஆம் எண் அன்பர்களுக்குத் திருப்திகரமாக இருக்காது! வேதனை களும், சோதனைகளும் இவர்களைத்

[illegible]

தொடர்ந்து வரும். எந்த ஒரு செயல் தொடங்கினாலும் அதை நிறைவேறு வதற்காகப் பல தடைகளைச் சந்திக்க வேண்டி வரும். கேது பகவான் கொடுக்க ஆரம்பித்தால் அதைவேறு யாரும் (கிரகங்கள்) அழிக்கவோ, தடுக்கவோ முடியாது என்பது சோதிட உண்மை யாகும். எப்படியும் நல்ல வளமான வாழ்க்கையைத் தங்களது வாழ்நாளில் அடைந்து விடுவார்கள்.

7 ஆம் எண்ணின் பலம் குறைந்த அன் பர்கள் பலர் உயர் கல்வி அமைந்திருந் தும், திறமைக்கேற்ற ஊதிம் கிடைப்பது மிகுந்த தடைப்படும். பெரும்பாலான 7 ஆம் எண்காரர்கள் இதனை நினைத்து வேதனையும், வாழ்க்கையில் விரக்தியும் அடைகின்றனர்.

பல இலட்சக்கணக்கான மூலதனத் தைப் போட்டும், செய்தொழிலில் முன் னேற்றத்தைக் காணாத நபர்களின் எண் கள் 7 ஆக இருப்பதைக் காணலம். அதே போன்று இந்த எண்காரர்கள் தொழில் திடீரென தாழ்ந்து மஞ்சள் கடிதம் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கியத்திற் கும் ஆளாகின்றார்கள்.

ஆனால், இந்த அன்பர்கள் சலிக்காமல் மனோ தைரியத்துடன் வாழ்க்கையில் போராடுவார்கள். 3 ஆம் எண்காரர்கள், போன்று இவர்களும் மற்றவர்களுக்காக விட்டுக் கொடுப்பார்கள்.

அண்ணன் சொத்து எடுத்துக் கொண்டாரா, பரவாயில்லை! மனைவி அவமதிக்கிறாளா என் தலைவிதி! என்று இருப்பார்கள்.

உற்றாரும், ஊராரும் மதிப்பதில்லையே என்னை ஒருநாள் மக்களும், உறவினர் களும் பாராட்டுவார்கள் என்ற நம்பிக்கை யும், எதையும் தாங்கிக்கொள்ளும் மனோ பலமும் உண்டு! மனத்தில் கற்பனை வளரும். பிரபஞ்ச சக்தியுடன் உடனடித் தொடர்பும் இவர்களுக்கும்க் கிடைக்கும். தங்களது வாழ்க்கையில் கடினமாக உழைத்துத்தான் முன்னேற வேண்டுமே தவிர அடுத்தவர்கள், உறவினர்கள் உதவுவார்கள் என்று எதிர்பார்க்கக்கூடாது!

ஒன்பது எண்களிலும் 9 ஆம் எண் ணுக்கே முன்கோபம் உண்டு. அதை அடுத்து இந்த 7 ஆம் எண்காரர்களுக்கும் முன்கோபம் அடிக்கடி வரும். இந்தக் குணத்தினாலேயே, இவர்களது நல்ல செயல்களும், குணங்களும் மக்களால் மறக்கப்படுகின்றன!

பொதுவாகத் தங்கள் மனத்தில் உள் ளதை அப்படியே வெளியில் சொல்லி விட மாட்டார்கள். இவர்கள் ஆத்மபலம் மிகுந்தவர்கள். அடுத்தவர்களின் தூண்டு தலை எதிர்பார்க்கமாட்டார்கள்.

### திருமண வாழ்க்கை

இல்லறத் துறவிகள் என்பவர் இவர்கள் தான். இவர்களுக்குத் திருமணம் காலம் கடந்துதான் நடக்கும். குடும்பத்தினர்கள் இவர்களின் திறமையை பாராட்டுவது அரிதாகும். திருமண வாழ்க்கையில் ஏதாவது ஒரு குறை இருந்து கொண்டே இருக்கும். சில பெண்கள் மிகவும் அழகாக இருப்பார்கள். பெரும்பாலோர் சுமாராகத்தான் இருப்பார்கள். தொழில் காரணமாகக் குடும்பத்தைப் பிரிந்து வெளிநாட்டிலும், வெளியூரிலும் இருப் பவர்கள் இவர்கள்தான்.

இவர்கள் 1, 2, 5, 6 ஆகிய எண்களில் பிறந்தவர்களை மணந்து கொண்டால் நல்ல திருமண வாழ்க்கை அமையும். குறிப்பாக 2, 1 ஆகிய திகதிகளில் பிறந்த பெண்களால் மிகவும் இனிய இல்லறம் அமையும்.

8 ஆக திகதி பிறந்தவர்களை மணந்து கொண்டால், இல்வாழ்க்கையே கசந்து விடும். திருமணம் செய்து கொள்ளும் நாட்களில் எண்கள் 1, 2, 6 வருவது சிறந்தது! 9 ஆம் எண் நடுத்தரமானது தான். இல்லற வாழ்வில் மட்டும் ஏனோ தகுந்த வாழ்க்கைத் துணை இவர்களுக்கு அமைவதில்லை. பிரிவு சோகமும் இவர்களைத் தொடர்ந்து வரும்.

### 7 ஆம் திகதி பிறந்தவர்கள்

வெளியூர், வெளிநாடு செல்லும் யோகம் உடையவர்கள். இவர்களுக்கு மனைவியும் வெளிநாடு, அன்னிய சம் பந்தம் அல்லது அடுத்த ஜாதி போன்ற வற்றில் அமைவர். இவர்கள் மிகவும் கண்டிப்பு மிக்கவர்கள். நேர்மையை மிக வும் மதிப்பார்கள். ஆன்மிகத்தில் மிகுந்த விருப்பமுடையவர்கள்.

நல்ல ரசிப்புத் தன்மையும் உடையவர் கள். மற்றவர்களின் கருத்தைக் கேட் பவர்கள். குடும்ப வாழ்க்கையில் சில பிரச்சினைகள் ஏற்படும். மனைவியை ஓரளவு அனுசரித்துச் சென்றால் நல்ல வாழ்க்கை அமையும்.

### 16 ஆம் திகதி பிறந்தவர்கள்

இவர்கள் கலை உள்ளம் நிறைந்தவர் கள். துணிச்சலும் அறிவுத் திறமையும் உண்டு. நன்றாக முன்னுக்கு வந்து விடுவார்கள். ஆனால் திடீரென தேவை யில்லாத பிரச்சினைகளில் சிக்கிக் கொண்டு பொருள்களை இழக்கும் அபா யமும் உண்டு.

எனவே, கவனமாக இருக்க வேண்டும். மனோசக்தி மிகுந்தவர்கள். இவர்களுக்கு குழந்தை பிறப்பது சற்றுத் தாமதமாகும். இவர்கள் சுயநலவாதிகளாக இருப்பார்கள். முறை தவறிய காதல் விவகாரங்களில் ஈடுபடாதிருக்க வேண்டியது மிகவும் அவசியம். திடீர்ப் புகழ் உண்டு.

### 25 ஆம் திகதி பிறந்தவர்கள்

இவர்கள் தெய்விகத் தன்மை நிறைந் தவர்கள். மக்களக்கு வழிகாட்டவே பிறந்தவர்கள். சிறந்த கற்பனைவாதிகள். குடும்ப வாழ்க்கை சரிவர அமையாது. எனவே ஆன்மிகத் தலைவராகவோ, நீதி பதியாகவோ மாறி விடுவார்கள். பேரும் புகழும் அடைவார்கள். இவர்கள் நல்ல திறமைசாலிகள்.

இவர்கள் அரசியலிலும் ஈடுபட்டு எம்.எல்.ஏ, எம்.பி போன்ற பதவிகளை அடைந்து, மக்களுக்கு உண்மையான சேவைகள் செய்வார்கள்.




வழக்கறிஞர்: அந்த ஆளை முட்டாள்னு திட்டினாயா?
சாட்சி: ஆமாங்க!
வழக்கறிஞர் : கிறுக்கன் பைத்தியக் காரன்னு திட்டினியா?
சாட்சி : ஆமாங்க!
வழக்கறிஞர் : கழுதைன்னு திட்டினியா?
சாட்சி : அடடே அந்த சமயத்தில் அது ஞாபகம் வரலீங்க




ஹோட்டல் ஒன்றில் தன் குடும்பத்துடன் அமர்ந்து சாப்பிட்டு முடித்தார் ஒருவர்.

சர்வரை அழைத்து 'என் மகன் சாப்பிட முடியாம நிறைய கறியை மீதி வைத்துவிட்டான். ஒரு பையில் கட்டிக்கொடு. வீட்டிலுள்ள நாய்க்குப் போடணும்' என்றார்.

உடனே மகன் கேட்டான், 'அப்பா நம்ம வீட்டில் ஏதுப்பா நாய் ?'




'என் கண் பார்வை ரொம்ப குறைஞ்சுக் கிட்டு வருது டாக்டர்?'
'நிஜம் தான் நான் டாக்டரில்லை புரக்டர்'




டீ.வி. நிலையத்துக்கு வந்த கடிதம் 'தலைவர் யாராவது காலமானால் அறிவிக் கிறீர்கள் ஏன் தலைவர் ஒருவர் பிறந் தால் அறிவிப்பதில்லை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச ஆங்கில மொழிக்கான திறனாய்வுத் தேர்வு பற்றிய விழிப்புணர்வு உயர்கல்விக்கோர் திறவுகோல்

சென்ற வாரத்தொடர்ச்சி....




முதற்ப் பகுதி அறிமுகப் பகுதியாகும். பரீட்சையாளர் தன்னை அறிணிகப்படுத்திக்கொள்ள வேண்டும். தொடர்ந்து தேர்வாளர் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்வதுடன், 45 நிமிடங்கள் சில பொதுவான கேள்விகளை கேட்பார். இவை உங்கள் (கல்வி, தொழில், பொழுதுபோக்கு போன்ற) தனிப்பட்ட விவரங்கள் தொடர்பானதாக இருக்கும். பரீட்சையாளர் சுருக்கப் பதில்களாக பதிலளிக்கலாம்.

அடுத்து ஏதாவது ஒரு பொது நிகழ்வு தொடர்பான ஒரு தலைப்பு அட்டை கொடுக்கப்படும். தயார்படுத்தலுக்கு 1 நிமிடம் அவகாசம் கொடுக்கப்படும். பின் அத்தலைப்பு தொடர்பில் 2 நிமிடங்கள் பேசவேண்டும். கடைசியாக 45 நிமிடங்கள் ஒரு கலந்துரையாடல் இடம் பெறும்.

பேசுதல் தேர்வின் போது ஒலிப்பதிவு செய்யப்படும். இந்த ஒலிப்பதிவு தேர்வாளரின் கண்காணிப்பிற்காகவும், சில வேளை பரிட்சையாளர் தமக்கு கிடைக்கப்பெற்ற ஒருங்கு கூட்டு மதிப்பெண்ணை எதிர்த்து மீள் மதிப்பீடு செய்கையில் அதனை மறுப்பரிசீலனைச் செய்யவும் எடுத்துக் கொள்ளப்படும்.

நான்கு பிரிவுகளும் மொத்தமாக 2:44 நிமிடங்களில் முடிவடையும். முதல் மூன்று பிரிவுகளான கேட்டல், வாசித்தல், எழுதுதல் போன்ற மூன்று பிரிவுகளும் ஒன்றன் பின் ஒன்றாக தொடர்ந்து இடைவெளி இன்றி நடைப்பெறும்.

பேசுதல் பிரிவு மட்டும் இடைவெளி விட்டு நடத்தப்படும். அநேகமாக குறிபிட்ட அதே நாளிலேயும் நடைபெறலாம். அல்லது ஏழு நாட்களுக்கு முன்பாக அல்லது பின்பாகவும் நடைப்பெறலாம்.

தேர்வு முடிவடைந்து 13 நாட்களின் பின்னர் தேர்வின் பெறுபேறுகளை பரீட்சார்த்திகள் இணையத்தளம், தபால் அல்லது நேரடியாகவோ பெறக்கூடியதாக இருக்கும்.

### ஒருங்கு கூட்டு மதிப்பீடு

இந்தத் தேர்வில் வெற்றி (Pass) தோல்வி (Fail) இல்லை. 1 முதல் 9 வரையான ஒருங்கு கூட்டு மதிப்பெண்களின் அடிப்படையில் ஒருவரின் ஆங்கில மொழிக்கான திறன் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

ஆகக்கூடிய ஒருங்கு கூட்டு மதிப்பெண்ணாக 9 புள்ளிகள் வழங்கப்படுகின்றது. 9 புள்ளிகளைப் பெற்றவர், முழுமையான ஆங்கில மொழி ஆளுமை மிக்கவர் (சிறந்த பயனர்/வல்லுநர்) என்றும், 1 எடுத்தவர் ஒருசில சொற்களை தவிர ஆங்கில மொழியை பயன்படுத்தும் திறன் முற்றிலும் அற்றவர் என்றும் மதிப்பிடப்படுகின்றது. மேலும் அட்டவணையில் பார்க்கவும்.

**Nine Bands of IELTS Examination**

| | |
|---|---|
| Band - 09 | Expert User |
| Band - 08 | Very Good User |
| Band - 07 | Good User |
| Band - 06 | Competent User |
| Band - 05 | Modest User |
| Band - 04 | Limited User |
| Band - 03 | Extremely Limited User |
| Band - 02 | Intermittent User |
| Band - 01 | Non User |
| Band - 00 | Absent / No Original English User |

அபி.தேவகுமார்

ஒருங்கு கூட்டு மதிப்பெண்களின் அடிப்படையில் ஒருவரின் ஆங்கில மொழிக்கானத் திறனை எவ்வாறு மதிப்பீடு செய்யப்படுகின்றது என்பதனையும் விரிவாகப் பார்க்கலாம். (தொடரும்)

## 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன் [24.12.10 முதல் 30.12.10 வரை]

கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)



### * மேஷம்

மேஷ ராசி அன்பர்களுக்கு எதிர்பாராத வகை திடீர் நன்மைகள் அமையும் நிலையுண்டு. எடுக்கும் முயற்சி ஓரளவிற்கு வெற்றி கொடுக்கும். தொழில் நிலையில் அனுகூலமான பலன் அமையும். குடும்பத்தில் குதூகலமான நிலைகள் ஏற்படும். பலன் உண்டு. பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலை உண்டு. கடன் நிலைகளில் சுமூகமான பலாபலன்கள் ஏற்படும் நிலை உண்டு. பெண்களுக்கு மனமகிழ்ச்சி உண்டு. மாணவர்களுக்கு நன்மை உண்டு.



### * இடபம்

இடபராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலன்களே அமையும். தொழில் நிலைகளில் வேலைப் பளு அதிகமாக அமைந்திருக்கும். மன நிலையில் யோசனைகள் சிறு சிறு குழப்பங்கள் ஏற்படும். உடல் நிலையில் திடீர் சுகயீனம் மருத்துவ செலவு அமையும். பண வரவு சற்று சுமாரான மத்திம நிலையிலேயே அமையும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் இருக்கும். பெண்களுக்கு மனசஞ்சலம் இருக்கும். மாணவர்கள் முயற்சி தேவை.



### * மிதுனம்

மிதுன ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலாபலன்கள் அமையும். குடும்ப நிலையில் மகிழ்வான விடயம் ஏற்படும். தொழில் நிலைகளில் எதிர்பார்ப்புகள் நிறைவடையும் பலன் உண்டு. பண வரவுகளில் பாதிப்புகள் ஏற்படாத நிலை அமைந்திருக்கும். உறவினர்கள் மூலம் சிறு சஞ்சலம் ஏற்படும். கடன் நிலைகளில் ஓரளவிற்கு அனுகூலம் அமைந்திருக்கும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்கள் தடுமாற்ற நிலை இருக்கும்.



### * கடகம்

கடகராசி அன்பர்களுக்கு சற்று மந்தமான நிலைகள் இருக்கும். தேவையற்ற வீண் பிரச்சினைகளை சந்திக்கும் நிலை ஏற்படும். தொழில் நிலைகளில் வேலைப்பளு அதிகமாக அமைந்திருக்கும். குடும்ப நிலையில் சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு மறையும். பண வரவு சற்று சுமாரான நிலையிலேயே அமையும் பலனுண்டு. கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் தொடரும் பெண்களுக்கு மனசஞ்சலம் இருக்கும். மாணவர்களுக்கு மந்த நிலை இருக்கும்.



### * சிம்மம்

சிம்மராசி அன்பர்களுக்கு அனுகூலமான பலாபலன்கள் ஏற்படும். தொழில் நிலையில் முன்னேற்றங்கள் சிறப்புகள் ஏற்படும். குடும்பத்தில் குதூகலமான பலன்கள் அமையும் நிலையுண்டு. பண வரவு மிகவும் அனுகூலமான நிலையில் அமையும். எதிர்பார்க்கின்ற விடயங்களில் வெற்றிகளை காண முடியும். கடன் நிலைகளில் சுமூகமான பலாபலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### * கன்னி

கன்னிராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலன்களே அமையும். எடுக்கும் முயற்சிகளில் நிதானம் வேண்டும். தொழில் நிலைகளில் அலைச்சல், வேலைப்பளு அமைந்திருக்கும். உடல் நிலையில் சிறு சிறு சுகயீனம் ஏற்பட்டு மறையும். வாகன விடயங்களில் அனுகூலமான பலன்கள் ஏற்படும். கடன் நிலைகளில் ஓரளவிற்கு அனுகூலமான நிலை இருக்கும். பெண்களுக்கு மத்திம பலன் அமையும். மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### * துலாம்

துலாராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும். தொழில் நிலையில் சற்று அலைச்சல் இருக்கும். சகோதரர் வழியில் சிறு சிறு பிரச்சினைகள் சூழும் பலனுண்டு. பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். கடன் நிலைகளில் இழுபறி நிலைகள் தொடரும் பலனுண்டு. பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்கள் முயற்சி வேண்டும்.



### * விருச்சிகம்

விருட்சிக ராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலாபலன் அமையும் நிலையுண்டு. தொழில் நிலையில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நிலை இருக்கும். பண வரவு திருப்திகரமாக அமையும். குடும்ப நிலையில் நல்ல மகிழ்வும் குதூகலமும் ஏற்படும் பலன் உண்டு. உறவினர்களின் மூலமாக அனுகூல பலன் ஏற்படும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன் ஏற்படும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.



### * தனுசு

தனு ராசி அன்பர்களுக்கு சுமாரான மத்திமமான பலன்களே அமையும். எடுக்கும் முயற்சிகளில் நல்ல வெற்றிகள் ஏற்படும். தொழில் நிலையில் அலைச்சல் இழுபறி நிலை தொடரும். பண வரவு சற்று சுமாரான மத்திம நிலையில் அமையும். குடும்பத்தில் சற்று இழுபறி, தாமத, சஞ்சல நிலை இருக்கும். கடன் நிலைகளில் நிதானமாக செயற்பட வேண்டும். பெண்களுக்கு மன சஞ்சலம் இருக்கும். மாணவர்கள் முயற்சி தேவை.



### * மகரம்

மகரராசி அன்பர்களுக்கு அனுகூலமான பலன்கள் ஏற்படும். எடுக்கும் முயற்சிகளில் ஓரளவு வெற்றிகள் அமையும். எதிர்பாராத வகையில் சில செலவீனங்கள் அமையும் நிலையுண்டு.

குடும்ப நிலையில் அனுகூலமான பலன்கள் ஏற்படும். பண வரவு தேவைகளுக்கு ஏறப அமையும் நிலையுண்டு. கடன் நிலைகள் இழுபறி மந்தநிலை தொடரும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்கள் முயற்சிவேண்டும்.



### * கும்பம்

கும்ப இராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலாபலன் அமையும். தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் பலனுண்டு. பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமையும். குடும்பத்தில் நல்ல அனுகூலமான வெற்றிகள் ஏற்படும். எதிர்பார்க்கும் விடயங்கள் நிறைவு பெறும் நிலை அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலன் அமையும் நிலையுண்டு. பெண்களுக்கு எண்ணம் ஈடேறும். மாணவர்கள் முயற்சி வெற்றி தரும்.



### * மீனம்

மீனராசி அன்பர்களுக்கு மிகவும் அனுகூலமான நிலைகள் அமையும். எடுக்கும் முயற்சிகளில் நிதானம் வேண்டும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான நிலை அமையும். எதிர்பாராத வகை திடீர் பிரயாணங்கள் ஏற்படும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் சற்று முயற்சி எடுக்க வேண்டும். பெண்களுக்கு மத்திம பலன் அமையும். மாணவர்களுக்கு வெற்றி உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கையில் 'நாக மரபில்' இனம், நாடு, அரசு

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அதிலும் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்தற்கான ஆதாரங்கள் அண்மைக் காலங்களில் திருகோணமலை மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பாளி வரலாற்று ஏடுகளில் இலங்கையின் புராதன துறைமுகங்களின் வரலாறு கூறப்பட்டிருந்தாலும் அவற்றில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்த துறைமுகநகரங்களே 'பட்டன' என்ற விகுதியோடு அழைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இதற்கு ஜம்புக்கோலபட்டன (யாழ்ப்பாணம்) (Ibid : iii. 24, Culavamsa xli: 79, xlviii.5. lxxi.18)>, கோணகாமகபட்டன (திருகோணமலை மாவட்டம்) (Ibid : iii. 24, Culavamsa xli: 79, xlviii.5. lxxi.18)> மஹறபட்டன (மன்னார் மாவட்டம்) (இந்திரபாலா 2006:180) ஆகிய துறைமுக நகரங்களைக் குறிப்பிடலாம்., சங்க நூல்களில் பட்டினம் என்பது பொதுவாக கடற்கரைசார்ந்த இடங்களுக்குரிய பெயராகக் குறிப்பிடப்படுகிறது. தென் தமிழகத்தில் இருந்து ஆந்திரா வரை கடற்கரை சார்ந்த சமூகங்கள் 'பட்டினவர்' என அழைக்கும் மரபு காணப்படுகிறது (Veluppillai 2002 :149). இலங்கைத் தமிழரிடம் நகரங்களில் வசிப்போரை பட்டணத்தார் என அழைக்கும் மரபு இன்றும் காணப்படுகிறது. பேராசிரியர் இந்திரபாலா இலங்கையில் ஏனைய துறைகளுக்கு பட்டினம் என்ற விகுதி பயன்படுத்தப்படாது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்த துறைகளுக்கு மட்டும் அப்பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளமை ஆதியிலும் இங்கு தமிழ்மொழி பேசுவோர் அல்லது திராவிட மொழிபேசுவோர் வாழ்ந்த இடங்கள் என்பதற்கான மறைமுக ஆதாரங்கள் எனக் குறிப்பிடுகிறார் (இந்திரபாலா 2006: 180).

மஹாஸேனன் ஆட்சிக் காலத்தில் கிழக்கிலங்கையில் இருந்த மூன்று சிவ தேவாலயங்கள் அழிக்கப்பட்டு அவ்விடங்களில் பௌத்த விஹாரைகள் கட்டப்பட்ட செய்தி மஹாவம்ஸத்தில் காணப்படுகிறது. வரலாற்று அறிஞர்கள் இவ்வரலாற்றுக் குறிப்பை பிற வரலாற்று ஆவணங்களுடன் தொடர்புபடுத்தி இவ்வாலயங்கள் கோகர்ணம்

## மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்படும் தொல்லியல், இலக்கியச் சான்றுகள்

(திருகோணமலை), ஏராவில், பேரதீவு ஆகிய இடங்களில் அமைந்திருந்ததென அடையாளப்படுத்துகின்றனர் (பத்மநாதன் 2005: 39-40). பௌத்த மதத்தை முதன்மைப்படுத்திக் கூறும் பாளி இலக்கியங்கள் ஏனைய மதங்களைத் தவறான மதங்கள் எனச் சுட்டிக் காட்டி அவற்றைத் தமிழருக்குரிய மதமாக மறைமுகமாகக் குறிப்பிடுகின்றன. இதன் மூலம் இங்கிருந்த சிவாலயங்கள் கிழக்கிலங்கையில் செறிவான தமிழர் குடியிருக்புக்கள் இருந்தன என்ற தகவல்கலைப் பெற உதவுகிறது. ஏழாம் நூற்றாண்டில் பத்தியியக்கத்தை தலைமையேற்று நடாத்திய நாயன்மார் பாடல்களில் தமிழகத்திற்கு அடுத்த நிலையில் கிழக்கிலங்கையில் இருந்த கோணேஸ்வரத்தையும், வட இலங்கையில் இருந்த திருக்கேதீஸ்வரத்தையுமே போற்றிப் பாடியுள்ளனர். பேராசிரியர் வேலுப்பிள்ளை சம்பந்தர் தேவாரத்தில் திருகோணமலை பற்றிவரும் 'குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும்' என்ற சொற்தொடர் அங்கு தமிழர்கள் செறிந்து வாழ்ந்தமைக்கு சான்றாக அமைகின்றதெனக் குறிப்பிடுகிறார் (வேலுப்பிள்ளை 1986). தமிழகத்தில் பல்லவர் காலத்திலிருந்து ஆட்சி புரிந்த வம்சங்களின் செல்வாக்கு கிழக்கிலங்கையில் அதிலும் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் அதிக அளவில் இருந்ததற்கு தொல்லியல், இலக்கிய ஆதாரங்கள் காணப்படுவதால் இங்கு தமிழர்கள் தொடர்ந்தும் செல்வாக்குடைய இனமாக வாழ்ந்து வந்தனர். இதனால் வடஇலங்கையைப் போல் இங்கும் மொழியால் நாகரும் தமிழராக இருந்திருப்பினர் எனக் கூறலாம்.

7

ஆதி இலங்கையில் நாகர் சிற்றரசர்களாகவும், அநுராதபுர ஆட்சியாளராகவும் இருந்தற்குப் பாளி இலக்கியங்களிலும், பிராமிச் சாசனங்களிலும் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இத்தகைய ஆட்சியாளர்கள் நாகதீபத்திலும் இருந்ததாக அவை மேலும் குறிப்பிடுகின்றன. ஆயினும் இவர்கள் மொழியால் அல்லது இனத்தால் தமிழர்களாக இருந்ததற்கு நேரடியான ஆதாரங்கள் எவையும் அவற்றில் காணப்படவில்லை. ஆயினும் இவ்வாதாரங்களையும், அண்மைக்காலத் தொல்லியற் கண்டுபிடிப்புக்களையும் ஒன்றுசேர ஆழமாக ஆராயும் போது தமிழ் மொழி பேசிய நாகர்கள் நாகதீபத்தில் மட்டுமன்றி அதற்கு வெளியே தென்னிலங்கையிலும், அநுராதபுரத்திலும் ஆட்சியாளராக இருந்திருக்கலாம் என்ற உண்மை தெரியவருகிறது. அண்மையில் தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற இடத்தில் பிராமி எழுத்துப் பொறித்த நூற்றுக்கணக்கான நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (Bopea-rachchi 1999). இவற்றின் காலம் சங்ககால நாணயங்களின் சமகாலம் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது (மகாதேவன 2000 : 116-120.) இந்நாணயங்களை ஆய்வு செய்த பேராசிரியர் போபே ஆராய்ச்சி சில நாணயங்களின் தமிழ்மொழிக்கே சிறப்பான தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் இருக்கின்றன எனக் குறிப்பிட்டுள்ளார் (Ibid : 56-60). இருப்பினும் நாணயங்களில் உள்ள பெயர்களை பிராகிருத மொழி சார்ந்ததாகவே அவர் வாசித்துள்ளார். பின்னர் இந்நாணயங்களை மீள் வாசிப்பிற்கு உட்படுத்திய போது அவற்றில் உள்ள பெயர்கள் சிலவற்றை உதிரன், கபதிகஜபன், மஹாசாத்தன், தஸபிடன் என வாசிக்க முடிந்தது (புஷ்பரட்ணம் 1999 : 55 - 70). இந்நாணயங்கள் தமிழ்மயமாக்கப்பட்ட பிராகிருதப் பெயர்களாகும். இவையனைத்திலும் தமிழ் மொழிக்கே சிறப்பாகவுள்ள றன்னகர மெய்யெழுத்துக்கள் காணப்படுகின்றன. அத்துடன், இரண்டு பெயர்களிலே உயர்திணை ஆண்பால் ஒருமையினைக் குறிக்கும் 'அன்' என்னும் விகுதி தனிச் சொல்லாக எழுதப்பட்டுள்ளமை மிக முக்கிய அம்சமாகக் காணப்படுகிறது.

தென்னாசியாவில் நாணயங்களை வெளியிடுவதில் பண்டைய காலத்தில் அரச வம்சங்களைத் தவிர வணிகர்களுக்கும், சமூகத்தில் செல்வாக்குப் பெற்ற தலைவர்களுக்கும் உரிமையிருந்ததாகக் கூறப்படுகிறது. ஆயினும் இதுவரை கிடைத்த பெரும்பாலான நாணயங்கள் குறுநில அரசர்களாலும், அரச வம்சங்களாலும் வெளியிடப்பட்டதவே உள்ளன. இந்நிலையில் அக்குறுகொடையில் கிடைத்த இரு நாணயங்கள் இங்கு ஆட்சியில் இருந்த நாகச் சிற்றரசர்களால் வெளியிடப்பட்டவை என்பதை உறுதி செய்வதாக உள்ளன. முதலாவது நாணயத்தில் வரும் பெயரை 'திஸபுரசடணாகராசன்' அல்லது 'திஸபுரதடணாகராசன்' என வாசிக்க முடிந்தது (புஷ்பரட்ணம் 1999 : 55-70). பேராசிரியர் பத்மநாதன் இப்பெயரை 'திஸபுரதட்டணாகராசன்' என வாசிப்பதே பொருத்தமெனக் கருதுகிறார் (பத்மநாதன் 2006::36). இதில் வரும் 'அரசன்' என்ற சொல் பிராகிருதத்தில் வரும் 'ராஜா' என்ற சொல்லின் தமிழ் வடிவமாகும்.

(தொடரும்)

பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வடிவாக உம்மைப் பார்க்க ஓர் வாழ்விடம் இருக்குதப்பா

அடிகொடி பார்த்து எம்மை அந்திய காலந்தன்னில்
வடிவாகப் பார்ப்பாரென்று வரனுடன், பெண்ணெடுத்து
தடபுடலாக மணந் தவறாது செய்து வைத்த
மடத்தடித் தம்பர் நல்ல மாண்புடன் வாழ்ந்து வந்தார்.

வெட்டுக் கொத்தாலன்று கட்டி முடித்த வீட்டை
கட்டுப் பாடாய் வளர்த்த கடைக்குட்டி வாசுகிக்கு
பின்னடிக் கெம்பைப் பார்ப்பா ளென்றெண்ணியவர்
நன் மனத்தோடு நல்கி நானிலம் போற்ற வாழ்ந்தார்.

அண்ணன் மார் அயல் நாட்டில் தங்கையைத்
தனியே விடாது
தலைகளை மாற்றியன்று தம்மோடிணைத்துக்
கொண்டார்
தம்பருந் தண்ணி வெந்நீர் தம்பாட்டி வைத்துக்
கொண்டு
தெம்பிருக்கும் வரை திறமாகத் தான் வாழ்ந்தார்.

மூத்தமகன் எஞ்சினியர் அடுத்தவனோ டாக்டர்
இளைய மகளும் இங்கிலாந்தில் எக்கவுண்டனோடு
பேரரும் பெரும் பதவி பெற்றுள்ளார் களங்கே
பாரவர் போற்ற இதைச் சீடியில் காட்டுகின்றார்.

படுக்கையில் கிடந்தார் தம்பர் பறந்தது செய்தியங்கே
[illegible] இங்கு வந்து

அம்மப்பா அப்பப்பா என்று அழகார வார்த்தை சொல்லி
ஆனாலும் எம்மால் உம்மைப் பார்த்திட
முடியாதென்றார்.

அம்மா இருந்தாலோ...... அதைச் சொல்லி
வேலையில்லை
அடிகொடியார் பார்ப்பாரென்ற அத்தனையும்
பொய்யப்பா
வடிவாக உம்மைப் பார்க்க ஓர் வாழ்விடம்
இருக்குதப்பா
கடிதென ஏகிவிட்டார் சிவபூமியிங் சேர்த்துவிட்டு

கவிமணி அன்னைதாஸன்
ஊரெழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் இடம்பெற்ற நிகழ்வுகளின் தொகுப்பு




வன்னி மாவட்ட சிறார்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவுவதற்காக பங்குத்தந்தை, ஆனந்தகுமாரின் ஆலோசனைக்கு அமைய மாதகல் தரிசனம் இளைஞர் ஒன்றியத்தினரால் நடத்தப்பட்டுவரும் பாடசாலைப் பொருட்கள் மலிவு விற்பனையை சட்டத்தரணி ஏ.எஸ்.அற்புதராஜ் ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம்.



மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்வின்போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் உரையாற்றுவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்:- மானிப்பாய் நிருபர்)



மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலய வாணி விழாவின்போது பட்டிமன்றத்தில் மாணவிகளும் நடுவராக பாடசாலை ஆசிரியையும் பங்குபற்றியதை படத்தில் காணலாம். (படம்:- சாவகச்சேரிநிருபர்)



வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் பயிலும் தரம் 1தொடக்கம் 3 வரையான மாணவர்களுக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதாசேவாச் சிரமத்தினால் வழங்கப்பட்ட பசுப்பாலை மாணவர்கள் அருந்துவதையும் சேவாச்சிரமப் பொறுப்பாளர் சுவாமி சித்தரூபானந்தா நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:- வடமராட்சி நிருபர்)



சிறுப்பிட்டி அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் அச்சுவேலி மக்கள் வங்கி கிளையின் சிறுவர் கணக்கு அலகு திறப்பு விழாவில் முகாமையாளர் இ.யோகராசா மங்கல விளக்கேற்றுவதையும் வங்கியின் ஆராய்ச்சி பிரிவு பிரதிப்பணிப்பாளர் எஸ்.புஸ்பகுமார, யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன், அதிபர் என்.மகேந்திரராசா, உதவி அதிபர் எஸ்.சரவணபவானந்தன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:- அச்சுவேலி நிருபர்)





ஜனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்ட தேசமானி விருது பெற்ற சமூக சேவகரும் சிறப்பு பேச்சாளருமான ஆசிரியர் இரா.செல்வவடிவேல் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். யாழ்ப்பாண சைவபரிபாலனசபையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டவர்களை படத்தில் காணலாம். (படம்:- வட்டுக்கோட்டை நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
...துறைப் படிப்பகம்
...சபை, யாழ்ப்பாணம்,

# கிரிக்கெட்டின் இமயமான சச்சின்



சர்வதேச டெஸ்ட் அரங்கில் நெருங்க முடியாத சாதனை ஒன்றை பதிவு செய்துள்ளார் இந்தியாவின் மாஸ்டர் பட்ஸ்மன் சச்சின் டெண்டுல்கர். இந்தியர்களால் முகம் கொடுக்கமுடியாத தென்னாபிரிக்க மண்ணில் தனது 50 ஆவது சதத்தினை பூர்த்திசெய்துள்ள சச்சினின் சாதனை குறித்து இன்று உலகமே பேசிக்கொண்டிருக்கின்றது.

முன்னர் இந்தியாவில் நடந்த நியூஸிலாந்துடனான டெஸ்ட் போட்டியில் சச்சின் தன் சொந்த மண்ணில் இந்தச் சாதனையை படைப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அது பயனற்றுப்போனது. இந்திய ரசிகர்களுக்கும் சச்சினின் சாதனையை எதிர்பார்த்திருந்த ஏனையவர்களுக்கும் பெரும் ஏமாற்றத்தினை அது ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில், தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியின் இரண்டாவது இனிங்ஸில் 3 ஆவது வீரராக களமிறங்கினார் சச்சின் டெண்டுல்கர். முதல் இனிங்ஸில் அணியின் பரிதாப நிலையை உணர்ந்தவராக பொறுப்புடன் ஆடிய இவர் தேநீர் இடைவேளையின் பின் 197 ஆவது பந்தில் தனது சதத்தினைப் பூர்த்திசெய்தார்.

37 வயதுடைய சச்சின் கிரிக்கெட்டில் அசைக்கமுடியாத ஒரு விருட்சமாக வளர்ந்துள்ளார். 133 ஆண்டுகளையுடைய டெஸ்ட் வரலாற்றில் 175 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள சச்சின் சதங்களில் அரைச்சதத்தினை எட்டிய முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

1990 ஆம் ஆண்டு டெஸ்ட் அரங்கில் தனது முதலாவது சத்ததினைப் பதிவுசெய்த சச்சினின் சாதனைப் பாதைகள் வியக்கத்தக்கவையாகவே அமைந்துள்ளன.

★டெஸ்ட் அரங்கில் அதிக 150 ஓட்டங்களைப் பெற்ற வீரர் என்ற சாதனை இவரையே சாரும்.

★ 6 இரட்டைச் சதங்களை விளாசியுள்ளார்.

★ இவரது 50 சதங்களில் 15 தடவைகள் ஆட்டமிழக்காது களத்தில் இருந்துள்ளார்.

★ இந்த ஆண்டில் 7 சதங்களை குவித்துள்ள இவர் 1,500 ஓட்டங்களுக்கு மேல் பெற்றுள்ளார்.

இவ்வாறு இவரது ஒவ்வொரு நகர்வும் சாதனைகளை நோக்கியதாகவே அமைந்திவிடுகிறது.

தற்போது ஐ.சி.சி.யின் டெஸ்ட் தரப்படுத்தலில் 880 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்திலிருக்கும் சச்சின் மேலும் 2 புள்ளிகளைப் பெறும்வேளையில் தரப்படுத்தலின் முதலிடத்தையும் எட்டவுள்ளார். தரப்படுத்தலில் முதலிடத்தில் இலங்கையின் குமார் சங்கக்கார 882 புள்ளிகளுடன் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, ஒருநாள் போட்டியில் 46 சதங்களை அடித்துள்ள இவர் விரைவில் இதிலும் 50-ஆவது சதத்தை அடித்து கிரிக்கெட் வரலாற்றில் புதிய மைல்கல்லை எட்டுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சச்சின் டெண்டுல்கர் என்ற கிரிக்கெட்டின் இமயம் ஓய்வுபெறும் சர்ந்தப்பத்தில் அவரால் எட்டப்பட்ட இலக்குகளையும் சாதனைகளையும் முறியடிப்பதற்கு எவரும் பிறந்துவருவாரா என்பதை கணிப்பிடுவதற்குகூட சந்தேகமாக அமைந்து விட்டது என்பதே உண்மையாகும். இன்றைய கிரிக்கெட் உலகில் ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற முதல் வீரராக சச்சின் திகழ்கின்றார். தென்னாபிரிக்க தொடரிலேயே டெஸ்ட் துடுப்பாட்ட தரவரிசைப் பட்டியலிலும் முதலிடத்தைப் பெற்று அசத்தல் சாதனை படைப்பார் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

**1990 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக முதல் சதம் அடித்த சச்சின் 2010 இல் தென்னாபிரிக்காவுக்கு எதிராக 50 ஆவது சதத்தினை பெற்றுள்ளார்.**

**50 சதங்கள் வந்த பாதை.......**

| ஆண்டு | சதம் | எதிர் அணி | இடம் |
|---|---|---|---|
| 1993 | 5 ஆவது சதம் | இங்கிலாந்து | சென்னை |
| 1996 | 10 ஆவது சதம் | இங்கிலாந்து | நாட்டிங்ஹாம் |
| 1998 | 15 ஆவது சதம் | அவுஸ்திரேலியா | சென்னை |
| 1999 | 20 ஆவது சதம் | நியூஸிலாந்து | மொஹாலி |
| 2001 | 25 ஆவது சதம் | அவுஸ்திரேலியா | சென்னை |
| 2002 | 30 ஆவது சதம் | இங்கிலாந்து | லீட்ஸ் |
| 2005 | 35 ஆவது சதம் | இலங்கை | டில்லி |
| 2008 | 40 ஆவது சதம் | அவுஸ்திரேலியா | நாக்பூர் |
| 2010 | 45 ஆவது சதம் | பங்களாதேஷ் | மேப்பூர் |
| 2010 | 50 ஆவது சதம் | தென்னாபிரிக்கா | செஞ்சூரியன் |

# எதிர்பார்ப்புக்கு மத்தியில் 4 ஆவது போட்டி

சொந்த மண்ணில் ஆஷஸை பறிகொடுப்பதா அல்லது கிண்ணத்தை வெற்றி கொள்வதா என்ற கேள்விக்கு தொடரின் மூன்றாவது போட்டியில் பதில் காணும் வகையில் அதிர்ச்சி அளித்துள்ளது அவுஸ்திரேலியா.

இங்கிலாந்து- அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான பெரும் போர் என வர்ணிக்கப்படுகின்ற ஆஷஸ் (சாம்பர் கிண்ணம்) டெஸ்ட் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகின்றது. இம்முறை இங்கிலாந்திடமிருந்து ஆஷஸ்கிண்ணத்தினை பறிக்காமல் இங்கிலாந்தை திருப்பி அனுப்பப் போவதில்லை என்ற உறுதியுடன் களமிறங்கிய அவுஸ்திரேலியாவின் ஆட்டம் ஆரம்பப் போட்டிகளில் ஆட்டம் கண்டது.

இந்நிலையில் தனது கனவு கலைந்திடுமோ என்ற ஏக்கத்துடன் பரிதவித்து நின்ற நிலையில் 3 ஆவது போட்டி அவ்வணிக்கு நம்பிக்கை அளித்துள்ளது.

டெஸ்ட் மற்றும் ஒரு நாள் கிரிக்கெட் தரவரிசையில் அசைக்க முடியாத நிலையிலிருந்து வந்த அவுஸ்திரேலிய அணி அண்மைக்காலமாக சந்தித்து வந்த தொடர் தோல்விகள் அந்த அணி மீண்டும் 1980 களில் இருந்த நிலைக்கு சென்றுவிடுமோ என்ற அச்சத்தினை அவுஸ்திரேலியர்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியா தற்போது பரிதாபகரமான நிலைக்கு உள்ளாகியதுடன் அனைவரது விமர்சனங்களுக்கும் கேள்விகளுக்கு இலக்காகியிருந்தது. இந்நிலையிலேயே விமர்சனங்களுக்கு விடைகொடுக்கும் வகையில் 3 ஆவது போட்டியில் பதில் அளித்துள்ளது.

இங்கிலாந்தின் போக்கினை குழப்பினாலே தொடரினைக் கைப்பற்ற முடியும் என்ற வகையில் அவுஸ்திரேலியா இப்போட்டியில் செயற்பட்டுள்ளது. அந்த அணியின் வெற்றிக்கான உறுதிப்பாட்டினை அளித்துள்ளது. முதல் இரண்டு போட்டிகளிலும் தடுமாறிய பந்துவீச்சாளர்கள் இந்தப் போட்டியில் விஸ்வரூபம் கொண்டது அணியின் வெற்றியையும் அடுத்த போட்டி மீதான நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

இதன் மூலம் 1-1 என்ற சமநிலையிலிருக்கும் இத்தொடரின் அடுத்த போட்டி சூடுபிடித்துள்ளது. நாளை மறுதினம் மெல்போர்னில் ஆரம்பமாகவுள்ள தொடரின் நான்காவது போட்டி பலத்த எதிர்பார்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. எழுச்சி கண்டுள்ள அவுஸ்திரேலியா இப்போட்டியிலும் தன் திறமையை நிரூபிக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதேவேளை, புதிய வியூகங்களுடன் இங்கிலாந்து அவுஸ்திரேலியாவுக்கு முகங்கொடுக்க இருப்பதும் மறுப்பதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday December 24, 2010